உ

சிவமயம்.

பஞ்சபதமகாவாக்கியம்.

சிதம்பரம்,

தௌடசுவாமிகளால்

தமிழில் மொழி பெயர்க்கப் பட்டது.

இஃது,

பெங்களூர்,

ஆ - நமச்சிவாயமுதலியா

பிழையறப்பரிசோதித்துத்

தி - ஜெகநாதமுதலியாரவர்களால்

தஞ்சாவூர்,

க்ருஷ்ணவிஜய செட்டியா

ரவர்களது,

இந்துவித்தியாநிலைய அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1866.

உ

சிவமயம்.

பஞ்சபதமகாவாக்கியம்.

குருஸ்துதி - வெண்பா.

நிற்குணனுய் நித்தியனுய் நின்மலனுய் நிச்சலனுய்.....
சற்குருவே யானசவு பாக்கியனு - மற்புதனை..........*
வாக்குத்துதிக்க மனநினைக்க வெல்சிரத்தி ....*
லாக்கவவன் பொற்பதமே யாம் ....*

நூல்வரலாறு.

ஸ்ரீ கயிலாசபதியாகிய தக்ஷிணமூர்த்தியி னனுக்கிரகம்பெற்றுவிளங்கிய சனற்குமாரரிஷி அவர்சிஷ்ர் அத்திரிமகாரிஷி அவர்சிஷ்ர் அடிசாய்கையில்லார் அவர்சிஷ்ர் சுவாயம்புசித்தர் இவர்சனைல்வரும் ஸ்ரீகயிலாயத்திலுங் காசியிலுஞ் சஞ்சரித்துக்கொண்டிருக்கிறகாலத்தில் சாந்தபட்டணத்தி லாரியவமிசத்திற்பிறந்த ஆரியனென்பவர் தபோசித்தராய் வாணிபத்துறையிலிருந்து அவிடத்திற்பிரமஞானசித்தராயிருக்கிற சில மகாத்துமாக்களுடன்கூடி வேதாந்த விசாரப்பண்ணிவருகிறநாளில் ஒருநாள் அவ்வாரியர்எழுந்துஅவர்களுக்குப்பூசை நமஸ்காராதி சர்வோபசாரமுஞ்செய்து அஞ்சலியஸ்தராய் நின்று- ஓய் மகாத்துமாக்களே நீங்கள் வஸ்துவை விசாரஞானத்தினலறியும் வழிமாத்திரந்திருவுளம்பற்றியருளினீர்கள் இது சிரவணமனனமாகியபரோட்சமானவபரஞானமல்லவி நிஷ்டாபூர்வகமாயறிந் தனுபவிக்கின்றசுவானுபவமாகிய அபரோட்சமான பரஞானமல்லவே அந்தச் சுவானுபூதிநிலைமை அடியேனுக்குச்சித்திக்கும்படி கிருபைகூர்ந்தருளவேண்டுமென்றுபலவாறுகத்துதித்துவிண்ணப்பஞ்செய்தருளினர்.

அதுகேட்ட மகாத்துமாக்கள் அவரைக் கிருபையாகப்பார்த்து ஓய்ஆரியனே அவாங்மனகோசரமாகிய சுகசமாதிநிஷ்டானுபவமுணர்ந்தமகான்கள் கிடைப்பதுந்துர்லபம் அதற்குரிய சாதன சதுஷ்டயசம்பன்னரானவதிகாரிகள் கிடைப்பதுந்துர்லபமென்று சொல்லியருளினர்கள் - அந்தச்சொல்லைக்கேட்டமாத்திரத்தில் ஆரியர்மிகவும் நடுக்குற்று நமக்கு இப்படிப்பட்ட நிலைமை யெப்படிகிடைக்கப்போ

கிறதென்று வியாகூலமடைந்து நாம் இந்தநிச்சயத்தை எந்தவகையி லாவதடையவேண்டுமென்கிற வைராக்கியத்தைமேற்கொண்டு தா மிருக்கும் வாணிபத்துறைக்குத் தமதுபுத்திரர்களைவைத்துவிட்டுக்கங் காநதிசூழ்ந்த காசிபட்டணமேபோய் விசுவநாதருடைய ஆலயத்திற் புகுந்து பலமுறைவணங்கிநின்று அப்பால் மகாராஜராஜபரமேஸ்வ ரியாகிய விசாலாட்சியம்மையாரையுமாசித்து அந்தமகாதேவிக்குத்தி ரிசந்திகாலமும் சுகந்தாதிபுஷ்பமாலிகை தூபதீபநைவேதன முதலி ய சர்வோபசாரங்களும் வழுவாதுநடத்திக்கொண்டுதினந்தோறும்பூ சைமுடிந்தபின் பூமியைச்சதுரமாய்மெழுகி அதிலிருந்து மாமுதலி யவாகாரங்களையுண்டு மூன்றுவருடபரியந்தம் அல்லும்பகலும் அஃ தேசிந்தனையாய் மகா வைராக்கியத்துடன் அந்தச்சந்நிதானத்தில்வசி த்திருந்தார்.

இப்படியிருக்க ஒருநாள் மகாதேவியார்திருவுளமிரங்கி அப்பா ஆரியா நீயிருக்குமிடத்திற்குப்போனவிடத்திலுனக்குவேண்டியவ ரங்கிருபைசெய்கிறேனென்று அசரீரியாய்க் கட்டளையிட்டருள அ தைக்கேட்டவாரியர் வியாகூலநீங்கி மனமகிட்சியடைந்து மகாபாக் கியம்பாக்கியமென்றெழுந்து பலமுறைவணங்கிப் பிரதட்சண நமஸ் காரஞ்செய்து விசாலாட்சித்தாயாரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு விசுவநாதர் சந்நிதியையும்வணங்கிக்கொண்டு வெளியே புறப்பட்டுத் தமதுவாசஸ்தலத்தைநோக்கி நடந்துவருமார்க்கத்தில் ஒருசோலையு ந்தடாகமுங்கண்டு மகாசந்தோஷித்துடன் அந்தச்சோலையிலிறங்கி ஆ யாசநீங்கி அனுயாசமாய்சுயம்பாகஞ்செய்துவைத்து அனுஷ்டான திக்கிரியைகளைமுடித்துக்கொண்டு தாம்அமுதுகொள்ளவேண்டி அ திதிபிட்சைக்கு அமுதெடுத்துவைக்குந்தருணத்தில் மகா தபோதன ராகிய ஒருவிருத்தர் அவிடத்திற்கெழுந்தருளினர்.

அங்ஙனமெழுந்தருளிய மகாத்துமாவை ஆரியர்கண்டு வணங்கி தேவரீரிந்தவமுதைக்கொள்ளுமென்று பிட்சையை யவர்கையிற்கொ டுக்க அவர் பிட்சையைவாங்கிக்கொண்டு தமதுகையிலிருக்குந் திருமு றையை ஆரியர்கையிற்கொடுத்துவிட்டு அமுதுகொண்டருளி வருகி றேனென்று தடாகக்கரையேபோய் மறைந்தருளினர்.

அப்பால் ஆரியர் மகாசந்தோஷிகரமாய் போஜனஞ்செய்துமி ன்பு தடாகக்கரையில் அதிதியைக்காணுமையால் எங்குந்தேடித்திரும்

யிவந்து அந்தத்திருமுறையை அவிழ்த்துப்பார்த்தருளினார் அதுமகா வாக்கிய சம்பிரதாயமாயிருந்தது அதைக்கண்டு ஆரியர் மகா ஆனந்தத்துடன் அதைப்பிராணாதாரமாய்க்கைப்பற்றிக்கொண்டு தமது வாசஸ்தலத்திற்கு வந்துசேர்ந்து சார்வதா அந்தத்திருமுறையைச் சிந்தித்துக்கொண்டிருந்தார்.

அப்படியிருக்கச் சிலநாள்சென்றபின்பு இந்தத் திருமுறையிற் சொல்லுகிறநிஷ்டானுபூதி நமக்கனுபவமாகும்படி சந்தேக விபரீதமின்றிப்போதிக்கவல்ல ஆசாரியனையறிந்து சரணாகதியடையவேண்டுமென்கிறதாகத்துடன் புறப்பட்டுச் சற்குருவைத்தேடி முன்போலவே காசிக்குப்போய் விசாலாட்சியம்மையார்சந்நிதானத்திற் சிலநாள்வசித்திருந்தார், அப்படியிருக்க அவர்ஒருநாள் மத்தியானவேளையில் ஸ்நானஞ்செய்யும்படி மணிகர்ணிகைக்கரைக்குவந்து அங்கேமுன் திருமுறைகொடுத்த மகாத்துமா வெழுந்தருளியிருக்க அவரைக்கண்டுவணங்கி ஓய்சுவாமீ, தேவரீரித்தனைநாளா யெங்கே மறைந்தருளியிருந்தீர் இப்போது தேவரீரைக்கண்டவளவில் அடியேன் கவலையெல்லாம் விமோசனமாயிற்றென்று பலவாறாக ஸ்தவுத்தியஞ் செய்தருளினார் அதைக்கேட்டமகாத்துமாவும் அப்பா நாம்நெடுநாளாய் இந்த ஸ்தலத்தில்தான் குடும்பவாசமாயிருக்கிறோம் நமது தேவியும் உன்னை மகாதபோசித்தனென்று பலகாலுஞ் சந்தோஷமாகச் சொல்லிவருவாள் நாமும் அப்படியே யுன்னைக்குறித்துப் பலகாலமுஞ் சந்தோஷிப்படுவோம் நாம்முன்பு உன்கையிற்கொடுத்த திருமுறையெங்கே யென்று கேட்டருள.

அதைக்கேட்டவாரியர் ஓய் சுவாமி கிருபாநிதி தேவரீரை உடனே யெங்குந்தேடிக்காணாமல் மயங்கிப் பிற்பாடு என் வாசஸ்தலம் போய்ச்சேர்ந்து சிலகாலம் இந்தத்திருமுறையைச்சிந்தித்துப்பார்த்து அதன்பொருளையுணராமல் அதைக் கரதலாமலகம்போலுபதேசிக்கவல்ல வாசிரியரெங்கே கிடைக்கப்போகிறாரென்று எங்குந்தேடிக் காணாமல் இந்த ஸ்தலத்திற்கிடைப்பாரென்னும் உறுதியுடன் சிலகாலமாயிருக்கும்போது இந்தநாள் தேவரீரை இவ்விடத்திற்கண்டேன் ஆதலால் தேவரீரே என்கோரிக்கையைநிறைவேற்றியிரட்சிக்கவேண்டுமென்று மகாபயபத்திவிசுவாசத்துடன் அனேகநமஸ்காரஞ்செய்து ஓய் கருணாநிதி ஞானநேத்திரத்தாற் றெரிசிக்கத்தக்கதேவரீரை ஊனநேத்

திரத்தாற் றெரிசித்தேனென்று பலவாறாகக்கொண்டாடி என்னைச் சென னமரணசாகரத்திலழுந்தாமல் பரிபூரணகடாட்சம் வைத்தருளவே ண்டுமென்று அஞ்சலியஸ்தராய் விண்ணப்பஞ்செய்துநின்றார்.

அதைக்கண்ட ஸ்ரீ விசுவேசராகியமகாத்துமாவும் நீபயப்படாதேயென்று அபயாஸ்தங்கொடுத்தருளி அப்பாநீ முத்திமண்டபத்திற்குப்போய் அவிடத்தில் திகம்பரராய் விதேககைவல்லியமுத்தராய் நிஷ்டானுபவகேவல அந்தர்முகவிலாசராயிருக்கின்ற சுவாயம்புரிஷியைக்கண்டு அவரைச்சரணமடைந்தால் அவர்உனக்கு ஸ்வரூபஜென்னிய ஞானசிற்சமாதிசாட்சாத்கார வுண்மையை அனுக்கிரகிப்பாரென்று திருவாய்மலர்ந்தருள அதுகேட்டவாரியர் சந்தோஷித்தாராய் சுவாமீ இந்தப்பாதகன்பொருட்டாய்முத்திமண்டபத்திலெழுந்தருளியிருக்கிற மகாரிஷிசுவாமிகள்திருவுளம்பற்றியருளுமோ அருளாதோ அதற்குத்தேவரீருத்தரவானால் அனுக்கிரகித்தருளுமென்று மகாவிநயத்துடன் விண்ணப்பஞ்செய்ய அதற்குமகாத்மாவும் அப்பா நாம் அப்படியேஅவருக்கு உன்தீவிரதரபக்குவத்தைத்தெறிவித்துனக்கனுக்கிரகஞ்செய்யும்படி யுத்தரவுசெய்கிறோம் அவர் அப்படியே யுனக்கனுக்கிரகஞ்செய்வார் பிற்பாடு நாம் உன்கையிற்கொடுத்திருக்கிற திருமுறையைப்புதனமாய் நீயேவைத்துக்கொண்டு உன்னைப்போன்ற பக்குவர்களுக்கெல்லம் நீயனுக்கிரகஞ்செய் அபக்குவர்களுக் கனுக்கிரகஞ்செய்யாதே அப்படிபக்குவாபக்குவம் விசாரியாம லனுக்கிரகஞ்செய்தா லதிகபாதகனுய்ப்போவாயென்று திருவுளம்பற்றியருள அதுகேட்டவாரியர் அந்தவசனத்தை மகாப்பிரசாதமென்று சிரசாவகித்துக்கொண்டு ஒய்சுவாமீ தேவரீரிருக்கும் ஸ்தலத்தையும் தேவரீர து பத்தினியாகிய தேவியாரையுந் தெரிசிக்கும்படி கிருபைசெய்யவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தார் அதுகேட்டவிசுவேசரும் அப்பா நல்லதுவாவென்று ஆரியரைத் தம்மோடழைத்துக்கொண்டு விசாலாட்சியம்மையார் சந்நிதிக்குப்போய் இதுதான் நமதுகிரகம் இவள்தான் நமதுதேவியென்று திருவாய்மலர்ந்து அந்தர்த்தியானமாய்மறைந்தருளினார்.

அப்பால் ஆரியர் அவ்வதிசயத்தைக்கண்டு திகைத்துநின்று வேதவேதாந்தசொரூபாவிசுவேஸ்வரா சமஸ்தஜகதாதாரா சர்வலோகசரண்யா ஜகத்ரக்ஷகாவென்று பலவாறாகத்தோத்திரஞ்செய்து ஒய்சுவா

மீ தேவரீரது திருப்பாதம்வருந்தப் பாவியேன்பொருட்டு பூமியிற்க ண்ணெழுந்தருளிவந்த கருணைக்கென்னகைம்மாறுசெய்வேனென்று பித்தேறினவர்போல விசாலாட்சியம்மையார் சந்நிதானத்திற்கும் மணிகர்ணிகைக்கரைக்குமாய் புரண்டுபுரண்டு மருண்டுமருண்டு விழுந்தழுது தேகாதிப்பிரபஞ்சத்தோற்றமின்றி யுன்மத்தங்கொண்டு திரிகிறநாளில் ஸ்ரீ விசுவநாதசுவாமியும் ஒருவயோதிகப்பிராமணசந்நியாசிபோலத் திருவுருக்கொண்டு சுவாயம்புவமகாரிஷிக்குமுன்பெழுந்தருளிவந்து ஓய் சுவாயம்புவமகாரிஷியே நேத்திரதிரிசியத்தை மேனோக்கிக்கொண்டு நன்றாய்த்தறிபோல்நிமிர்ந்து கிடக்கின்றாய் புரண்டுவிழுந்துபித்தாய்த்திரிகிறவனைப்பார்த்து ஆதரித்து உனக்கென்ன வேண்டியதென்றுகேட்டாற்பழுதோ ஜீவகாருண்யத்திலுஞ்சமாதியதிகமோ இனியாகிலும்போய் அவனையாதரித்து அவனுக்கிந்தச் சமாதிநிலைமையை யுபதேசஞ்செய்யென்றுசொல்லிமறைந்தருளினார்.

அப்பால் அதைக்கேட்ட சுவாயம்புவமகாரிஷியும் மகாபயங்கரத்துடன் நடுக்கங்கொண்டு திடீலென்றெழுந்திருந்து ஆரியரிடத்திற்குவந்து அப்பனே யேன் துயரப்படுகிறாய் உனக்குவேண்டியதேதென்று கிருபையாகக்கேட்டருளினார் அவ்வாரியரும் அந்தவசனாமிர்தமானது செவியினிடமாகப்புகுந்தமாத்திரத்தில் மனோவெப்பநீங்கி விஸ்ராந்தியடைந்து ஓய்சுவாமீ தேவரீருடையதெரிசனமானதுவடவாலின்கீழெழுந்தருளியிருக்கின்ற தக்ஷிணாமூர்த்தமே குருமூர்த்தியாயெழுந்தருளிவந்து ஜனனமரணமாகிற துக்கசமுத்திரத்திலழுந்திக்கிடக்கின்ற அடியேனையெடுத்து ஞானாமிர்தத்தினால் நனைத்துஸ்வஸ்வரூபானந்தவதிசீதளமாக்கிக் கரையேற்றினதுபோலிருக்கின்றதென்று சாஷ்டாங்கதண்டன்பண்ணி இரண்டு திருவடித்தாமரைகளையும் ஆனந்தபாஷ்பத்தினா லபிஷேகஞ்செய்து நாத்தழுதழுக்கத் தோத்திரஞ்செய்து இரண்டுகைகளையுஞ் சிரசின்மேற் குவித்துக்கொண்டு அஞ்சலியஸ்தராய் நின்றருளினார்.

அதைச்சுவாயம்புவமகாரிஷியுங்கிருபையாகப்பார்த்து அப்பா வாவென்று ஆரியனை முத்திமண்டபத்தி லழைத்துக்கொண்டுபோய் உபதேசிக்குமுறைமைப்படி அறியுந்திருவடி அறுதித்திருவடி தீட்சையுஞ்செய்து மகாவாக்கியமாகிய வொருமொழியையும் சமாதிநிஷ்டாசாம்பிரதாயமு முபதேசித்தருளினார். அங்ஙனமுபதேசித்தமா

த்திரத்தில் ஆரியரும் அந்தர்முகப்பட்டு ஸ்வஸ்ரூபசமாதியடைந்து அங்ஙனேநெடுநாளிருந்து பின்பு சொரூபாகாரமாகவே சமாதியினின்றும்விழித்து எதிரேகண்டகுருசுவாமிகளது உபயசரணாரவிந்தங்களைப்பூசித்துத் தமது உடல் பொருள் ஆவி மூன்றையுங் குருசந்நிதானத்தில் தத்தஞ்செய்தருளினர்.

அதுகண்டு சுவாயம்புவமகாரிஷியும் அவ்வாரியருக்குப் புஷ்பகிரிசுவாமிகளென்றுதீக்ஷாநாமங்கொடுத்து அப்பா கோதாவிரிக்கரையில் சோமஸ்கந்தமென்னுந்தலத்தி லெழுந்தருளியிருக்கும் சோமஸ்கந்தர் நமக்கிஷ்டதேவதையாகையால் நீஅங்கேபோயிருந்துன்னைப்போலொத்த பக்குவர்களுக்கு இந்தச்சமாதிசாம்பிரதாயத்தை யுபதேசஞ்செய்து ஜீவன்முத்தனுய் வாழக்கடவாயென்று ஆசீர்வதித்து அங்ஙனமின்றியபக்குவர்களுக்குபதேசிப்பாயாகில் வியர்த்தமாகிப்போமென்றுதிருவுளம்பற்றியருளிஆரியருக்குவிடைகொடுத்தனுப்பிவிட்டுச் சுவாயம்புவமகாரிஷியும் ஸ்ரீ கயிலாயத்திற்கெழுந்தருளினர்.

அப்பால் ஆரியராகியபுஷ்பகிரிசுவாமிகள் விசுவநாதனையும் விசாலாட்சித்தாயாரையும் வணங்கிவிடைபெற்றுக்கொண்டு குருவாக்கியப்படி சோமஸ்கந்தமென்னுந் தலத்திலெழுந்தருளியிருந்து தம்மையடுத்துவந்த பக்குவர்களாகிய பயிர்கள்தழைத்துவளரும்படி ஒருகைம்மாறும்வேண்டாது மேகம்போல ஞானமிர்தத்தைச்சதாகாலமும் வருஷித்துக்கொண்டிருந்தது.

அவர்சிஷ்ர் சாந்தோக்கியசுவாமிகள் அவர்சிஷ்ர் பிறவாநெறிசுவாமிகள் அவர்சிஷ்ர் நிரவயவதேவசுவாமிகள் அவர்சிஷ்ர் சையோகசுவாமிகள் அவர்சிஷ்ர் தேவகதிர்சுவாமிகள் அவர்சிஷ்ர் பிர்ம்மானந்தசுவாமிகள் அவர்சிஷ்ர் அமிர்தானந்தசுவாமிகள் அவர்சிஷ்ர்சௌபாக்கியசுவாமிகள் அவர்சிஷ்ர் சிதப்பரமறிவானந்தசுவாமிகள் அவர்சிஷ்ர் சிவயோகஞானதர்மராயசுவாமிகள் அவர்சிஷ்ர் தவுடசுவாமிகள் இவரால் இந்தவேதாகமசமரசஞானபஞ்சபதமகாவாக்கிய சாஸ்திரத்தைக்கீர்வாணத்தினின்று சகலருக்குமெளிதி லுபயோகமாகும்படி திராவிடத்தில் மொழிபெயர்க்கப்பட்டதென்றறிக.

நூல்வரலாறு - முற்றிற்று.

பஞ்சபதமகாவாக்கியம்.

குருஸ்துதி.

விருத்தம்.

அறிவினிச்சயஞானத்தையருளியவமுதேபோற்றி...... *
அறிவினிற்சமாதிஞானத்தனுபவந்தந்தாய்போற்றி...... *
அறிவினிற்சகசஞானத்ததுவதுவானைப்போற்றி........ *
அறிவருமறிவானந்தவருட்டிருப்பாதம்போற்றி........ *

வேறு.

ஆதியந்தமிலாதாயானந்தமாகி - யையைந்துபதத்தின்மேலாகிநிற்குஞ், சோதியொருகுருவடிவாயறிவானந்த - சுவாமியாய்ச்சிதம்பரத்திற்றோன்றியாண்ட, மூதறிவாஞ்சிவயோகிதன்மாய - முருகனுடன்தவுடசிவயோகிமோனு, தீதறிலயருள்வேதாகமசாரத்தைச் - சொற்றனர்களறிவுடையதெளிவுளோர்க்கே.............................. *

நூல்.

நைமிசாரண்யவாசிகளாகிய ரிஷிகளுக்குச் சூதமகாரிஷி திருவுளம்பற்றியருளுகின்றார். ஓய்ரிஷிகளே ஸ்ரீ கயிலாசவாசராய் சச்சிதானந்தசொரூபியாய்சாந்தமூர்த்தியாய் கிருபாநிதியாய் சம்சாரசாகரமான அந்தகாரத்திலழுந்தியே மூழ்கிக்கிடக்கிறசீவர்களைக் கரையேற்றி மோட்சாதீத சமரசஞான சிம்மாசனாதிபதிகளாக்குகின்றவராய் குருமூர்த்தியாயெழுந்தருளியிருந்த தக்ஷிணாமூர்த்திசுவாமிகள் அதிபக்குவர்களாய் ஞானதபோசித்தர்களாய் மோட்சதாகிகளாய் குருபாதநிசபக்தியுடையவர்களாய் காமக்குரோதாதிரகிதர்களாய் வயிராக்கியவுபாதியுடையவர்களாய் சாதனசதுஷ்டயசம்பன்னர்களாய் தீவிரதரபக்குவிகளாய் சத்திநிபாதத்துத்தமர்களாயிருந்த சனகர் சனந்தனர் சனாதனர் சனற்குமாரர்களாகியநால்வருக்குஞ் சுருதி ஸ்மிருதி சமரசபாகம் ஞானசம்பவம் ரகசியலோலம் கலியாணசம்பவ முதலான வேதாந்தத்தையும் மகுடாகமத்திலர்த்தமான சித்தாந்தத்தையும் அதுகளிலுண்டான சம்பிரதாயஅர்த்தத்தையும் முத்திபேதங்களையும்அனுக்கிரகித்தருள அவற்றுட்சமயபேதமும் முத்திபேதமும் ஒன்றுக்கொன்றெவ்வாது விரோதமாயிருக்கின்றமையால் அவற்றிற்சந்தேகம்பிறந்து அந்நால்வரு மகா துக்காக்கிரந்தர்களாய் இந்தச்சந்தேகத்

லைதச் சாம்பசிவமூர்த்தியே நிவிர்த்திக்கவேண்டுமென்று நிச்சயித்துக் கொண்டு பரமசிவத்தைநோக்கி நெடுநாள்தவஞ்செய்தார்கள்.

அதுகண்டு பரமசிவம் கிருபைகூர்ந்து அந்நால்வருக்கும் பிரத்தியட்சதரிசனங்கொடுத்தருளி ஒய்முனிவர்களே நீங்கள் தபசினுல்மிகவும்வருந்தினீர்கள் இனிஉங்களுக்குவேண்டியவரமேது கேளுங்களென்று திருவுளம்பற்றியருள அதுகேட்டமுனிவர்களுல்வரும் ஆனந்தபரவசராயெழுந்து ஹரஹரவென்று ஸ்தவுத்தியஞ்செய்து நின்றார்கள். அவர்களுக்குள் சனற்குமாரபகவான் சுவாமியைப்பார்த்து ஒய்மகாதேவா தேவரீர் முன்புகிருபைகூர்ந்துவேதாகமத்தையனுக்கிரகஞ்செய்தும் எங்களுக்குச் சந்தேகநிவிர்த்தியாகவில்லை ஆதலால் இன்னமும் அந்தச்சந்தேகநிவிர்த்தியுண்டாகும்படி சகலவேதாகம சமரசசித்தாந்தசம்புடமாய் சகலசாஸ்திரசம்மதமாய் சகலசமயத்துக்குமேசிரிதியாய் சகலநிலக்குமேலானதாய் சமாதிநிஷ்டையிலறிவதாயிருக்கின்ற இரகசியார்த்தத்தை அடியேங்களுக்கனுக்கிரகஞ்செய்துசந்தேகவிபரீதமாகிறசமுத்திரத்தில் மூழ்கிக்கிடக்கிறவெங்களைக்கரையேற்றியிரட்சிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தார்.

அதுகேட்டுத்திரிநேத்திரதாரியாகியபரமசிவனும் அந்தச்சனகாதிகளைக்கிருபையாகப்பார்த்து ஒய் முனிவர்களே இப்போதுங்களுக்குண்டாயிருக்கிற சந்தேகவிபரீதநீங்கும்படி வேதாகமங்களிற் பூர்வபட்சமாயிருக்கிற முத்திமார்க்கங்களாகிய நூற்றெட்டு வாக்கியமும் அவற்றினருத்தமும் நிவிர்த்தியும் சித்தாந்தபட்சமா யிருக்கிற அனுக்கிரக சிரேஷ்டமானமகாவாக்கியமும் உங்களுக்கனுக்கிரகிக்கின்றோம் கேளுங்களென்று முந்தி நூற்றெட்டுவாக்கியங்களைத் திருவாய்மலர்ந்தருளுகின்றார்.

அவையாவன.

மங்களவாக்கியம்	கார்க்கியவாக்கியம்	கலுஷிவாக்கியம்
துதிவாக்கியம்	இரட்சைவாக்கியம்	காருடவாக்கியம்
சத்தியவாக்கியம்	கவுணவாக்கியம்	ஞானவாக்கியம்
சராசரவாக்கியம்	சொர்க்கவாக்கியம்	முத்திவாக்கியம்
டிண்டிவாக்கியம்	வாதவாக்கியம்	தந்துவாக்கியம்
நேயவாக்கியம்	கரணவாக்கியம்	அன்வய வாக்கியம்
அமோகவாக்கியம்	கேசரிவாக்கியம்	புஷ்கலவாக்கியம்

விசேஷிவாக்கியம்
பிரஞ்ஞைவாக்கியம்
மஞ்ஞைவாக்கியம்
வியோமவாக்கியம்
அந்தரவாக்கியம்
நியதிவாக்கியம்
ஊர்த்தவாக்கியம்
ஜோதிவாக்கியம்
சரவாக்கியம்
உத்தரவாக்கியம்
அசபைவாக்கியம்
பூவாக்கியம்
வால்வாக்கியம்
லோசனவாக்கியம்
லக்ஷவாக்கியம்
நியந்தரவாக்கியம்
முமூகவாக்கியம்
மயவாக்கியம்
வியட்டிவாக்கியம்
அமலவாக்கியம்
சம்பவவாக்கியம்
சிந்துவாக்கியம்
டுண்டிவாக்கியம்
ஏகவாக்கியம்
தூலவாக்கியம்
சூட்சுமவாக்கியம்
காரணவாக்கியம்
சிவபரவாக்கியம்
அயிக்கவாக்கியம்
சாயுச்சியவாக்கியம்

லயவாக்கியம்
தாரதவாக்கியம்
பராற்பரவாக்கியம்
சித்வாக்கியம்
ஞானசித்துவாக்கிய
கோமளவாக்கியம்
ஆஷிபவாக்கியம்
ஷாட்குண்யவாக்கிய
அமிர்தவாக்கியம்
நிராமயவாக்கியம்
கோவாக்கியம்
வர்க்கவாக்கியம்
சுத்தவாக்கியம்
சேமவாக்கியம்
அதீதவாக்கியம்
சுபாசுபவாக்கியம்
கோளகவாக்கியம்
குப்பவாக்கியம்
மோனவாக்கியம்
ககனவாக்கியம்
வேதவாக்கியம்
கைவல்யவாக்கியம்
நிச்சித்தவாக்கியம்
தமசுவாக்கியம்
டமரகவாக்கியம்
மைத்திரிவாக்கியம்
வெதிரேகவாக்கியம்
திதிவாக்கியம்
நேதிவாக்கியம்
லட்சியவாக்கியம்

வெகுர்வாக்கியம்
அகண்டவாக்கியம்
கமலவாக்கியம்
வாச்சியவாக்கியம்
சமரசவாக்கியம்
சமஷ்டிவாக்கியம்
நிர்க்குணவாக்கியம்
அபாவவாக்கியம்
நிவிர்த்திவாக்கியம்
மார்க்கவாக்கியம்
அதோவாக்கியம்
ஆசிரயவாக்கியம்
வாசகவாக்கியம்
நாஸ்திவாக்கியம்
நீலோற்பலவாக்கிய
கோசரவாக்கியம்
முத்திவாக்கியம்
சம்சயவாக்கியம்
விசிஷ்டவாக்கியம்
சாமான்யவாக்கியம்
நிச்சயவாக்கியம்
சங்காரவாக்கியம்
மஞ்சுவாக்கியம்
ஓமவாக்கியம்
அம்சவாக்கியம்
சாம்பவிவாக்கியம்
சிட்சைவாக்கியம்

ஆ - ௱அ.

இன்னம்வாக்கியபேதங்களனந்தமுண்டு ஆயினும் இப்போதுங்களுக்குச்சொல்லியவாக்கியங்கள் நூற்றெட்டுக்கும் அர்த்தமும் நிவிர்த்தியுஞ்சொல்லுகின்றோம்கேளுங்களென்று பரமசிவன் திருவுளம்பற்றியருளச் சனகாதிகள் கேட்கத்தொடங்கினர்கள்.

வினா. மங்களவாக்கியமாவதென்ன,

விடை. மங்களவாக்கியமாவதேதெனின், பிரமானந்தசுகத்தை வித்துவான்களைப்போல் துதிக்கின்றதேமுத்தியென்பது, அது துதிப ரமானபடியாற்கூடாது.

வினா. துதிவாக்கியமாவதென்ன,

விடை. துதிவாக்கியமாவதேதெனின், பிரமானுபவ சாஸ்திரத்தையும் பிரமசொரூபத்தையும் ஸ்தௌவுத்தியஞ்செய்கிறதே முத்தியென்பது, பிரமசாட்சாத்காரமேமுத்தியாகையால் அது கூடாது.

வினா. சத்தியவாக்கியமாவதென்ன,

விடை. சத்தியவாக்கியமாவதேதெனின், வாக்கியத்தைத்தவிரப் பொருளில்லையாதலால் வாக்கியமேமுத்தியென்பது, அதுவாச்சியார்த்தமானபடியினாலும் லட்சியார்த்தமான ஸ்வரூப சித்தியில்லாதபடியினாலுங் கூடாது.

வினா. சராசரவாக்கியமாவதென்ன,

விடை. சராசரவாக்கியமாவதேதெனின், தாபர சங்கமங்களைச் சிவஞ்சத்தியாகப் பாவனைசெய்வதேமுத்தியென்பது, அது சகுணவுபாதியாகையாற்கூடாது.

வினா. டிண்டிவாக்கியமாவதென்ன,

விடை. டிண்டிவாக்கியமாவதேதெனின், பந்தங் காரணமாகையால் சிற்சத்தியையுபாசித்து அந்தச்சிற்சத்திகிருபையினாற் சகலபந்தங்களினின்றும்விடுபடுவதேமுத்தியென்பது, அது சமாதியனுபவமுண்டாதற்குச் சாதனமாகையாலும் மாயையவுபாதியிருக்கையினாலுங்கூடாது.

வினா. நியமவாக்கியமாவதென்ன,

விடை. நியமவாக்கியமாவதேதெனின், பிரமவுபாசனையை ஒன்று அஞ்சு முப்பதாயுபாசிக்கிறதேமுத்தியென்பது, அதுசித்தசுத்திக்குக்காரணமாகையாற்கூடாது.

வினா. அமோகவாக்கியமாவதென்ன,

விடை. அமோகவாக்கியமாவதேதெனின், சர்வவிஷயத்திலுமவாவற்றிருப்பதேமுத்தியென்பது, அது வயிராக்கியமாகையாற் கூடாது.

வினா. கார்க்கியவாக்கியமாவதென்ன,

விடை. கார்க்கியவாக்கியமாவதேதெனின், உபக்கிரமவப்பியாசமேமுத்தியென்பது, அது விசாரஞானமாகையாற் கூடாது.

வினா. இரட்சைவாக்கியமாவதென்ன,

விடை. இரட்சைவாக்கியமாவதேதெனின், பிரமானுசந்தான மேமுத்தியென்பது, அதுபரோட்சஞானமாகையாற் கூடாது.

வினா. கவுணவாக்கியமாவதென்ன,

விடை. கவுணவாக்கியமாவதேதெனின், கிருதவுத்தேசமேமோட்சமென்பதுபோலச் சிரவணமேமுத்தியென்பது, அதற்குமேற்சாட்சாத்காரபரியந்தம் நான்குபடி யொழுங்கிருக்கின்றமையால் அது [கூடாது.

வினா. சொர்க்கவாக்கியமாவதென்ன,

விடை. சொர்க்கவாக்கியமாவதேதெனின், வஸ்து சத்தியமாகவுண்டென்று பரோட்சஅவாந்தரவாக்கியமாய்நினைத்திருப்பதே முத்தியென்பது, அது அபரோட்சஞானவீக்ஷணமல்லாதபடியினாற் கூ [டாது.

வினா. வாதவாக்கியமாவதென்ன,

விடை. வாதவாக்கியமாவதேதெனின், பதார்த்தவசனத்தைவிட்டு வாதிகருத்துக்கேற்கச் சொல்லுவதேமுத்தியென்பது, அது யதார்த்தமாகையாற்கூடாது.

வினா. கரணவாக்கியமாவதென்ன,

விடை. கரணவாக்கியமாவதேதெனின், சார்வதாஅத்தியாத்மீகத்தைச் சுரோத்திரவழியாகக்கொண்டு பிரமானந்தமனுபவிப்பதேமுத்தியென்பது, அது சிரவணமாகையாற்கூடாது,

வினா. கேசரிவாக்கியமாவதென்ன,

விடை. கேசரிவாக்கியமாவதேதெனின், பால் தயிரானதுபோலப் பிரமமே பிரபஞ்சமாய்த்தோற்றுகிறபடியால் பிரபஞ்சத்தையும் பிரமமாகப்பாவித்திருப்பதேமுத்தியென்பது, அது பரிணாமபட்சமாகையாலும் பிரமத்திற்குப் பரிணாமதோஷம்வருகிறபடியாலுங் [கூடாது.

வினா. கலுஷிவாக்கியமாவதென்ன,

விடை. கலுஷிவாக்கியமாவதேதெனின், பிதாவினிடத்திற் பிள்ளையுண்டானதுபோலப் பிரமத்தினிடத்திற் பிரபஞ்சமுண்டென்றறிகிறதேமுத்தியென்பது, அது ஆரம்பபட்சமாகையினாலுஞ் சித்திலுற்பத்தியில்லாதபடியினாலுங் கூடாது.

வினா. காருடவாக்கியமாவதென்ன,

விடை. காருடவாக்கியமாவதேதெனின், பழுதையிற்பாம்புண்டானதுபோலப் பிரமத்திற் பிரபஞ்சமுண்டென்றறிவதே முத்தியெ

ன்பது, அது விவர்த்தபட்சமாதலாலும்பிரகிருதிக்குமூல்சேவனில்லா தபடியினாலுங்கூடாது.

வினா. நியாயவாக்கியமாவதென்ன,

விடை. நியாயவாக்கியமாவதேதெனின், தேகாதிப்பிரபஞ்சத்தி ல் ஆசத்திவைத்து நியாநியாயங்களை விசாரித்து விரோதத்தைத்தள் ளி அவிரோதத்தைக்கொள்ளுகிறதேமுத்தியென்பது, அது கர்த்தா வொருவருண்டென்றும் அவருக்குப்பயந்து நீதியாய் நடக்கவேண்டு மென்றும் வருகிறசித்தவிருத்தியுண்டாகையினாலும் ஸ்வஸ்வரூபந்த விரச் சிவேசுரஜகத்துமித்தையாகையினாலும் விரோதாவிரோத மில் லாததே வஸ்துவாதலாலுங் கூடாது.

வினா. முக்கியவாக்கியமாவதென்ன,

விடை. முக்கியவாக்கியமாவதேதெனின், அவாங்மனோகோசர மானவஸ்துவை வசனமாய்ச்சொல்வதேமுத்தியென்பது, அங்ஙனமா யின் வசனத்திலர்த்தத்துவமயமான சிவபாவமிருக்கிறபடியால் அது கூடாது.

வினா. தத்துவாக்கியமாவதென்ன,

விடை. தந்துவாக்கியமாவதேதெனின், நானாவிதமுத்திகளையும் விசாரித்துத்தனக்கெதில் ருசித்ததோ அதுவேமுத்தியென்பது, ஆயி ன் பெத்தனுக்குப் பிரபஞ்சருசியே முத்தியாகவேண்டுமாகையால் அது கூடாது.

வினா. அன்வயவாக்கியமாவதென்ன,

விடை. அன்வயவாக்கியமாவதேதெனின், தேகாதிப்பிரபஞ்சா யிக்கத்தைப்பார்த்து இதுவஸ்துவினிடத்திலில்லை காலத்திரயத்திலுமி த்தையாரூபமாயிருக்கிற மூலமாயையினாலியங்குமென் றறிகிறதே முத்தியென்பது, அதுபரோட்சமாதலாலும் மாயையும் மாயாகாரி யங்களுஞ் சர்வமித்தையாதலாலுங் கூடாது.

வினா. புஷ்கலவாக்கியமாவதென்ன,

விடை. புஷ்கலவாக்கியமாவதேதெனின், பிரமானுசந்தானவா சனைமாத்திரமாயிருக்கிறதே முத்தியென்பது, அது புத்தி விருத்தி ஞானமானபடியாற் கூடாது.

வினா. விசேஷவாக்கியமாவதென்ன,

விடை. விசேஷவாக்கியமாவதேதெனின், ஏகதேசவிஷயத்தி லும் வஸ்துஇருக்குமென்றறிகிறதே முத்தியென்பது, பிரமாதிகே

பரியந்தம் கண்ணுக்குள் மணிப்பிரகாசம்போல் விளங்குகின்ற சைத ன்யவஸ்துவாகையினாலும் அவ்வஸ்து ஏகதேச மாகாமையினாலும் அ [துகூடாது.

வினா. பிரஞ்ஞைவாக்கியமாவதென்ன

விடை. பிரஞ்ஞைவாக்கியமாவதேதெனின், விசாரஞானத்தினா ற் புத்திவிருத்தி ஞானத்திற்பிறந்த வஸ்துநிச்சயமேமுத்தியென்பது ஆயின்விருத்தி ஞானத்திற்பிறந்த வஸ்துஜடமாதலால் அதுகூடாது.

வினா. மஞ்ஞைவாக்கியமாவதென்ன,

விடை. மஞ்ஞைவாக்கியமாவதேதெனின், அத்தியாத்மீகசாஸ் திரத்திற்பிரமானந்தவசமாகின்றதே முத்தியென்பது, அதுபரோட் சானந்தமாதலாற் கூடாது.

வினா. வியோமவாக்கியமாவதென்ன,

விடை. வியோமவாக்கியமாவதேதெனின், தீபஜோதிஅமைவழி யே தீபம்பற்றுவதுபோலப் பிரமத்தியானவிருத்திவழியே பிரமம் பிரகாசிக்குமென்றறிவதே முத்தியென்பது, ஆயின் பிரமமென்னுங் [கற்பிதத்தியானம் மித்தையாதலால் அது கூடாது.

வினா. அந்தரவாக்கியமாவதென்ன,

விடை. அந்தரவாக்கியமாவதேதெனின், பிரமத்தியானமேமு த்தியென்பது, அது சாதனமாதலாற் கூடாது.

வினா. நியதிவாக்கியமாவதென்ன,

விடை. நியதிவாக்கியமாவதேதெனின், அந்தர்முகமாகிய பிர மத்தியானத்தில் விருத்தி தேட்டரவற்றுநின்றவிடமே முத்தியென்ப து, ஆயின் விருத்திவிஷயலயமானபடியினால் அது கூடாது.

வினா. ஊர்த்தவாக்கியமாவதென்ன,

விடை. ஊர்த்தவாக்கியமாவதேதெனின், பிரமரந்திரமான சக ஸ்ராரத்தைச் சோடசகலாப் பிரசாதத்திற்றரிசித்து அமிர்தபானஞ் செய்து ஊழியைக்கடந்துநிற்பதேமுத்தியென்பது, அதஞானத்தி ற்குச்சாதனமாயிருந்தும் நித்தியவஸ்துவிற் கலவாதபடியினாலும் தி யானமாகையினாலுங் கூடாது.

வினா. ஜோதிவாக்கியமாவதென்ன,

விடை. ஜோதிவாக்கியமாவதேதெனின், நெற்றிக்கண் திறந்து அக்கினிபோலிருக்குஞ் ஜோதிர்மயத்தைத்தரிசித்து அந்தப்பிரகாசத் திற் சகலமுந்தெறிவதே முத்தியென்பது, அதுபுருவமத்தியத்தியா னமாகையாற் கூடாது.

வினா. சரவாக்கியமாவதென்ன,

விடை. சரவாக்கியமாவதேதெனின், சரசாஸ்திரமறிந்து உசுவாச நிசுவாசமக்கினத்தின் தயோயோகத்திற்சித்திக்கும் வஸ்துவையறிவதேமுத்தியென்பது, அது கேவலமக்கினமாகையினாற்கூடாது.

வினா. உத்தரவாக்கியமாவதென்ன,

விடை. உத்தரவாக்கியமாவதேதெனின், யோகத்தினால்தன்னிடத்தில் உத்தராயன தக்ஷிணாயன காலமறிந்து உத்தராயனத்தில்முப்பத்திரண்டுமாத்திரை பிராணாயாமஞ்செய்து கும்பகத்தினுள்விளங்கும் பொருளையறிவதே முத்தியென்பது, அது சித்தசுத்திக்குக்காரணமாகையாற் கூடாது.

வினா. அசபைவாக்கியமாவதென்ன,

விடை. அசபைவாக்கியமாவதேதெனின், பிராணவாய்வு நிதம் இருபத்தோராயிரத்தறுநூறு பேதமாயிருப்பதில்நிச்சுபாவமாகவியங்குவதேமுத்தியென்பது, அதுகிரியையமாகையாற் கூடாது.

வினா. பூவாக்கியமாவதென்ன,

விடை. பூவாக்கியமாவதேதெனின், மண்டலத்திரயமும் தேவதைகளையுந் தரிசித்துச் சந்திரமண்டலத்திற் பதினாறுகலையுந் தரிசிப்பதே முத்தியென்பது, அது மண்டலத்திரயத் தியான மாகையினாற் கூடாது

வினா. வால்வாக்கியமாவதென்ன,

விடை. வால்வாக்கியமாவதேதெனின், செந்நெல்வால்நுனிபோல இருதயத்திலொளிகாண்பதேமுத்தியென்பது, அது சாமான்னிய யோகமாகையாற்கூடாது.

வினா. லோசனவாக்கியமாவதென்ன,

விடை. லோசனவாக்கியமாவதேதெனின், கிரமப்படிபிரமோபதேசம்பெற்றுக்கொண்டு அவ்வஸ்துதானாயிருப்பதே முத்தியென்பது, அதற்குகுருகுலவாசமும் சிரவண மனன நிதித்தியாசனமில்லாதபடியினாலும்பிரதிபந்தமிருக்கின்றதினாலும் அதுகூடாது.

வினா. லிங்கவாக்கியமாவதென்ன,

விடை. லிங்கவாக்கியமாவதேதெனின், சூட்சுமசரீர லயமேமுத்தியென்பது, அது அவித்தையாபிரக்ஞை யிருக்கிற படியாற் கூடாது.

வினு. முமூகவாக்கியமாவதென்ன,

விடை. முமூகவாக்கியமாவதேதெனின், தேவாதிப்பிரபஞ்சத் தோற்றாவிக்ஷித் தமோமயமா யிருப்பதே முத்தியென்பது, அது ஆவரணகாரியமாகையாற் கூடாது.

வினு. நியந்தரவாக்கியமாவதென்ன

விடை. நியந்தரவாக்கியமாவதேதெனின், ஆரோபமானவவித்தையாரகிதமே முத்தியென்பது, அதுசர்வஞ்ஞாகிதவஸ்துவாகையாற்கூடாது.

வினு. மயவாக்கியமாவதென்ன,

விடை. மயவாக்கியமாவதேதெனின், பஞ்சகோசத்தைக்கழித்து அவற்றையறிந்தவறிவுதானுவதேமுத்தியென்பது, அது சங்கோசமாகையாற் கூடாது.

வினு. வியஷ்டிவாக்கியமாவதென்ன,

விடை. வியஷ்டிவாக்கியமாவதேதெனின், நானுவானகரணத்தில் வளைபட்டகூடஸ்தானந்தத்தைப் பெறுவதேமுத்தியெல்பது, சாட்சி ஏகமாகையால் அது கூடாது.

வினு. அமலவாக்கியமாவதென்ன,

விடை. அமலவாக்கியமாவதேதெனின், அகங்காராதிகளற்றுச் சாட்சிமாத்திரமாயிருப்பதே முத்தியென்பது, அதில் திரிபுடிதோற்றுமாகையால் அது கூடாது.

வினு. சம்பவவாக்கியமாவதென்ன,

விடை. சம்பவவாக்கியமாவதேதெனில், ஆயிரத்தில்நூறும் நூற்றில்பத்தும் பத்திலொன்றும் ஒன்று எல்லாவற்றிலுமிருப்பதுபோல ஸ்தூலத்திற்சூட்சுமமும் சூட்சுமத்திற்காரணமும் காரணத்திற் சீவனும் சீவனில்சாட்சியும் சாட்சியெங்குமுண்டென்றறிவதேமுத்தியென்பது, அது உபசாரமாகையாற் கூடாது.

வினு. சித்துவாக்கியமாவதென்ன,

விடை, சித்துவாக்கியமாவதேதெனின், திரிகால ஞானதிருஷ்டியுடையதே முத்தியெல்பது, அதுசர்வஞ்ஞத்வவுபாசனையாகையாற்கூடாது.

வினு. டுண்டிவாக்கியமாவதெல்ன,

விடை. டுண்டிவாக்கியமாவதேதெனின், மாயாசபளிதப்பிரமந்தானுவதேமுத்தியென்பது, அதுமாயாவுபாதியிருக்கையாற் கூடாது.

வினு. ஏகவாக்கியமாவதென்ன,

விடை. ஏகவாக்கியமாவதேதெனின், சச்சிதானந்தபிரமத்தைப் பிரதிபாதிக்குந் தற்பதவாக்கியமேமுத்தியெல்பது, அதுலட்சியவஸ்துவையறியாதபடியினுற் கூடாது.

வினு. தூலவாக்கியமாவதென்ன,

விடை. தூலவாக்கியமாவதேதெனின், ஈஸ்வரஸ் தூலசரீரமாகிய அஷ்டமூர்த்திவடிவமான விராட்டுக்குஞ் சீவஸ் தூலசரீரத்திற்கும் அயிக்கஞ்செய்வதேமுத்தியெல்பது, அதுநாமரூபமாகையாற்கூடா [து.

வினு. சூட்சுமவாக்கியமாவதென்ன,

விடை. சூட்சுமவாக்கியமாவதேதெனின், சிவேஸ்வர சூட்சுமசரீரவயிக்கமேமுத்தியெல்பது, அது அவித்தைமாயை யிருக்கையாற் [கூடாது.

வினு. காரணவாக்கியமாவதென்ன,

விடை. காரணவாக்கியமாவதேதெனின், அந்தரியாமிக்குப்விசிஷ்டனுக்கு மயிக்கமறிகிறதேமுத்தியென்பது, அதுசீவத்வமிருக்கிறபடியாற் கூடாது.

வினு. சிவபரவாக்கியமாவதென்ன,

விடை. சிவபரவாக்கியமாவதேதெனின், சிவேஸ்வரவயிக்கமேமுத்தியென்பது, அது அவித்தையாமாயாகாரியமாகையாற்கூடாது.

வினு. அயிக்கவாக்கியமாவதென்ன,

விடை. அயிக்கவாக்கியமாவதேதெனின், கூடஸ்தரும் பிரமமுமேகமென்றறிவதே முத்தியென்பது, அது குணத்திரயசத்தி யிருக்கையாற் கூடாது.

வினு. சாயுச்சியவாக்கியமாவதென்ன,

விடை. சாயுச்சியவாக்கியமாவதேதெனின், சிவனும் வஸ்துவுமிரண்டற விருப்பதே முத்தியென்பது, அதுவே தானுனுற்போலச் சாதனமாயிருக்கிறபடியால் அது கூடாது.

வினு. லயவாக்கியமாவதென்ன,

விடை. லயவாக்கியமாவதேதெனில், தத்துவலயசமாதியே முத்தியென்பது, அதுஉபசங்கார வப்பியாசமாகையாற் கூடாது.

வினு. தாரகவாக்கியமாவதென்ன,

விடை, தாரகவாக்கியமாவதேதெனின், சகல பிரபஞ்சத்திற்கும் வஸ்து தாரகமென்றறிவதே முத்தியென்பது, பிரமலட்சணஞ் சித்தாமாத்திர மானபடியினுல் அது கூடாது.

வினு. பராற்பரவாக்கியமாவதென்ன,

விடை. பராற்பரவாக்கியமாவதேதெனில், சுயம்வஸ்துவேயா வரிடத்திலுமிருந் தசைப்பிக்கிறதென் றறிகிறதே முத்தியென்பது, அது அசையாதவஸ்துவாகையாற் கூடாது.

வினு. சித்வாக்கியமாவதென்ன,

விடை. சித்வாக்கியமாவதேதெனின், சித் வியாபகலட்சணமா யிருப்பதே முத்தியென்பது, வஸ்து லட்சணசூன்யமாகையால்அது கூடாது.

வினு. ஞானசித்துவாக்கியமாவதென்ன,

விடை. ஞானசித்துவாக்கியமாவதேதெனின், சர்வமுஞ் சித்ரூபவிலாசமா யனுபவிக்கின்றதே முத்தியென்பது, அது விருத்திதாதாத்மியமாகையாற் கூடாது.

வினு. கோமளவாக்கியமாவதென்ன,

விடை. கோமளவாக்கியமாவதேதெனின், சர்வானந்தமும் பிரமானந்தமா யனுபவிப்பதே முத்தியென்பது, அது விருத்தியானந்தமாகையாற் கூடாது.

வினு. ஆஷிபவாக்கியமாவதென்ன,

விடை. ஆஷிபவாக்கியமாவதேதெனின், பிரமானந்தமே முத்தியென்பது, ஆயின் பிரமானுபவமே மோக்ஷசுகமாகையால் அது கூடாது.

வினு. ஷாட்குண்யவாக்கியமாவதென்ன,

விடை. ஷாட்குண்யவாக்கியமாவதேதெனின், ஆனந்தாதீதவஸ்துதானுவதே முத்தியென்பது, ஆயின் பாவகஞ் சடமாகையால் அது கூடாது.

வினு. அமிர்தவாக்கியமாவதென்ன,

விடை. அமிர்தவாக்கியமாவதேதெனின், ஆனந்த சொரூபமே முத்தியென்பது, ஆனந்தாதீதமே வஸ்துவாகையால் அதுகூடாது.

வினு. நிராமயவாக்கியமாவதென்ன,

விடை. நிராமயவாக்கியமாவதேதெனின், நிராமயஞானரூதமாயிருப்பதே முத்தியென்பது, நிராமய ஞானஞ் சிற்சத்தி வியாபகமாகையால் அது கூடாது.

வினு. கோவாக்கியமாவதென்ன,

விடை. கோவாக்கியமாவதேதெனின், லக்ஷணத்தைக் கொண்டு லக்ஷியமறிகிறதே முத்தியென்பது, லக்ஷண நேதிசெய்து வஸ்துவை யறியப்படாத படியினுல் அது கூடாது.

வினு. வர்க்கவாக்கியமாவதென்ன,

விடை. வர்க்கவாக்கியமாவதேதெனின், சிற்சத்தி சமேளித சர்வசாட்சி தானவதே முத்தியென்பது, அது சிற்சத்தியுபாதி யிருக்கையாற் கூடாது.

வினு. சுத்தவாக்கியமாவதென்ன,

விடை. சுத்தவாக்கியமாவதேதெனின், பின்னசத்தி அபின்னசத்தி யிரண்டுமற்ற சுத்தப்பிரமமா யிருப்பதே முத்தியென்பது, ஆயின் சுத்தாசுத்தமின்றிய வஸ்துவென்னும் வாக்கியத்தினல் அதுகூடாது.

வினு. சேமவாக்கியமாவதென்ன,

விடை. சேமவாக்கியமாவதேதெனின், சுத்தமுங்கடந்த சூன்யமே முத்தியென்பது, அதற்குமேற் சுபாவமிருக்கிறபடியால் அதுயடாது.

வினு. அதீதவாக்கியமாவதென்ன,

விடை. அதீதவாக்கியமாவதேதெனின், உண்டென்று விளங்குகிற பிரமத்திற்கும் இல்லையென்கிற பிரபஞ்சத்திற்கும் அப்பாற் பட்ட சுபாவமே முத்தியென்பது, ஆயின்சுபாவாதீதமேவஸ்துவாகையால் அது கூடாது.

வினு. சுபாசுபவாக்கியமாவதென்ன,

விடை. சுபாசுபவாக்கியமாவதேதெனின், வஸ்து சித்ரூபமுஞ் சடரூபமுமாயிருக்கு மென்பதையறிந்து அவ்வறிவு தானயிருப்பதே முத்தியென்பது, ஒருவஸ்துவுக் கிரண்டு லட்சண மொவ்வா தாகையால் அது கூடாது.

வினு. கோளகவாக்கியமாவதென்ன,

விடை. கோளகவாக்கியமாவதேதெனின், வஸ்து நிச்சயத்தை அதிரகசியமா யறிந்திருப்பதே முத்தியென்பது, வஸ்து சுவானுபவ விளக்கமாகையால் கூடாது.

வினு. குய்யவாக்கியமாவதென்ன,

விடை. குய்யவாக்கியமாவதேதெனின், சதசத்தை விட்டிருப்பதே முத்தியென்பது, ஆயின் நிச்சயத்துக் கிடமில்லமையா லதுகூடாது.

வினு. மோனவாக்கியமாவதென்ன,

விடை. மோனவாக்கியமாவதேதெனின், வஸ்து வாசாமகோசரமா யிருக்குமென்பதே முத்தியென்பது, உபதேசக் கிரமமான ஒருமொழி வாக்கிய மிருக்கிறதினலும் சற்குருவின லறிவிக்கிற வஸ்துவாகையினலும் அது கூடாது.

வினா. ககனவாக்கியமாவதென்ன,

விடை. ககனவாக்கியமாவதேதெனின், சித்தலயம்பண்ணி ஆகாசவடிவந் தானாயிருப்பதே முத்தியென்பது, அது சமாதி சாதனமாகையினாற் கூடாது.

வினா. வேதவாக்கியமாவதென்ன,

விடை. வேதவாக்கியமாவதேதெனின், சர்வதுக்க நிவிர்த்தியே முத்தியென்பது, அது துக்காபாவ சாதனமாகையாற் கூடாது.

வினா. நிச்சிந்தவாக்கியமாவதென்ன,

விடை. நிச்சிந்தவாக்கியமாவதேதெனின், சிந்தனையற்றுத் தானாயிருக்கிறதே முத்தியென்பது, அது மனோசாதன மாகையாற் கூடாது.

வினா. தமசுவாக்கியமாவதென்ன,

விடை. தமசுவாக்கியமாவதேதெனின், சுழுத்திபோ லிருக்கிறதே முத்தியென்பது, பிரமஞான வனுபவமே மோட்சமாகையால் அதுகூடாது.

வினா. கைவல்யவாக்கியமாவதென்ன,

விடை, கைவல்யவாக்கியமாவதேதெனின், சுத்த சாத்திக மான மைத்திரியாதி லட்சணமே முத்தியென்பது, அது மயித்திரியாதி லட்சணமெல்லாம் பிரகிருதி விருத்தி தன்மமாகையாற் கூடாது.

வினா. டமரகவாக்கியமாவதென்ன,

விடை. டமரகவாக்கியமாவதேதெனின், பெந்தத்தினாற் பிரபஞ்சத்தில் விரிந்தமனம் சாதனத்திற் குவிந்து சாத்தியத்தில் பிரவிர்த்தி வழிவிரிந்து நிற்பதே முத்தியென்பது, நித்தியானந்த சுகஞ் செனித்தும் சீவன் முத்தியில்லாத படியினால் அது கூடாது.

வினா. மயித்திரிவாக்கியமாவதென்ன,

விடை. மயித்திரிவாக்கியமாவதேதெனின், சம்சார சாதன சாத்திக விதேக பரியந்தம் சுத்த சாத்தீக வியற்கையா யிருப்பதே முத்தியென்பது, வஸ்து குணாதீதமாகையால் அது கூடாது.

வினா. வெதிரேகவாக்கியமாவதென்ன,

விடை. வெதிரேகவாக்கியமாவதேதெனின், சமஸ்த தேகாதிப் பிரபஞ்சங்களும் நாசமடையுமென்று அதில் பற்றற்று அவிநாசியாகிய வஸ்துவைப் பற்றுவதே முத்தியென்பது, பற்றுதலும் பற்றப்படுகிறதுமாகியவிரண்டுவிதமு மிருக்கையால் அது கூடாது.

வினு. திதிவாக்கியமாவதென்ன,

விடை. திதிவாக்கியமாவதேதெனின், சகல தத்துவங்களிலும்வஸ்துவிருந்து மறியாதிருப்பதே பந்தம் அறிந்ததே முத்தியென்பது, தத்துவ மிருக்கையினுல் அது கூடாது.

வினு. நேதிவாக்கியமாவதென்ன,

விடை. நேதிவாக்கியமாவதேதெனின், மனோவிந்திரிய பிராணுதிகளை நேதிசெய்து சேடித்து நின்ற வாத்மாவை யறிவதே முத்தியென்பது, வஸ்து அகணிதமாகையாலும் ஏகமேவாத்துவிதம் பிரமமென்னும் வாக்கியத்தினுலும் அதுகூடாது.

வினு. லட்சியவாக்கியமாவதென்ன,

விடை. லட்சியவாக்கியமாவதேதெனின், பிரமலட்சணங் கொண்டு பிரமத்தையறிவதே முத்தியென்பது, வஸ்து லட்சணஞ் சூன்யமாகையால் அதுகூடாது.

வினு. வெகுர்வாக்கியமாவதென்ன,

விடை. வெகுர்வாக்கியமாவதேதெனின், வேதாகம சாஸ்திரங்களனைத்தும் ஆராய்ந்து அவற்றிற் சொல்லுகிற நிலைகளெல்லாம் ஏகமாய் அவிரோதமாய் சித்தாந்தப் படுத்துவதே முத்தியென்பது, விசேஷிவஸ்துவைக் குருமுகமாயறிந்து சர்வோன்னதமான நிலையைப் பெறுவதே மோட்சமென்கையால் அதுகூடாது.

வினு. அகண்டவாக்கியமாவதென்ன,

விடை. அகண்டவாக்கியமாவதேதெனின், வஸ்து அகண்டமென்றும் பிரபஞ்சங் கண்டமென்றுங் கண்டு சாட்சிமாத்திரமாய் நிற்பதே முத்தியென்பது, சாட்சாத்காரத்தில்இரண்டாம்வஸ்துவும் திருஷ்டியுமில்லாதபடியினுல்அதுகூடாது.

வினு. கமலவாக்கியமாவதென்ன,

விடை. கமலவாக்கியமாவதேதெனின், ஆதித்த சந்நிதானத்தில் பத்மகுசும மலருவதுபோல முத்தித்திசையிற் பிரம சந்நிதானத்திற் திரிபுடி சேஷ்டிக்குமென்றறிகிறதேமுத்தியென்பது, வஸ்துவுக்கவத்தாத்திரய மின்மையினுலும் சாட்சாத்காரதிசையிற் சச்சிதானந்தலட்சணமும் நசிக்கின்ற படியினுலும் அது கூடாது.

வினு. வாச்சியவாக்கியமாவதென்ன,

விடை. வாச்சியவாக்கியமாவதேதெனின், பிரமம் உபாதிகளை

விட்டும் விட்டிராதென்றறிவதே முத்தியென்பது, பிரமம் உபாதிரகிதமாகையால்அதுகூடாது.

வினா. சமரசவாக்கியமாவதென்ன,

விடை. சமரசவாக்கியமாவதேதெனின், பிரமத்தைப்போற் சீவனிருக்குமென்று நிச்சயிப்பதே முத்தியென்பது, துவிதமாகையால் அது கூடாது.

வினா. சமஷ்டிவாக்கியமாவதென்ன,

விடை. சமஷ்டிவாக்கியமாவதேதெனின், சர்வமுஞ் சத்தாமாத்திரமாய் நிச்சயிப்பதெ முத்தியென்பது, மாயையுண் டென்கையால் அது கூடாது.

வினா. நிர்க்குணவாக்கியமாவதென்ன,

விடை. நிர்கருணவாக்கியமாவதேதெனின், குணாதீதவஸ்துவே முத்தியென்பது, அவ்வியத்தமாகையால் அது கூடாது.

வினா. அபாவவாக்கியமாவதென்ன,

விடை. அபாவவாக்கியமாவதேதெனின், வாக்கிய மெல்லாஞ் சொல்லும்பொருளுமாகவிருக்கும் நாமரூபமெல்லா மித்தையாகையால் நாமரூபரகிதவஸ்துதானுயிருப்பதேமுத்தியென்பது, வாக்கியத்துக்கனவஸ்தாதோஷம்வருகையால்அதுகூடாது.

வினா. நிவிர்த்திவாக்கியமாவதென்ன,

விடை. நிவிர்த்திவாக்கியமாவதேதெனின்,பிரமத்திற்குமாயாலட்சணமில்லையென்கிறதேமுத்தியென்பது, பிரமத்தைத்தவிர மாயையொன்றுண்டென்பவன் பிரமத்துரோகியென்று சுருதி சொல்லுகையினுல்அதுகூடாது.

வினா. மார்க்கவாக்கியமாவதென்ன,

விடை. மார்க்கவாக்கியமாவதேதெனின், யாதோர்சுபானுபவத்தால் மகத்துக்கள்சந்தோஷித்தார்களோ அந்தச்சுவானுபூதி நிலைநிற்பதேமுத்தியென்பது, சுவானுபவத்தனக்கின்மையினுலது கூடாது.

வினா. அதோவாக்கியமாவதென்ன,

விடை. அதோவாக்கியமாவதேதெனின், பிரமத்திலுற்பத்திக்கிரமமெல்லாமறிந்து சமஸ்தமும் நமதுற்பத்தி விலாசமென்றறிவதே முத்தியென்பது, உபக்கிரமம் உபசங்காரமாகிய விரண்டுமித்தையாகையால்அதுகூடாது.

வினா. ஆசிரயவாக்கியமாவதென்ன,

விடை. ஆசிரயவாக்கியமாவதேதெனின், பிரமஞானியைக் குணாதீதனென்றும் அதிவர்ணாசிரமியென்றும் இன்னும்பல நாமங்களாற்சுருதிபுகழ்ந்து சொல்லுகையினால் அப் பிரமஞானியைத் தரிசிப்பதேமுத்தியென்பது, நாமரூபமெல்லாமித்தையாகையாலும் பிரமஞானிக்குநம்மாணையாகச் சரீரத்திரயங்களில்லாதபடியினாலும் அது [கூடாது

வினா. வாசகவாக்கியமாவதென்ன,

விடை. வாசகவாக்கியமாவதேதெனின், சுருதிவாக்கியங்களில்விளங்கும்பொருளேமுத்தியென்பது, வாக்கியங்கள்மாயாகாரியமாகையால்அதுகூடாது.

வினா. நாஸ்திவாக்கியமாவதென்ன,

விடை. நாஸ்திவாக்கியமாவதேதெனின், எல்லாமழிகிற சர்வசங்காரகாலத்திலொன்றுமில்லையென்றறிவதேமுத்தியென்பது, பிரமமுண்டென்றுவிளங்குகிறபடியால்அதுகூடாது.

வினா. நீலோற்பலவாக்கியமாவதென்ன,

விடை. நீலோற்பலவாக்கியமாவதேதெனின், குணகுணிபோல வஸ்துவுடன் பிரகிருதிசேர்ந்திருக்குமென்றறிவதே முத்தியென்பது, வஸ்து குணாதீதமாகையால்அதுகூடாது.

வினா. கோசரவாக்கியமாவதென்ன,

விடை. கோசரவாக்கியமாவதேதெனின், வாக்கியத்தைக்கொண்டு பொருள் நிச்சயம்பண்ணுவதேமுத்தியென்பது, பிரமம்அகோசரமாகையால்அதுகூடாது.

வினா. முத்திவாக்கியமாவதென்ன,

விடை. முத்திவாக்கியமாவதேதெனின், பந்தநிவிர்த்தியே முத்தியென்பது, பந்தமுத்தியில்லாதபடியினால்அதுகூடாது.

வினா. சம்சயவாக்கியமாவதென்ன,

விடை. சம்சயவாக்கியமாவதேதெனின், பிரமம் அநிர்வஜன்யமென்றறிகிறதேமுத்தியென்பது, பிரமத்திற்கும்மாயைக்கும்ஏகலட்ணங்கூடாதாகையால் அதுகூடாது.

வினா. விசிஷ்டவாக்கியமாவதென்ன,

விடை. விசிஷ்டவாக்கியமாவதேதெனின், பிரமத்தைப் பிரகிருதிவிடாதென்றறிவதேமுத்தியென்பது, பிரமத்துடன் பிரகிருதிகூடுமென்றுசொல்லுவதுகூடாது.

வினு. சாமானியவாக்கியமாவதென்ன,

விடை. சாமானியவாக்கியமாவதேதெனின், சர்வத்திலும் பிரமமுண்டென்றறிவதேமுத்தியென்பது, பிரமத்தைத்தவிரச் சர்வமென்றொன்றில்லை யாகையால்அதுகூடாது.

வினு. நிச்சயவாக்கியமாவதென்ன,

விடை. நிச்சயவாக்கியமாவதேதெனின், பிரமம்நிச்சய ஞானத்தில்விளங்குமென்றறிகிறதேமுத்தியென்பது, பிரமம் அசிந்திதமாகையால்அதுகூடாது.

வினு. சங்காரவாக்கியமாவதென்ன,

விடை. சங்காரவாக்கியமாவதேதெனின், ஞானுக்கினியால்ஞேயஞ்ஞானநசிக்கில் பிரமோதயமாமென் றறிகிறதே முத்தியென்பது, காலத்திரயத்திலும் பிரமம் உதயாஸ்தமன ரகிதமாய் விளங்குகிறபடியால்அதுகூடாது.

வினு. மஞ்சுவாக்கியமாவதென்ன,

விடை. மஞ்சுவாக்கியமாவதேதெனின், அஞ்ஞான வாவரணத்தினுற் பிரபஞ்சந் தோற்றுதிருக்கிறதே முத்தியென்பது, அஞ்ஞானவாவரணநிவிர்த்தியே மோட்சமாகையால்அதுகூடாது.

வினு. ஓமவாக்கியமாவதென்ன,

விடை. ஓமவாக்கியமாவதேதெனின், பிரபஞ்சம் க்ஷணேக்ஷணே தோற்றும்போதெல்லாம் ஞானுக்கினியினுற் சுட்டு ஞானவிலாசமா யிருப்பதே முத்தியென்பது, அது கர்மபந்த பிராயச்சித்தமாதலாற் கூடாது.

வினு. அம்சவாக்கியமாவதென்ன,

விடை. அம்சவாக்கியமாவதேதெனின், அம்சபட்சி ஜலத்தைவிட்டுப் பாலைக் கிரகிப்பதுபோலப் பிரமஞானி பிரபஞ்சத்தோடுகூடியிருக்கையிலும் பிரமமாத்திரமாக விளங்குவதேமுத்தியென்பது, பிரம ஞானிக்குப் பிரபஞ்சமில்லை யாதலால் அது கூடாது.

வினு. சாம்பவிவாக்கியமாவதென்ன,

விடை. சாம்பவிவாக்கியமாவதேதெனின், பிரமஞான வியாபகமே ஜெகத்தானதால் அந்தஜெகத்தோற்றமே முத்தியென்பது, ஞானம் பரிணுமரகிதமாதலால் அது கூடாது.

வினு. சிக்ஷவாக்கியமாவதென்ன,

விடை. சிக்ஷவாக்கியமாவதேதெனின், ஞானுசிரியனாயும் பி

ரமமாகப் பாவித்து அவருக் கனுகூல விருத்தியாய் நடந்து அவ ரைப் பூசிப்பதே முத்தியென்பது, பிரமத்தையறிந்த ஞானாசிரிய ரையும் பிரமமாகப் பாராமல் பரோட்சமாய்ப் பாவிக்கையால் அது கூடாது. ஆறாவது.

இவையல்லாமலும் இவைகட்குக் கீழ்ப்பட்ட முத்திகளைச் சொல்லும் வாக்கியங்களு மின்ன மனேக முண்டென்று சொல்லியருளி அதற்குமேல் மகாவாக்கியமுறைமையை யுபதேசிக்கத்தொடங்கினர்.

மகாவாக்கியவிவேகம்.

வினா. மகாவாக்கியமாவதென்ன,

விடை. ஓய் ஜனகாதிகளே மகாவாக்கிய மாவது சதுர்விதபேத மும் அஷ்டவித சுலோகமு மாகவிருக்கும். அதெப்படியெனின், பிரஞ்ஞானம் பிரமம், அகம்பிரமாஸ்மி, தத்துவமசி, அயமாத்மாப் பிரமமென்று நான்குபேதமாம்.

வினா. அஷ்டவிதசுலோகமாவதென்ன,

விடை. அஷ்டவிதசுலோகமாவதென்னவெனின்,முதலாவது,திரி யமாகிய ஜீவேஸ்வர ஜகத்தானது எந்தவறிவினால் பஞ்சேந்திரியங்க ளுக் கறியப் படுகின்றதோ அந்தவறிவே பிரஞ்ஞானமென்பது.

இரண்டாவது, பிரமாதி இந்திராதி தேவதைக ளிடத்தும் மனு ஷாதி அசுராதி சதுஷ்ப்பாத மிருக பட்சிகளாகிய சகல சீவகோடிக ளிடத்தும் நம்மிடத்தும் எஃது, ஏகமாய் அகண்ட சொரூபமாய் க வளீ கரித்திருக்கின்றதோ அஃதே பிரமமென்பது.

மூன்றாவது, பரிபூரணமா யெல்லாவற்றிற்கு மேலாகிய வாத் மாவே தேகாதி சகல ஞானங்கட்கு மதிகாரியாயிருக்கிற புத்திக்குச் சாட்சியாய்ப் பிரகாசித்து நிற்கும் ஆதலா லஃதே அகமென்பது.

நான்காவது, அவ்வறிவே பரிபூரணமா யெல்லாவற்றிற்குமேலா ய் பிரகாசிக்கின்ற பிரமமென்பது அஸ்மியென்னும் பதத்தினால் வி சாரிக்கப் பிரமமே நாமென்றாயிற்று.

ஐந்தாவது, ஏகமாய் இரண்டற்றதாய் நாமரூப மற்றதாய் நிச் சலமாயுள்ளது எந்தச்சத்தோ அது சிருஷ்டிக்கு முன்னும்பின்னும் இப்போதும் எப்போதும் எவ்விடத்திலும் பிரகாசியா நிற்கின்றது அஃதே தத் என்பது.

ஆறுவது, கேட்கிறவனு யிருப்பவனுடைய தேகேந்திரியா தீதமா யிருக்கிற வஸ்து எஃதோ அஃதே தொம் என்பது அசியென்னும் பதத்தினல் விசாரிக்க அது நீயாயினையென் றாயிற்று.

ஏழாவது, சுயம்பிரகாசமாய் அபரோட்சமா யிருக்கிற தெஃதோ அஃதே அம்மென்பது. அகங்காரமுதல் சரீரபரியந்தத்திற்கும் எப்போதும் பிரியமுள்ளதா யிருக்கிற வறிவு எஃதோ அஃதே ஆத்மாவென்பது.

எட்டாவது, பார்க்கப்படுகிற சகளமாயிருக்கிற ஜெகத்திற்குச் சாட்சியாய் நித்தியமங்களகல்யாணசொரூபமாய் பிரமசப்தத்தினல் வர்ணிக்கப்படுவதாயிருக்கின்ற பொருளெஃதோ அஃதே ஸ்வயம்பிரகாசமாய்விளங்குகிறபிரமமென்பது. இவையே அஷ்டவித சுலோகமாம் இவைதான்கையும் மகாவாக்கியமென்று பொதுப்படச்சொல்லப்படும். இவற்றுள் சாமவேதமகாவாக்கியத்தைமாத்திரம் ஒருமொழியென்றுசொல்லப்படும். இதுவுமல்லாமல் இவ்வாக்கியங்கள் அனந்தசமயங்களையும் அனந்தமுத்திகளையுஞ்சொல்லுமாகையால்இதுகளுங்கூடாது.

வினு: ஆனல்- சித்தாந்தமாவதென்ன,

விடை. சித்தாந்தமாவதென்னவெனின், ஈஸ்வரானுக்கிரகத்தினுலும்மகான்கள்தரிசனத்தினுலும்சற்குருகடாக்ஷத்தினுலும்மோக்ஷசாதனம்பெற்றுமுற்கூறிய வாக்கியமுத்தி கிருதகிருத்திய அனுபவசாட்சாத்காரபலத்தையடையவேண்டியது.மேலும் இந்தவாக்கியவுபதேசத்தைப்பெறும் அதிகாரிகளும் ஐந்துபேதமாயிருப்பார்கள்.

அதிகாரபேதம்.

வினு. அதிகாரபேதமாவதென்ன,

விடை. அதிகாரமாவதென்னவெனின், சாங்குசித்தல்-காருண்யன்-சமரசன்-சம்பவன்-மந்தனென்று-ஐந்துபேதவதிகாரிகளாம், அவர்களுள் சாங்குசித்தனுக்கு, அங்காங்க பஞ்சவுபக்கிரமவயிக்யசமாதியான ஆகமசித்தாந்தத்தையும் - காருண்யனுக்கு, காரண காரிய பஞ்சவுபக்கிரம வயிக்ய சமாதியான வேதாந்த சித்தாந்தத்தையும் - சமரசனுக்கு, வேதாகம சமரசசித்தாந்தமான இருபத்தைந்துபடியொழுங்குசமாதியையும் - சம்பவனுக்கு, சுத்தசைவசித்தாந்தமென்னுஞ் சிவஞானபோதக தக்ஷிணுமூர்த்த ஞானமுத்திராமோன சமாதியையும்- மந்த

னுக்கு, இதிகாச புராண சித்தாந்தமான விஷயலய சமாதியையும் அ னுக்கிரகிக்கவேண்டும்.

வினா. இந்தவதிகாரபேதமறிவதெங்ஙனம்,

விடை. இந்தவதிகாரிகளின்பேதமறியும்வகையெங்ஙனமெனின் சற்குருசந்நிதானப்பட்டவன் இருதயத்திலுள்ளபடி ஞானோதயமா கிறவிலக்கணமுடையவன் சாங்குசித்தன், சற்குரு சந்நிதானப்பட்டு வாக்கியம்பெற்று அந்தக்குருவாக்கியமே சுருதியாகக்கொண்டு சுவா னுபூதியடைந்து இங்ஙனங்குருவாக்கிய சுருதிவாக்கியமாகிய விருவ கைச்சம்மதப்படி அகத்தில்விளங்கு மிலக்கணமுடையவன் காருண்ய ன், சகலவேதாகம சாஸ்திரசமயநிலைகளும் பட்சபாதமின்றிச் சமமா கக்காணு மிலக்கண முடையவன் சமரசன், தான் நின்றநிலையே நிலை, தால் கொண்ட சமயமே சமயம், அவைகட்கேற்பத் தான் படித்த சாஸ்திரமே சாஸ்திரம், மற்றெல்லாம் நிலையல்லவென்று கண்டனம் பண்ணு மிலக்கண முடையவன் சம்பவன், சகல சமயங்களையுஞ் சா ஸ்திரங்களையும் பார்த்து ஒன்றிலும் நிலைகொள்ளாத வனுபவ விலக்க ண முடையவன் மந்தன், ஆகிய வைந்ததிகாரிகளுக்கு மேற்சொல்லி யபடி ஐந்துவிதமா யனுக்கிரகிக்க வேண்டியது.

சாங்குசித்தனுக்கு உபதேசிக்குமுறை.

வினா. ஆனல் இவ்வைந் ததிகாரிகளுக்கும் அவ்வைந்துவிதசமா திகளை யனுக்கிரகிக்கு முறைமை யெப்படி,

விடை. அஃதெப்படியெனின், சாங்கு சித்தனுக்கு வேதாகம சம்மதப்படி வாக்கியாதீத மென்றொரு வாக்கியமுண்டு அது தொந் ததசியதிநிசமென்பது, அஃது- தொம், தத், அசி, அதி, நிஜ, என்று ஐந்துபதமாயிருக்கும். அவற்றுள் தொம்பதத்தில் தூலசரீரம், சூட் சுமசரீரம், காரணசரீரம், சீவன்,கூடஸ்தர். ஆக (ரு) தத்பதத்தில்- வி ராட்டு, இரணிய கருப்பம், மாயை, ஈஸ்வரன், பிரமம். ஆக (ரு) அசி பதத்தில்-சத்து, சித்து, ஆனந்தம், பரப்பிரமம், சர்வசாட்சி. ஆக (ரு) அதிபதத்தில்- சுத்தம், சூன்யம், சுபாவம், ஒழிவு, அதீதம். ஆக (ரு) நிசபதத்தில்-யதார்த்தம், ரகசியம், அறுதி,ஒடுக்கம்,மோனம்ஆக (ரு) இவற்றுள் தூல சரீரம் (ரு) சூட்சும சரீரம் (ரு) காரண சரீரம் (ரு)

அபிமானி (ரு) சாட்சி (ரு) ஆ (உரு) இதுவே சாங்குசித்தனுக் கரு கமான அங்காங்க பஞ்ச வுபக்கிரம அயிக்ய சமாதியாம்.

வினு. ஆனலஃதுபதேசிக்கு முறைமையில் முற்கூறிய இருப த்தஞ்சுக்கும் அங்காங்க பஞ்ச வுபக்கிரம மெப்படி,

விடை. அஃதெப்படியெனின், பிராய்ச்சித்த வானுக்குச் சுத்த னென்று நாமமுண்டானதுபோல யதார்த்தத்திற் சுத்தமும், சுத்தனு க்கு அழிவற்றவனென்று நாமமுண்டானது போலச் சத்தில் விராட் டும், மண்ணிற் கடமுண்டானதுபோல விராட்டில் தூலசரீரமு மு ண்டாம்.

சொல்லில்லாத விடத்தில் பொருளில்லா ததுபோல இரகசியத் திற் சூன்யமும், கேவலத்தி லறிவு செனித்ததுபோற் சூன்யத்திற் சித் தும், அறிவில் கரணஞ் செனித்ததுபோற் சித்தி லிரணிய கருப்பமு ம், சூக்குமையிற் பைசந்தி செனித்ததுபோ லிரணிய கருப்பத்திற் சூட்சும சரீரமு முண்டாம்.

அறுதிச் சொல்லுடைய வனுக்குச் சுபாவியென்று நாமமுன் டானதும்பா லறுதியிற் சுபாவமும், நிர்மல சித்தத்திற் சுகமுண்டா வதுபோற் சுபாவத்தி லானந்தமும், சுதசித்தத்திற் சுதந்தரயுத்தி ஜெ னித்ததுபோ லானந்தத்தில் மாயையும், தோப்பினிடத்துத் தனிமர ங் கண்டதுபோல மாயையில் அவித்தையு முண்டாம்.

அசைவின்றிய விடத்திற் றொழிலில்லாததுபோல ஒடுக்கத்தி லொழிவும், ஒழிவுவந்தவனுக்குச் சுழுத்தியன்போற் பரவசனென்னு நாமமுண்டானதுபோல ஒழிவிற் பரப்பிரமமும், ஆகாசம் நிர்ம லக் கண்ணாடியிற் பிரதி பலித்ததுபோற் பரப்பிரமத்தி லீசுரனும், சுதந்தரனுக்குப் பந்தசத்தி நீங்கினவுடன் சுதந்தரவானென்னு நாம முண்டானதுபோல ஈசுரனிடத்திற் சீவனுமுண்டாம்.

இரகசியத்தி லதீதமென்னும் வாக்கியமுண்டானதுபோல மோ னத்தி லதீதமும், பர்வதவுச்சி வாசிக்குப் பர்வத தரிசனனென்னு நா மமுண்டானதுபோ லதீதத்திற் சர்வசாட்சியும், மகாகாசத்தில் மடா காச முண்டானதுபோற்சர்வசாட்சியிற் பிரமமும், மடாகாசத்திற்க டாகாச முண்டானதுபோற் பிரமத்திற் கூடஸ்தரு முண்டாம். இது வே அங்காங்க பஞ்ச வுபக்கிரமம்.

வினா. அயிக்யமெப்படி,

விடை. அயிக்ய மெப்படியெனின், தூலசரீரத்தை விராட்டி லும், விராட்டைச் சத்திலும், சத்தைச் சுத்தத்திலும், சுத்தத்தை ய தார்த்தத்திலும், சூட்சும சரீரத்தை இரணிய கருப்பத்திலும், இரணி யகருப்பத்தைச் சித்திலும், சித்தைச் சூன்யத்திலும், சூன்யத்தை இரகசியத்திலும், காரண சரீரத்தை மாயையிலும், மாயையை ஆன ந்தத்திலும், ஆனந்தத்தைச் சுபாவத்திலும், சுபாவத்தை அறுதியிலு ம், சீவனை ஈஸ்வரனிலும், ஈஸ்வரனைப் பரப்பிரமத்திலும், பரப்பிர மத்தை ஒழிவிலும், ஒழிவை ஒடுக்கத்திலும், கூடஸ்தனைப் பிரமத்தி லும், பிரமத்தைச் சர்வ சாட்சியிலும், சர்வசாட்சியை அதீதத்திலு ம், அதீதத்தை மோனத்திலுமொடுக்க- ஒடுங்காமற்சேடித்திருந்த து நிசபதமைந்து,இவ்வைந்தில் யதார்த்தம் ஸ்தூல சரீரமாகவும், இரகசி யம் சூட்சும சரீரமாகவும், அறுதிகாரணசரீரமாகவும்,ஒடுக்கம் அபி மானியாகவும், மொனம் சீவசாட்சியாகவு மிருந்து- வேண்டியபடி ச ஞ்சரிப்பன்.

காருண்யனுக்கு உபதேசிக்குமுறை.

வினா. காருண்யனுக் கனுக்கிரகிக்கு முறைமையெப்படி,

விடை. காருண்யனுக் கருகமான காரண காரியபஞ்ச வுபக்கிர மமெப்படியெனின், சூரியபிம்பம் மலினமான கண்ணாடியிற்பிரதி பிம்பித்ததுபோற் சீவசாட்சியிற் சீவனும், விஷந்தீண்டினவனுக்கு மூர்ச்சை யுண்டானதுபோற் சீவனி லவித்தையும், மூர்ச்சை தெளி வில் நினைவுண்டானதுபோ லவித்தையிற் சூட்சுமசரீரமும், நினைவில் சொப்பன சரீர முண்டானதுபோற் சூட்சும சரீரத்திற் றூலசரீரமு முண்டாம்.

சூரியபிம்பம் நிர்மலமான கண்ணாடியிற் பிரதிபிம்பித்ததுபோ ற் பிரமத்தி லீஸ்வரனும், ஆத்மாவுக்குஆத்மஞானமுண்டானதுபோ லீசனில் மாயையும், ஞானவானுக் கிச்சை யுண்டானதுபோல மா யையி லிரணிய கருப்பமும், இச்சை யுடையவ னிடத்திற் கிருத்திய முண்டானதுபோ லிரணிய கருப்பத்தில் விராட்டு முண்டாம்.

காட்டத்தி லக்கினி பிரவேசித்தபோது காட்டமென்பதுபோய் அக்கினியென்று பேர்வந்ததுபோற் சத்தி வியாபகமாகிய சர்வசாட்

சியிற் பரப்பிரமமும், அறிவிற் சாந்தகுண முண்டானதுபோற் பரப்பிரமத்திலானந்தமும், சாந்தியி லிராசத முண்டானதுபோலானந்தத்திற் சித்தும், இராசதத்தில் தாமச முண்டானதுபோற் சித்திற் சத்து முண்டாம்.

அதீதாவஸ்தை வந்தவனுக்குக் காரண கிருத்தியவொழி வுண்டானதுபோ லதீதத்தி லொழிவும், காரணவொழிவில் உள்ளஞ்சுபாவமாயிருக்கிறதுபோ லொழிவிற் சுபாவமும், சுபாவ நிச்சிந்தை யுடையவனுக் கொரு தோற்றரவு மில்லாததுபோல் சுபாவத்திற் சூன்யமும், சூன்யகாரணமேசுத்தமானதுபோற்சூன்யத்திற் சுத்தமுமுண்டாம்.

பேச்சற்றதே மூடியென்றுபெயர்பெற்றதுபோல மோனத்திலொடுக்கமும், முடிமேல் அர்த்தமெய்பதுபோ லொடுக்கத்தி லறுதியும், அதீதமே சொல்லற்ற பொருளானதுபோ லறுதியி லிரகசியமும், அதிரகசியமே யதார்த்தமென்றுபெயர் பெற்றதுபோல இரகசியத்தில் யதார்த்தமு முண்டாம். இதுவே காரண காரிய பஞ்சவுபக்கிரமம்.

வினா. ஆனல்அயிக்யமெப்படி,

விடை. அயிக்யமெப்படியெனின், தூலத்தைச் சூட்சுமத்திலும், சூட்சுமத்தைக்காரணத்திலும், காரணத்தைச்சீவனிலுஞ், சீவனைக்கூடஸ்தரிலும், விராட்டைஇரணியகருப்பத்திலும், இரணியகருப்பத்தைமாயையிலும், மாயையையீசுரனிலும், ஈசுரனைப்பிரமத்திலும், சத்தைச்சித்திலும், சித்தைஆனந்தத்திலும், ஆனந்தத்தைப்பரப்பிரமத்திலும், பரப்பிரமத்தைச்சர்வசாட்சியிலும், சுகத்தைச்சூன்யத்திலும், சூன்யத்தைச்சுபாவத்திலும், சுபாவத்தைஒழிவிலும், ஒழிவைஅதீதத்திலும், யதார்த்தத்தைஇரகசியத்திலும், இரகசியத்தைஅறுதியிலும், அறுதியைஒடுக்கத்திலும், ஒடுக்கத்தைமோனத்திலும், ஒடுக்கி- ஒடுங்காமற் சேடித்திருந்த பஞ்சசாட்சியுந்தானுய் தொம்பதலட்சியமான சீவசாட்சிதானுயிருந்து வாச்சியமான சரீரத்திரயவபிமானியையும், தற்பதலட்சியமானபிரமந் தானுயிருந்து வாச்சியமான சரீரத்திரயவபிமானியையும், அசிபதலட்சியமான சர்வசாட்சி தானுயிருந்து வாச்சியமானசரீரத்திரயவபிமானியையும், அதிபதலட்சியமானவதீதந்தானுயிருந்து வாச்சியமானசரீரத்திரய வபிமானியையும், நிசபதலட்சியமானமோனந்தானுயிருந்து வாச்சியமான சரீரத்திரயவபிமானியையும், பார்த்துக்கொண்டுவேண்டியபடிசஞ்சரிப்பன்.

சமரசனுக்கு உபதேசிக்குமுறை.

வினா. சமரசனுக்கனுக்கிரகிக்குமுறைமையெப்படி,

விடை. சமரசனுக்கருகமானவேதாகமசமரசசித்தாந்த மனுக்கிரகிக்குமுறைமையெப்படியெனில்,படியொழுங்குசமாதி இருபத்தைந்துமறிவித்துச் சித்தநிரோத முண்டாகும்பொருட்டுச்- சமாதிகளின்தரிசனமும்-நாமமும்-மறைப்பும்-நிவிர்த்தியும்-குற்றமும்- பகிர்முகத்திரிபுடியும்-அந்தர்முகத்திரிபுடியும்-அவற்றையறியுஞ்சத்தியும்-சாதனசம்பிரதாயபேதமும்-சத்திபேதமும்- சைதன்யபேதமும்- இடையிற்சரீரம்விழுந்தாற்பலமும்- சமாதி சித்திபேதமுமாகிய பதின்மூன்றுவகையு மறிவிக்கவேண்டும்.

வினா. இவற்றுள் சமாதிதரிசனமும் நாமமுமெது,

விடை. சமாதிதரிசனமும் நாமமுமெதுவெனின், இந்திரியவிஷயமற்றுத் தேகஞானமாத்திரமாயிருப்பதே சீவஸ்தூலசரீரதரிசனம், இதற்குப் பூதகாரியசமாதியென்று பெயர்.

தேகஞானமின்றியமனோசஞ்சலமே சீவசூட்சுமசரீரதரிசனம், இதற்கு விஷயலயசமாதியென்று பெயர்.

மனோலயமானவந்தகாரமே சீவகாரணசரீரதரிசனம், இதற்குச் சித்தநிரோதசமாதியென்றுபெயர்.

அஞ்ஞானசுகசொரூபவறிவே சீவதரிசனம், இதற்குப் போதசமாதியென்று பெயர்.

அந்தகாரத்தையறியுமறிவே கூடஸ்ததரிசனம், இதற்குச் சித்தானுவித்தசமாதியென்று பெயர்.

இந்தச்சாட்சிஞானத்தால் விசுவத்தையறிந்து அஃதுதானனதே ஈஸ்வரஸ்தூலசரீரதரிசனம், இதற்குவிஸ்வரூபசமாதியென்றுபெயர்.

விசுவவியாபகமே ஈஸ்வரசூட்சுமசரீரதரிசனம், இதற்கு விஸ்வவியாபகசமாதியென்று பெயர்.

விசுவலயமாய்சுத்தபடிகம்போல நிர்மலமாயிருப்பதே ஈஸ்வரகாரணதரிசனம், இதற்குவிசுவலயசமாதியென்று பெயர்.

நிர்மலசுகசொரூப சைதன்யந்தானனதே ஈஸ்வரதரிசனம், இதற்குச் சிவஞானசமாதியென்று பெயர்.

நிர்மலத்தையறிந்தவறிவு வியாபகந்தானனதே பிரமதரிசனம், இதற்குச் சத்தானுவித்தசமாதியென்று பெயர்.

அந்தவறிவு சதரூப ஞானந்தானனதே சித்ரூப தரிசனம் இதற்குத் தத்துவலய சமாதியென்று பெயர்.

அந்தச்சத்து சித்ரூபந் தானனதே சித்ரூபதரிசனம் இதற்குச் சவிகற்ப சமாதியென்று பெயர்.

அந்தச்சித்து அதீத சுகசொரூபந் தானனதே ஆனந்தரூப தரிசனம் இதற்கு ஆனந்தவேத்திய சமாதியென்று பெயர்.

சுகாதீதபரவசந் தானனதே பரப்பிரமதரிசனம் இதற்கு நிருவிகற்ப சமாதியென்று பெயர்.

பரவசத்தை யறிந்தவறிவு தானனதே சர்வசாட்சி தரிசனம் இதற்குச் சஞ்சார சமாதியென்று பெயர்.

எதிரற்றுத் தன்மய ஞானந் தானனதே சுத்ததரிசனம் இதற்கு ஆரூட சமாதியென்று பெயர்.

அந்த ஞானமற் றிருப்பதே சூனியதரிசனம் இதற்குச் சர்வசூனிய சமாதியென்று பெயர்.

அதில் நிச்சயம் பிறந்து அந்த நிச்சயந் தானனதே சுபாவதரிசனம் இதற்கு விகற்பலய சமாதியென்று பெயர்.

அவ்வனுபவத்தில் விஷய வாசனைவரும் வரின் அவ்வாசனையற்று ஒருவாசனையும் வராமலிருப்பதே ஒழிவுதரிசனம் இதற்கு ஒழிவுசமாதியென்று பெயர்.

சர்வவாசனையுந் தன்மயமானதே அதீததரிசனம் இதற்குஉன்னத சமாதியென்று பெயர்.

அதிற் சந்தேக விபரீதமில்றி யதார்த்தஞானஞ் செனித்ததே யதார்த்த தரிசனம் இதற்கு யதார்த்த சமாதியென்று பெயர்.

அந்த ஞானநிசயமே இரகசிய தரிசனம் இதற்கு இரகசியசமாதியென்று பெயர்.

அதற்குமேல் வேதாகமஞ் சொல்வதற் கிடமில்லை யென்றறிந்து சாஸ்திர வாசனையைச் சுத்தமாய் விட்டதே அறுதிதரிசனம், இதற்கு அறுதி சமாதியென்று பெயர்.

அந்த ஞானரூடமே ஒடுக்க தரிசனம், இதற்கு ஒடுக்கசமாதியென்று பெயர்.

அந்தப் பிரமப் பிரகாச தேஜோ ஞானலயமே மோனதரிசனம், இதற்கு மோன சமாதியென்றுபெயர் இதுவே முடிந்தநிலை.

வினு. இந்தச் சமாதிகளுக்கு மறைப்பும் நிவிர்த்தியுமெது,

விடை. அவை யெதுவெனில், சிவஸ்தூல சரீரத்தை மறைத்தது தமோவவித்தை, நிவிர்த்தி தமோவித்தை.

சிவசூட்சும சரீரத்தை மறைத்தது ரஜோவவித்தை, நிவிர்த்தி ரஜோவித்தை.

சிவகாரண சரீரத்தை மறைத்தது சத்துவ வவித்தை, நிவிர்த்திசத்துவவித்தை.

சிவனை மறைத்தது அவ்வியத்த வவித்தை, நிவிர்த்தி அவ்வியத்தவித்தை.

கூடஸ்தனை மறைத்தது சுத்தவவித்தை, நிவிர்த்தி சுத்தவித்தை.

ஈஸ்வர ஸ்தூல சரீரத்தை மறைத்தது தமோவித்தை, நிவிர்த்தி தமோஞானம்.

ஈஸ்வர சூட்சும சரீரத்தை மறைத்தது ரஜோவித்தை, நிவிர்த்தி ரஜோ ஞானம்.

ஈஸ்வர காரண சரீரத்தை மறைத்தது சத்துவவித்தை, நிவிர்த்தி சத்துவ ஞானம்.

ஈஸ்வரனை மறைத்தது அவ்வியத்தவித்தை, நிவிர்த்தி அவ்வியத்த ஞானம்.

பிரமத்தை மறைத்தது சுத்தவித்தை, நிவிர்த்தி சுத்தஞானம்.

சத்தை மறைத்தது தமோ ஞானம், நிவிர்த்தி தமோஆனந்தம்.

சித்தை மறைத்தது ரஜோ ஞானம், நிவிர்த்தி ரஜோ ஆனந்தம்.

ஆனந்தத்தை மறைத்தது சத்வஞானம், நிவிர்த்திசத்வஆனந்தம்.

பரப்பிரமத்தை மறைத்தது அவ்வியத்த ஞானம், நிவிர்த்திஅவ்வியத்த ஆனந்தம்.

சர்வ சாட்சியை மறைத்தது சுத்த ஞானம், நிவிர்த்தி சுத்த ஆனந்தம்.

சுத்தத்தைமறைத்தது தமோவானந்தம், நிவிர்த்திதமோவதீதம்.

சூன்யத்தைமறைத்தது ரஜோவானந்தம், நிவிர்த்திரஜோவதீதம்.

சுபாவத்தை மறைத்தது சத்வவானந்தம், நிவிர்த்திசத்வவதீதம்.

ஒழிவை மறைத்தது அவ்வியத்த வானந்தம், நிவிர்த்தி அவ்வியத்தவதீதம்.

அதீதத்தை மறைத்தது சுத்தவானந்தம், நிவிர்த்தி சுத்தவதீதம்.

யதார்த்தத்தை மறைத்தது தமோவதீதம், நிவிர்த்தி தமோமோனம்.

இரகசியத்தை மறைத்தது ரஜோவதீதம், நிவிர்த்திரஜோமோனம்.

அறுதியை மறைத்தது சத்வவதீதம், நிவிர்த்தி சத்வமோனம்.

ஒடுக்கத்தை மறைத்தது அவ்வியத்த வதீதம், நிவிர்த்தி அவ்விய த்த மோனம்,

மோனத்தை மறைத்தது சுத்தவதீதம், நிவிர்த்தி சுத்தமோனம் இதுவே முடிந்த நிலை.

வினா. இந்தச்சமாதிகளுக்குக்குற்றமெது,

விடை, குற்றமெதுவெனின் சீவஸ்தூலசரீரத்திற்குச் சிற்பொறியும், சீவசூட்சுமசரீரத்திற்கு மவுட்டியமும், சீவகாரணசரீரத்திற்கு நித்திரையும், சீவனுக்கு அந்தகாரமும், கூடஸ்தனுக்குத் தற்போதமும், ஈசுரஸ்தூலசரீரத்திற்கு விடயமும், ஈசுரசூட்சுமசரீரத்திற்கு விருத்திலயமும், ஈசுரகாரணசரீரத்திற்கு நாதமும், ஈசுரனுக் ககண்டவிருத்தியும், பிரமத்திற்குப் படிகப்பிரகாசமும், சத்துக் கானந்தமும், சித்துக்குப் போதலயமும், ஆனந்தத்திற் கானந்தாதீதமும், பரப்பிரமத்திற்குச் சித்தும், சர்வசாட்சிக்கு மகாப்பிரகாசமும், சுத்தத்திற்கு அகண்டஞானமும், சூன்யத்திற்கு வத்துவில்சத்தியபுத்தி செய்விப்பதும், சுபாவத்திற்கு அனிச்சயமும், ஒழிவுக்கு அவாவும், அதீதத்திற்குத் துவிதவாசனையும், யதார்த்தத்திற்கு அசம்பாவனையும், இரகசியத்திற்குச் சிரத்தையின்மையும், அறுதிக்கு விருத்திவாசனையும், ஒடுக்கத்திற்குச்சாதனமும், மோனத்திற்குஅனுபவமுங்குற்றமாம், இவ்விருபத்தைந்துசமாதிகளுக்கும் இவ்விருபத்தைந்துகுற்றங்களுங்கூடாது.

வினா. ஆனவிச்சமாதிகளில் சாட்சிசைதன்னியமைந்திற்கும் பகிர்முகம் அந்தர்முகமென்னும் இருவகைத்திரிபுடிகளாவதேது,

விடை. அஃதேதெனின், கூடஸ்தருக்குப்பகிர்முகத்திரிபுடியாவது- ஞாதுருசீவன், ஞானம் அந்தக்கரணவிருத்தி, ஞேயம் விஷயம், ஆ (௩) அந்தர்முகத்திரிபுடியாவது - ஞாதுரு நிராகாரம், ஞானம் நிர்விஷயம், ஞேயம் நிர்மலம், ஆ (௩)

பிரமத்திற்குப் பகிர்முகத்திரிபுடியாவது- ஞாதுரு இச்சாசத்தி ஞானம் ஞானசத்தி, ஞேயம் கிரியாசத்தி, ஆ (௩) அந்தர்முகத்திரிபுடியாவது-ஞாதுரு சத்து, ஞானம் சித்து, ஞேயம் ஆனந்தம், ஆ (௩)

சர்வ சாட்சிக்குப் பகிர்முகத்திரிபுடியாவது - ஞாதுரு சத்து, ஞானம் சித்து, ஞேயம் ஆனந்தம், ஆ (௩) அந்தர்முகத்திரிபுடியாவது - ஞாதுரு சுத்தம், ஞானம் சூனியம், ஞேயம் சுபாவம், ஆ (௩)

அதீதத்திற்குப் பகிர்முகத்திரிபுடியாவது- ஞாதுரு சுத்தம்,ஞானம் சூன்யம், ஞேயம் சுபாவம், ஆக (௩) அந்தர்முகத்திரிபுடியாவது-ஞாதுரு யதார்த்தம், ஞானம் இரகசியம், ஞேயம் அறுதிஆக(௩)

மோனத்திற்குப் பகிர்முகத்திரிபுடியாவது - ஞாதுரு யதார்த்தம், ஞானம் இரகசியம், ஞேயம் அறுதி, ஆக(௩) அந்தர்முகத்திரிபுடியாவது - ஞாதுரு நிஷ்டையின்மை, ஞானம் பொருளின்மை, ஞேயம் நிலையின்மை, ஆக(௩)

வினா. இந்தச்சாட்சி சைதன்னிய மைந்து மெந்தச் சத்தியைக் கொண்டு இவ்விருவகைத் திரிபுடிகளையு மறிந்தது,

விடை. அஃதெவ்வா றறிந்ததெனின், கூடஸ்தர் சுத்தவவத்தையாய் பகிர்முகத் திரிபுடியையும் சுத்தஞானத்தா லந்தர்முகத் திரிபுடியையும், பிரமம் பிரகிருதியாற் பகிர்முகத் திரிபுடியையும், விகிர்தியா லந்தர் முகத் திரிபுடியையும், சர்வசாட்சி சிற்கலையாற் பகிர்முகத் திரிபுடியையும், சின்மயத்தா லந்தர்முகத் திரிபுடியையும், அதீதம் உன்முக சத்தியாற் பகிர்முகத் திரிபுடியையும், அவுன்முகசத்தியா லந்தர் முகத் திரிபுடியையும், மோனம் அதிவிலட்சணையால் பகிர்முகத் திரிபுடியையும், லயசத்தியா லந்தர்முகத் திரிபுடியையு மறிந்ததென்றறிக.

வினா. சமாதி சாதன சம்பிரதாயபேத மெப்படி,

விடை. அஃதெப்படி யெனின், சமாதி லட்சணம், சாதனம், சாதிக்கின்ற பெயர். விரோதம், அவதி, குரு, அடைந்தபெயர். ரிஷி, கிரியை, பேதம், சுருதி, யுத்தி, அனுபவம், பிரபஞ்ச கிருத்தி யத்திற் கரணவிருத்தி, விஷயவாசனை, கன்மானுஷ்டான பூசை, ஆசனம், பிரபஞ்ச சத்தம் உபதேசவேளை, தலம், சங்கம், சமாதி செய்யும்வேளை, பலம், நிண்ணயம், என்று இருபத்து நான்கு பேதமாம்.

வினா. சமாதிலட்சணமெது,

விடை. சமாதிலட்சண மெதுவெனின், வஸ்துதானயிருப்பது.

வினா. சாதனமெது,

விடை. சாதனமெதுவெனின், சித்தநிரோதனம்.

வினா. சாதிக்கிறபேரார்,

விடை. சாதிக்கிறபேராரெனின், சுத்தஞானிகள்.

வினா. விரோதமெது,

விடை. விரோதமெதுவெனின், பூதப்பிரதி பந்தவாசனைகள்,

வினு. அவதியெது,

விடை. அவதியெதுவெனின், நினையாதிருக்கையில் விடயவாசனைவருகிறதுபோற் சமாதி வாசனையுஞ் சாதியாமல் வருகின்றதாம்.

வினு. குருவார்,

விடை. குருவாரெனின், ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி.

வினு. அடைந்தபேரார்,

விடை. அடைந்தபேராரெனின், நந்திகேஸ்வரர்.

வினு. ரிஷியார்,

விடை. ரிஷியாரெனின், பராசர் வியாசர்.

வினு. கிரியையெது,

விடை. கிரியையெதுவெனின், விடுபட்டதில் நிவிர்த்தியும்நிலையில் பிரவிர்த்தியுமாம்.

வினு. பேதமெது,

விடை. பேதமெதுவெனின், முற்கூறிய இருபத்தைந்து படியொழுங்கும் பேதமாம்.

வினு. சுருதியெது,

விடை. சுருதியெதுவெனின்,கைவல்யமுதலானவேதாகமங்கள்.

வினு. யுத்தியெது,

விடை. யுத்தியெதுவெனின்,இருளில் மயிற்குஞ்சான துதர்க்ககர்மத்தினுற் போனவனுக்குப் பஞ்சவன்ன வண்டாதல்போற் சொருபத்தி லழுந்திப் பேராம லிருப்பதாம்.

வினு. அனுபவமெது,

விடை. அனுபவமெதுவெனின், மகா ராஜாவைப்போற் கெம்பீரமா யிருத்தல்.

வினு. பிரபஞ்சகிருத்தியத்தில்கரணவிருத்தியெப்படியிருக்கும்

விடை. அஃதெப்படி யிருக்குமெனின், கூத்தாடி பாசாங்கடிப்பதுபோல விவகாரந் தடையறச் செய்தல்.

வினு. விடையவாசனையெப்படி,

விடை. விடையவாசனை யெப்படியெனில், சார்வபூமனுனராஜபோகம்போற் பொசித்தல்.

வினு. கன்மானுஷ்டான பூசையெப்படி,

விடை. அஃதெப்படியெனின், சமாதி நீங்கினபோதுமவ்வனுபவமாய் விதி நிஷேதமின்றி நடப்பது.

வினு. ஆசனமெது, [களாம்.

விடை. ஆசனமெதுவெனின், வியாக்கிரம சர்மமுதலிய வை

வினு. பிரபஞ்சசத்த மெப்படியிருக்கும்,
விடை. அஃதெப்படி யிருக்குமெனின், அதிக நித்திரை செய்யுஞ் சிசுவைத் தாயானவ ளெழுப்பி உறக்கத்தி லன்னமூட்டும்போது அதற்குக் கேட்குஞ் சத்தம்போ லிருக்கும்.

வினு. உபதேசவேளையெது,
விடை. உபதேசவேளையெதுவெனின், அர்த்தஜாமம்.

வினு. தலமெது,
விடை. தலமெதுவெனின், வனம்-மலை-குகைமுதலியதுகளாம்.

வினு. சங்கமார்,
விடை. சங்கமாரெனின், உபரதியுடையபேர்.

வினு. சமாதிசெய்யும் வேளையெது,
விடை. சதாகாலமுமாம்.

வினு. பலமெது,
விடை. பலமெதுவெனின், சரீரமிருக்கும் போதே சொரூப சாட்சாத்காரந் தானுவது.

வினு. நிண்ணயமெப்படி,
விடை. நிண்ணய மெப்படியெனின், அசம்பாவனை யற்றிருப்பது இஃதே சாதனு சம்பிரதாய பேதமென்று சொல்லப்படும்.

வினு. சத்திபேதமும் சைதன்னிய பேதமுமெப்படி,
விடை. அஃதெப்படியெனின், மோனுதீதந் தானுயிருந்த சைதன்யம் மோனசத்தி யுடன்கூடி மோனமென்றும், ஞானசத்தியுடன்கூடி ஒடுக்கமென்றும், நிச்சய சத்தியுடன்கூடி அறுதியென்றும், அதிசய சத்தியுடன்கூடி இரகசியமென்றும், யதார்த்த சத்தியுடன் கூடி யதார்த்தமென்றும், அதீத சத்தியுடன்கூடி அதீதமென்றும், அசஞ்சல சத்தியுடன்கூடி ஒழிவென்றும், அநிச்சய சத்தியுடன் கூடிச் சுபாவமென்றும், அசிந்தித சத்தியுடன்கூடிச் சூன்யமென்றும், லய சத்தியுடன்கூடிச் சுத்தமென்றும், சிற்சத்தியுடன்கூடிச் சர்வசாட்சியென்றும், பராசத்தி யுடன்கூடிப் பரப்பிரமானந்தனென்றும், சித்ரூபசத்தியுடன் கூடித் தேஜோமயனென்றும், சத்ரூப சத்தியுடன் கூடிப் பிரமமென்றும், சுத்தமாயா சத்தியுடன்கூடி ஈசுரனென்றும், தமோமாயா சத்தியுடன்கூடி அந்தரியாமி யென்றும், இரணியகர்ப்பசத்தியுடன் கூடிச் சூத்திராத்மாவென்றும், விராட்டுருவசத்தியுடன் கூடி வைஸ்வானரனென்றும், சுத்தவவித்தையாசத்தியுடன்கூடிக் கூடஸ்தனென்றும், ரஜோவவித்தையா சத்தியுடன்கூடிச் சீவனென்றும்,

தமோவவித்தையா சத்தியுடன்கூடிப் பிராஞ்ஞனென்றும், விகிர்த சத்தியுடன் கூடித் தைசதனென்றும், தமோசத்தி யுடன்கூடி விசுவனென்றும், ஒருகற்பனையுமற்ற வஸ்துவுக்குக் கற்பன நாமம் வந்ததென்றறிக.

வினா. இங்ஙனஞ்சமாதி சாதனை செய்யுங் காலத்தி லிடையிற் சரீரம் விழுந்தாற் பலமெது,

விடை. பலமெதுவெனின், தூலசரீரதரிசனத்திற் சரீரம்விழுந்தால் தூலப்பிருதிவி லோகமும் சூட்சும சரீர தரிசனத்தில் தூல அப்புலோகமும் காரண சரீர தரிசனத்தில் தூலவக்கினி லோகமும் சீவ தரிசனத்தில் தூலவாய்வு லோகமும் கூடஸ்த தரிசனத்தில் தூலவாகாசலோகமும் விராட்டு தரிசனத்தில் சூட்சுமப் பிருதிவிலோகமும் இரணியகர்ப்ப தரிசனத்தில் சூட்சும அப்புலோகமும் மாயாதரிசனத்தில் சூக்ஷுமவக்கினிலோகமும் ஈஸ்வரதரிசனத்தில் சூட்சுமவாய்வுலோகமும் பிரமதரிசனத்தில் சூட்சும வாகாசலோகமும் சத்துதரிசனத்தில் காரணப் பிருதிவிலோகமும் சித்துதரிசனத்தில் காரண வப்புலோகமும் ஆனந்த தரிசனத்தில் காரண வக்கினிலோகமும் பரப்பிரமதரிசனத்தில் காரணவாய்வுலோகமும் சர்வசாட்சி தரிசனத்திற் காரணவாகாசலோகமும் சுத்ததரிசனத்தில் காரணாதீதப் பிருதிவிலோகமும் சூன்யதரிசனத்தில் காரணாதீத வப்புலோகமும் சுபாவதரிசனத்தில் காரணாதீத வக்கினிலோகமும் ஒழிவுதரிசனத்தில் காரணாதீத வாய்வுலோகமும் அதீததரிசனத்தில் காரணாதீத வாகாசலோகமும் யதார்த்ததரிசனத்தில் சுத்தப்பிருதிவி லோகமும் இரகசிய தரிசனத்தில் சுத்தவப்புலோகமும் அறுதிதரிசனத்தில் சுத்தவக்கினிலோகமும் ஒடுக்க தரிசனத்தில் சுத்தவாய்வு லோகமும் மோன தரிசனத்தில் சுத்தவாகாச லோகமும் பிராப்தியாம். ஒருபாதியுமின்றித் தானாய் விளங்கு மிடத்திற் சர்வலோகா தீதமாய்த் தன்மயமாய்ப் பிரகாசிக்கும் இஃதே தீர்ந்த நிலை யென்றறிக.

வினா. இவற்றுள் சமாதிபேத மெப்படி,

விடை. சமாதிபேத மெப்படியெனின், ஸ்தூல பூதலோகப் பிராப்திக்குச் சுத்தமாயா தனுவும் சூட்சும பூதலோகப் பிராப்திக்கு ஞானதனுவும் காரண பூதலோக பிராப்திக்குச் சிற்சத்தி தனுவும் சுத்தபூலோகப் பிராப்திக்கு இலட்சண சூன்ய தனுவும் அந்தந்தத் தனுக் கைத்துபூதமும் ஒன்றுக்கொன்று உன்னதமும் போகதார தம்மி

யமு மதிசயமு முண்டு அவற்றுள் பதினாறுசமாதி சாதனுபலத்தினாற் சித்திக்கும் ஒன்பதுசமாதி தேவதானுக் கிரகத்தினாலும் சத்கர்ம சாதனையினாலுஞ் சித்திக்க வேண்டும்.

- வினா. அஃதெப்படி சித்திக்கும்,

விடை. எப்படி சித்திக்குமெனில், தெய்வ வுபாசனையாற் சித்த நிரோதனமும், சற்குருவுக் கனுகூல விருத்தியாய் நடந்து அவரது பரிபூரண கடாட்சம் பெற்றால் அஞ்ஞானாந்தகார நிவிர்த்தியும் சிவபத்தி மேலீட்டினால் விசுவலயமும், சாட்சாத்காரம் பெற்ற மகான்களுக் கனுகூல விருத்தியாய் நடந்து அவர்களைச் சந்தோஷிப் படுத்தினால் ஆனந்த ஜெனிதமும் சர்வஜீவ தயையினாலானந்த பரவசமும் சர்வவுபாதியினால் சூன்யதரிசனமும் ஒழிவு வயிராக்கியத்தினால் வாசனாக்ஷயமும் சிரவணாதித் திரயபலத்தினால் அதிசயஞ் செனித்த இரகசியமும்வரும் மோனம் ஜென்மாந்திர கிருதகிருத்திய பிராப்தியான சாங்குசித்தனுக்கே வருமென்றறிக.

சம்பவனுக்கு உபதேசிக்குமுறை.

வினா. சம்பவனுக்கு உபதேசிக்கு முறைமை யெப்படி,

விடை. சம்பவனுக் கருகமான சுத்தசைவ சித்தாந்த மாகிய மோனசமாதி முறைமை யெப்படி யெனின், ஓய் சனகாதிகளே கேளுங்கள் இந்தச் சமாதிக்கு மாயை கன்மம் ஆணவவிருள் விபரீத பாவனை அசம்பாவனை சித்தசஞ்சலம் என்று ஆறுமறைப்புண்டு அவ்வாறு வகைக்கும் விரோதம் ஆறுவகையுண்டு இவ்வாறும் அங்கமாய்க் கொண்டு மௌனமாயிருக்கிறோம் நீங்களும் அவ்வாறுவித மறைப்பின்றிச் சமாதியிருப்பீர்களாக.

வினா. அவையெப்படி,

விடை, அவையெப்படியெனில், நாம்மகாமாயை யாகிற புயலகனைமேலிடவொட்டாமல் மிதித்திருக்கிறோம் நீங்களும் மகாமாயைமேலிடாதபடி தேகாதிப்பிரபஞ்ச விலட்சணராயிருங்கள், நாம் சர்வகன்மமும்விட்டு வீராசனமாயிருக்கிறோம் நீங்களும்சகல கன்மங்களையுமொழிந்து ஓராசனத்திலிருங்கள், நாம்ஞானப்பிரகாசங்கொண்டு அந்தகாரமலம்போக ஞானக்கினியை ஒருகையிற் றரித்திருக்கிறோம் நீங்களும்ஞானப்பிரகாசத்தினா லந்தகாரமலத்தைப் போக்கிக்

கொள்ளுங்கள் நாம் இருபைத்தைந்து படியொழுங்கும் நேதிசெய்து விபரீதபாவனை நீங்கும்பொருட்டு ஒருகையில் இருபத்தைந்து மணிஜெபதாவடங்கொண்டிருக்கிறோம் நீங்களும் அப்படியே ஜெபதாவடங்கொண்டு இருபத்தைந்துபடி யொழுங்குந்தள்ளி விபரீதபாவனைநீங்கியிருங்கள், மேலும் மோட்சார்த்தமாகிய அனுபவதரிசனமாவது ஞாதுருவான வாத்துமாஞானமான வருட்பிரகாசங்கொண்டு ஞேயமானசிவத்தையறிவதோ, அல்லது ஆத்மசிவ சமானத்துவமாயிரண்டாயிருப்பதோ, அல்லது எங்குஞ் சச்சிதானந்தப் பிரமமயமா யொன்றாயிருப்பதோ, என்றுண்டாக்கிற அசம்பாவனையொழியும்பொருட்டு ஞாதுருஞானஞேயமாயறிகிற திரிபுடியை விட்டிருக்கவேண்டுமென்று மூன்றுவிரலைநீட்டி இரண்டல்ல ஒன்றாயிருக்கிறசித்துமாத்திரமே நிலையென்பதுதோன்ற மேலிருவிரலையும் ஏகமாய் ஞானமுத்திரையாய் ஒருகையிற்பிடித்து அசம்பாவனையைப்போக்கியிருக்கிறோம் நீங்களுஞ் சின்மாத்திரவனுபவமே திடநிலையா யிருந்து அசம்பாவனையைப்போக்கியிருங்கள், சித்தசஞ்சலமொழியும்படி வேதாகம சம்மதியானசிவஞான போதகத்திருமுறையை ஒருகையிற் கொண்டிருக்கிறோம் நீங்களும் வேதாகமசாஸ்திர விசாரணைசெய்து சித்தசஞ்சலமொழிந்திருங்கள், நாம் அலைவற்ற சமுத்திரம்போலும் நிலவறைத்தீபம்போலும் மௌனநீதமாயிருக்கிறதுபோல நீங்களும்இந்தப்படியிருந்து முத்தராவீர்களென்றுசொல்லி இன்னுமொருவகையாகச் சம்பவனுக்குபதேசிக்குமுறைமையுண்டென்று ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியானவர் திருவுளம்பற்றியருளினர்.

வினா-அஃதெப்படி.

விடை-அஃதெப்படியெனின் ஒய்சனகாதிகளே பிரணவாதீதமாகிய மோனத்திற் பிரணவமும் அதிற்பஞ்சசத்தியும் அதிற்குணத்திரயமான பஞ்சாதசபேதமுமுண்டாயின.

வினா-அஃதெப்படியுண்டாயின.

விடை-எப்படியுண்டாயினவெனின் பிரணவாதீதத்திற் பிரணவமுண்டாயிற்று அதில் விருத்திசத்திபராசத்தி சிற்சத்தி சிற்கனசத்தி சின்மயசத்தியெனப் பஞ்சசத்திகளுண்டாயின அவைகுணத்திரயங்களாலொவ்வொன்று மூன்றுபேதங்களாகும்.

வினு-அவையெப்படியாகும்.

விடை-எப்படியாகுமெனின் விருத்திசத்தியின்முக்குணம் தாமத விராசதசாத்விகமென்றும், பராசத்தியின்முக்குணம் இச்சை ஞானங் கிரியையென்றும், சிற்சத்தியின்முக்குணம் சத்து சித்து ஆனந்தமென்றும், சிற்கலைசத்தியின்முக்குணம் சுத்தம் சூனியம் சுபாவமென்றும், சின்மயசத்தியின்முக்குணம் யதார்த்தம் இரகசியம்அறுதியென்றும், பதினைந்துபேதமாயின. ஆகையாற் பிரணவாதீத வஸ்துவே மோனம் அப்படிகுணத்திரயமான பஞ்சாதசபேதமும் பஞ்சசத்தியும் பிரணவமும் ஆகியமூன்றும் மூன்றுவிரல் இவ்விருவிரலும் பிரணவாதீதமான மௌனமென்று சின்முத்திரையாகக்கொண்டுநீங்களுமித்தப்பிரகார மிருங்களென்றுசொல்லி ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி மௌனமாயிருக்கச் சனகாதிகளுல்வருமெழுந்து மகாபயபக்தி விநயத்துடன் இரண்டுதிருவடிகளைப்பூசித்துப் பிரதட்சண நமஸ்காரமுதலிய சோடச வுபசாரங்களுஞ்செய்து அஞ்சலியஸ்தராய்நின்று ஸ்தோத்திரம்பண்ணினார்கள். அங்ஙனமான ஜனகாதிகளுல்வாயும் வடமுகமாயிருக்கச்சொல்லி நாம் சமாதியிருந்து காட்டுகிறோம் நீங்களுமப்படியேயிருந்து பாவியுங்கள். அங்ஙனம்பாவித்தாலுங்கள் பரிபக்குவவிசேஷத்தின்படி சித்திக்கும், அங்ஙனம் சித்தியாவிட்டால் அந்தர்முகத்தைவிட்டுப் பகிர்முகமாய்நமது திருமுகத்தைச்சிரத்தையாகப் பாவித்திருங்கள். அப்போது அனுபவமறைப்பு நீங்கும் நாம், எப்போது மிருப்பதுவீராசனம், மிதித்திருக்கிற முயலகன் பிரணவசொரூபமானமூலமாயை, ஆணவமலத்தை அதோமுகமாக்கி வலப்பதத்தினலழுத்திச் சித்தசுத்திக்குக்காரணமாய் ஒருகையில் செபதாவடமும், சிரவணபோதனுசாதகத்திற்குக் காரணமாய் ஒருகையிற்புத்தகமும், ஒருகையில் மௌனமான ஞானமுத்திரையும், அந்தமௌனஞானமுத்திரையைச்சுட்டு நாசமாக்கும்பொருட்டு ஒருகையில்அக்கினியும், இவ்வக்கினியும் தனக்குவிரோதியோடுகூட நாசமாம்பொழுதுமௌனதீதமேமுடிந்த பொருளாய்அதுநீயானுயென்னுமகாவாக்கிய நின்னயப்படி சொல்லுக்கடங்காச் சுவானுபவமு மல்லாததாயிருப்போம். நீங்களுமிப்படியே யிருங்களென்று திருவாய்மலர்ந்தருளி மௌனமாயிருக்கச் சனகாதிகளும் அந்தர்முகப்பட்டு அப்படியே பாவித்திருந்தார்கள், அங்ஙனமிருக்க அவர்களுக்கந்த நிலைசித்தி

யாமல் குருவாக்கியப்படி அவர்கள் பகிர்முகப்பட்டு ஸ்ரீ சற்குருவின் திருமுகமண்டலத்தை மூன்றுநாழிகைபரியந்தம் பார்த்திருந்தபின் அந்தத்திருமுகமண்டலப் பிரசாதத்தினலவர்களுக்குச் சகலவாவரணங்களுநீங்கிமௌனுதீதசுகசமாதிசித்தித்தது. அப்பால்ஸ்ரீ சற்குருசுவாமிகள் விழித்தருளியபின் அவர்களும்விழித்து அனுபவானந்த விலாசத்தினலடங்கா மகிழ்ச்சியுடனெழுந்து பாதபூசை முதலியபிரதட்சண நமஸ்காராதிகள் செய்து உடலாதிமூன்றுந் தத்தம்பண்ணி ஸ்தோத்திரஞ்செய்யும்படி.

செயசெயபோற்றி தேசிகாபோற்றி, அறியாநிலையை யருளினைபோற்றி, மொழியாமொழியை மொழிந்தனைபோற்றி, கேளாக்கேள்வியுங் கேட்டனம்போற்றி, அறியாதறிந்தன மையாபோற்றி, வேதாகமமுடி விளம்பாய்போற்றி, தேவர்க்கரிய தேவேபோற்றி, அறிவுக்கறிபொருளல்லாய்போற்றி, அனுபவப்பொருளையகற்றினைபோற்றி, அனுபவியாவகை யறைந்தனைபோற்றி, நீயுநானுமிரண்டற்றதுவும், அதுவுமிதுவு மதுவிதுவற்றதும், ஒளியுமிருளுமொளியிருளற்றதும், நாதநாதாந்தநவின்றதுமற்றதும், ஒன்றுமிரண்டுமொன்றிரண்டற்றதும், உள்ளும்புறப்புமுட்புறம்பற்றதும், உருவுமருவுமுருவருவற்றதும், அல்லவென்றருளிய வத்தாபோற்றி,

என்று இந்தப்படி ஸ்தௌத்தியஞ்செய்த சனகாதிரிஷிகளை ஸ்ரீ தட்சணாமூர்த்தியானவர் கிருபையாகப்பார்த்துச் சிரசில் தமது திவ்வியாஸ்தத்தைவைத்துச் சுகீபவாவென்று ஆசீர்வாதம்பண்ணி இஃதே சம்பவனுக்குபதேசிக்கு முறைமையென்று திருவுளம் பற்றியருளினர்.

மந்தனுக்கு உபதேசிக்குமுறை.

வினு. இனி மந்தனுக்குபதேசிக்கு முறைமையெப்படி,

விடை. மந்தனுக் கருகமான இதிகாச புராண சித்தாந்தமான விஷயலய சமாதிநய யனுக்கிரகிக்கு முறைமை யெப்படியெனின், ஓய் ஜனகாதிகளே விஷயத்தைவிட்டால் இதைப்பார்க்கு மிந்திரியமும் நினைக்குங் காணங்களும் அறியுஞ் சீவனுமில்லை யென்பது.

வினு. இவைகளில்லையோ,

விடை. இவைகளில்லையோவெனின், திரிபுடிகளை யறியுஞ் சாட்சி ஞானமில்லை.

வினா. சாட்சிஞானமில்லையோ,

விடை. சாட்சிஞானமில்லையோவெனின், இந்தஞானங்கொண்டறிகிற விராட்டு இரணியகர்ப்பம் மாயையான சரீரத்திரயமு மில்லை

வினா. மாயையில்லையோ,

விடை. மாயையில்லையோவெனின், இதிற் பிரதிபிம்பிக்கு மீஸ்வரனில்லை.

வினா. ஈஸ்வரனில்லையோ,

விடை. ஈஸ்வரனில்லையோவெனின், இவற்றையறியும் பிரஞ்ஞானமில்லை.

வினா. இந்தஞானமில்லையோ,

விடை. இந்தஞானமில்லையோவெனின், இதையறியுஞ் சத்து சித்து ஆனந்தமில்லை.

வினா. ஆனந்தமில்லையோ,

விடை. ஆனந்தமில்லையோவெனின், ஆனந்தபரவச பரப்பிரமமுமில்லை.

வினா. இவைகளில்லையோ,

விடை. இவைகளில்லையோவெனின், இவற்றையறியுஞ் சர்வசாட்சி ஞானமில்லை.

வினா. சர்வசாட்சி ஞானமில்லையோ,

விடை. இஃதில்லையோவெனின், இதையறியுஞ் சுத்தம் சூனியம் சுபாவமில்லை.

வினா. சுபாவமில்லையோ,

விடை. சுபாவமில்லையோவெனின், ஒழிவில்லை.

வினா. ஒழிவில்லையோ,

விடை. ஒழிவில்லையோவெனின், இதையறியுமதீதஞானமில்லை.

வினா. அதீதஞானமில்லையோ,

விடை. அதீதஞான மில்லையோவெனின், இதையறியும் யதார்த்தம் இரகசியம் அறுதியில்லை.

வினா. அறுதியில்லையோ,

விடை. அறுதியில்லையோவெனின், ஒடுக்கமில்லை.

வினா. ஒடுக்கமில்லையோ,

விடை. ஒடுக்கமில்லையோவெனின், மோனமில்லை.

வினா. மோனமில்லையோ,

விடை. மோனமில்லையோவெனின், மோனமுதல் ஸ்தூல சரீர பரியந்தமாகிய இருபத்தைந்து மின்றி மவுனமாயிருப்பன் இந்தப்படி எளிதாய் மந்தனுக் குபதேசிக்க வேண்டியதென்றறிக முன் சொன்ன வைந்ததிகாரிகளுக்கும் ஐந்துவித சமாதியுஞ் சொல்லப்பட்டது.

வினா. இந்தச்சமாதிகளுக்குப்பலமென்ன,

விடை. இதை யொருவனுக் குபதேசிக்கும்போ தொருவன் கேட்டபலன் எண்ணிறந்த சரீரங்களிற் செய்தபாதகங்கணீங்கி விராட்டுக்கதிபதியா பிரமனவன், இந்தச்சமாதி நமக்குவேண்டுமென்றவன் இந்திரியங்களாற்செய்த அதிபாதகமெல்லாம் நீங்கி இரணியகர்ப்பத்திற் கதிபதியான விஷ்ணுவாவன், ஆசிரியரிடமா யிதைச் செவிப்புலனகக் கேட்டவன் அந்தக்கரணத்தினால் வரும் அதிபாதகங்கணீங்கி அவ்வியாகிருதத்திற் கதிபதியான வுருத்திர மூர்த்தியாவன், இதைச் சாதிக்க வேண்டுமென்று பிரயத்தினஞ் செய்தவன் அனாதி அவித்தையாஞ்ஞான நீங்கி அவ்வியத்தத்திற் கதிபதியான மகேசுரனவன், இதை இரவுபகலா யனுஷ்டித்தவன் சின்மய சத்தியுபாதி நீங்கிச் சுத்தத்திற் கதிபதியான சதாசிவனவன், இந்தச் சமாதி சாட்சாத்காரம் பெற்றவன் சர்வ வுபாதியு நீங்கித் தானே தானயிருப்பனென்று ஸ்ரீதட்சணமூர்த்தியும் ஜனகாதிகளுக் கனுக்கிரகஞ் செய்தாரென்று சூதமகாமுனிவர் நைமிசாரணிய முனிவர்களுக்குச் சொல்லி ஓ ரிஷிகளே நீங்கள் அபக்குவர்களுக்குச் சொன்னால் இகபரமற்று முத்தியில்லாமற் போவீர்கள் முற்சொல்லிய பக்குவர்களுக்கு மாத்திரஞ் சொல்லுங்களென்று சொல்ல அதுகேட்டு அவர்களும் மகாபாக்கியமென்றெழுந்து சூதமுனிவருக்குப் பூசை நமஸ்காராதி வந்தனை வழிபாடுகள் செய்து குருகுலவாசமா யிருந்தார்கள் இந்தச் சாஸ்திரமும் சாஸ்திரானுபவமும் கிருபையினு லனுக்கிரகஞ்செய்த அதிவர்ணாசிரம ஞானசாரியராகிய சௌபாக்கிய குரு பாதாரவிந்தமே கெதி.

குருஸ்துதி - வெண்பா.

நானே நீநீயேநா னானேநானீயேநீ
யானதெல்லாம் பொய்யென் றகற்றியே - மோனமது
மில்லையென்றுனேதென்று லென்னால்யானென்னுவனோ
நல்லசவு பாக்கியனே நான்.

கலிவிருத்தம்.

நீளனேகஞ் சமயநெறியெலா
மாளநேரிடும் வன்பிறவித்துயர்
மீளநேயத்தண் மெய்க்குமெய்காட்டரு
ளாளனேயறி வானந்தரூபனே.

அப்பால் நைமிசாரண்ய முனிவர்கள் சூதமுனிவரைப் பார்த்து சுவாமீ இதுவரையில் அறியுந் திருவடி தீட்சையனுக்கிரகஞ்செய்தீரோ இனி அறுதித் திருவடி தீட்சையாவதென்ன அதை யெங்களுக்கருளிச்செய்ய வேண்டுமென்று கேழ்க்கச் சூதமாமுனிவர் சொல்லுகிறார். ஓய் முனிவர்களே ஆசரியன் நித்தியகன்ம முடித்துக் கொண்டு முன்சொன்ன சுபதினத்தில் அர்த்தராத்திரியில் அந்தத் தானத்தை முன்போல் மெழுகித் தட்சிணாமூர்த்தியை அர்ச்சித்துத் தண்டனிட்டு ஆசிரியர் கிழக்கு முகமுஞ் சிஷ்ஷன் வடக்குமுகமுமா யிருந்து ஆசிரிய ரிருதயத்தில் மோனுதிதனுய் ஞானுக்கினியைப் பாவித்து ஓம் விராட்டு சுவாகா, ஓம் இரணிய கர்ப்ப சுவாகா, ஓம் மாயை சுவாகா, ஓம் ஈஸ்வர சுவாகா, ஓம் பிர்ம்ம சுவாகா வென்று ஆகுதிபண்ணி அந்தச் சாம்பலை ஞானுநந்த சமுத்திரத்தில் நனைத்து ஒரு பிண்டமாக்கி அந்தப்பிண்டமான ஸ்தூல சரீரத்தைச் சத்தாகவும், சூட்சுமசரீரத்தைச் சித்தாகவும், காரண சரீரத்தை ஆனந்த மாகவும், அபிமானியைப் பரப்பிர்ம்மமாகவும், சாட்சியைச் சர்வசாட்சி யாகவும், பாவித்து ஞானுக்கினியைச் சிஷ்ஷனிருதயத்தி லாவாகித்து ஒருமொழி வாக்கியத்தை யுபதேசித்து அதைப் பொருட் படுத்திக் கொடுத்து அந்தத் தியானத்தின்படி சிஷ்ஷனை யனுஷ்டிக்கச் செய்யவேண்டும்.

வினு. அவ்வனுஷ்டானவகை யெப்படி,

விடை. அந்தத் தியானத்தைக் குருவாகத் தியானித்து ஜலத்தைச் சச்சிதா னந்தமாகப்பாவித்து மூடிப் பிரணவத்தினுற் ஜெபித்துப் புரோட்சித்துக் கொண்டு விபூதியைச் சுத்த சூன்யமாகப் பாவித்துச் சலம்விட்டுக் குழைத்து முன்போலவே பன்னிரண்டு தானத்திலும் அந்த மந்திரத்தினுற் றரித்துப் புரோட்சித்துக்கொண்டு பிரணவத்தினுல் ஆசமனம் கரனியாசம் அங்க நியாசஞ்செய்து பிரணவத்தினுல் மூன்றுதிரமும், தட்சிணுமூர்த்தியே நமாவென்று மூன்றுதிரமும், சுத்தம் சூன்யம் சுபாவமென்று மூன்றுதிரமும் ஆக ஒன்பது திரந் தர்

ப்பணஞ்செய்து முன்போலப் பின்பும் ஆசமனம் அங்கநியாசம்கர நியாசம் தர்ப்பணம்பண்ணி அந்தச் சலத்தில் பிரணவத்தைப் பதினுறுதிரஞ் செபித்துப் புரோட்சித்துக்கொண்டு மாயாஞ்ஞானத்தை நாசியில் வாங்கிப் பெருவிரல்விட்டு அவகுண்டனம்பண்ணி ஒன்பதுதரந் தற்பணம்பண்ணி நூற்றெட்டுமந்திரமும் நித்தியசெபமுஞ்செய்து தட்சிணுமூர்த்தியைத் தண்டன்பண்ணிக் குருவைத் தானுகத் தியானித்து அவர் சந்நிதானத்தில் உடல் பொரு ளாவி மூன்றுந் தத்தஞ்செய்து அவரா லாசீர்வாதமும் விபூதிப் பிரசாதமும் பெற்றுஅவனா இரண்டாமுறை தெண்டனிட்டொரு சந்தியாயிருந்து கோவிலில் தீபம்பார்த்து தெர்ப்பை சயனத்திற் சயனிக்கச் செய்யவேண்டியது இஃதே அறுதித் திருவடி தீட்சையென்பது.

ஒருமொழிக்கர்த்தம்.

குருஸ்துதி - விருத்தம்.

அறிவினுக்கறிவாந்தன்மை யனுக்கிரகித்தாய்போற்றி
கிறியனேன்சிறுமைதீர்த்துச் செம்பதமருள்வாய்போற்றி
பிறிவரும்பொருளாயெக்கும் பேதமற்றிருந்தாய்போற்றி
யறிவருமறிவானந்த வருட்டிருப்பாதம்போற்றி.

வினு. ஒருமொழிக்கர்த்தமென்ன,

விடை. அது நீயானுயென்பது, அதுவென்றது அவாந்தரவாக்கியமும், நீயென்றது மகாவாக்கியமும், ஆனுயென்றது நிவிர்த்தி வாக்கியமுமாம் இதற்கர்த்தம்இதுவல்லாமைக்கு அதுவென்றுபெயர்.

வினு. அஃதெப்படி,

விடை. தேகந்தா னுனவனைத் தேகமல்லவென்று லிந்திரியந்தானுவல், இந்திரிய மன்றெனிற் கரணந்தா னுவன், கரணமன் றெனிற் பிராணன் றுனுவன், பிராண னல்றெனி லவித்தை தானுவல், அவித்தை யன்றெனிற் சீவன் றுனுவன், சீவனன்றெனிற் கூடஸ்தன்றுனுவன், கூடஸ்தனன் றெனில் விராட்டுதானுவன், விராட்டன்றெனில் இரணிய கருப்பந் தானுவன், இரணிய கருப்ப மன்றெனில் மாயைதானுவன், மாயையன்றெனிலீஸ்வரன்றுனுவன். ஈஸ்வரனன்றெனிற்பிரமந்தானுவன், பிரமமன்றெனிற்சத்துதானுவல்,சு

த்தன்றெனிற் சித்துதானவன், சித்தன்றெனிலானந்தந்தானவன்; ஆன ந்தமன்றெனில்பரப்பிரமந்தானவன், பரப்பிரமமல்றெனிற்சர்வசா ட்சிதானவன், சர்வசாட்சியன்றெனிற் சுத்தந்தானவன், சுத்தமன்றெ னிற் சூல்யந்தானவன், சூல்யமன்றெனிற் சுபாவந்தானவன், சுபா வமன்றெனில், ஒழிவுதானவன், ஒழிவல்றெனிலதீதந்தானவன், அதீத மல்றெனில் யதார்த்தந்தானவன், யதார்த்தமல்றெனில் இரகசியந் தானவன், இரகசியமல்றெனில் அறுதிதானவன், அறுதியன்றெனில் ஒடுக்கந்தானவன், ஒடுக்கமன்றெனில் மோனந்தானவன், மோனமன் றெனில் மோனதீதமாகிய ஸ்வஸ்வரூபமாகப் பிரகாசிப்பன். இதுவ ரையிற்கூறிய தானான பொருள் வேதாகமங்களிற்சொல்லிய இதுவெ ன்றபொருள், இவையெல்லாந் தானன்றென்றபொருள் வேதாகமங்க ளுக்கதீதமாகிய அதுவென்றபொருள், இந்தமெய்ப்பொருளே அது வென்றது, இது அவாந்திரவாக்கியம்--நீயென்றதற்கர்த்தம் மேற்கூறி யஅதுவென்னும் பொருளை நீயென்றது இது மகாவாக்கியம்-- இவ்வ னுபவத்தினால் விபரீதபாவனைபோம்--ஆனாயென்ற தற் கர்த்தம் இந் தப்பொருளிற் சந்தேகம்வந்த அசம்பாவனையைப் போக்குகிற ஆப் தவாக்கியமான நிவிர்த்திவாக்கியம்--இவற்றுள், வேதாகமங்களாற்றெ ளியக்கேட்ட பரோட்சமான சாட்சாத்கார நிச்சயஞானமே அவாந்தி ரவாக்கியமென்றும், சற்குருவுபதேசத்தினால்அனுக்கிரகம்பெற்றதே மகாவாக்கியமென்றும், பெரியோர்களாற்சொல்லப்பட்ட ஆப்தவா க்கியமே நிவிர்த்திவாக்கியமென்றுஞ் சொல்லப்படும்இவ்விருபத்தை ந் துந்தானாயிருக்கவும். அன்னியமாயிருக்கவும், அந்தரியாமியா யிரு ந்திதுகளைச் சேட்டிப்பிக்கவும், இதுகளில் வியாபகமா யிருக்கவும், இதுகளெல்லாமற்றிருக்கவுங்கூடும்.

சைதன்யவனுபவம்.

வினா. சைதன்யவனுபவமெப்படி.

விடை. ஒருவேளைபுத்திரமித்திரகளத்திராதிகளே தானென் றபி மானித்து அவர்கள்படுஞ்சுகதுக்கங்களை நிதமுந்தன்பேரி லேலிட்டுக் கொண்டு அவர்கள்தானானதுபோல இவ்விருபத்தைந்துந் தானா யபி மானித்து இவற்றால் வருஞ்சுகதுக்கங்கள் தனதாகப்பாவித்து இதுக ள் தானாயிருக்கவும்--கூத்தாடி பலவேடம்போட்டு விநோதமாய் ஆ

டினுலு மவ்வேடந்தானல்லாது விஞேதியேதானுனது போல இவ் விருபத்தைந்துந்தானுய் விவகரித்தாலும் இதுகள்தானல்லாது மோ ஞதீதமான தானேதானென்றன்னியமாயிருக்கவும்--பொம்மலாட்ட க்காரன் சூஸ்திரதாரியா யிருந்தாட்டுகிறதுபோல இவ்விருபத்தைந்தி ற்குமதிஷ்டான தேவதையாயிருந்து சேஷ்டிப்பிக்கவும்--நான்குபூத த்திலு மாகாசம் வியாபகமாயிருக்கிறதுபோல இவ்விருபத் தைந்தி லும்வியாபகமா யிருக்கவும்--பழுதையென் றறிந்தவுடன் பாம்பெ ன்பதின்றிப் பழுதைமாத்திரமாயிருந்ததுபோல மோஞதீதமான த ன்னையறிந்தவுடன் இவ்விருபத்தைந்து மித்தையாகித் தானேயிருக்க வுங்கூடும், இவ்வனுபவமைந்தும் விதேககைவல்ய பரியந்தந்தோற்று மென்றறிக, இஃதேமூர்த்திநிலை.

குருஸ்துதி.

அறிவினிலையைத்தாகவறிவித்தவரசேபோற்றி
அறிவிலொன்றுமுன்னிருந்திடவமைத்தாய்போற்றி
அறிவுபேரின்பமாகவளித்திடுமேத்தாபோற்றி
அறிவருமறிவானந்தவருட்டிருப்பாதம்போற்றி.

ஞான சதுஷ்டயம்.

ஸ்ரீகயிலாசபதியாகிய தட்சணமூர்த்தியானவர் ஜனகாதிகளுல் வருக்கும் வேதாகமங்களிலும் பலசாஸ்திரங்களிலுமுள்ள வாக்கியசம் பிரதாயத்தையும் ஐவகைச்சமாதிகளையும் அதிகாரிகளனுசாரமாய் அ றியுந்திருவடி அறுதித்திருவடி தீட்சைகளையுமனுக்கிரகித்து அவைக்க னுகூலமாக மேல்நிற்கவேண்டிய ஞானநிலையைச் சாம்பிரதாய மாய்த் திருவுளம்பற்றி யருளுகின்றார்.

வினு. ஞானசதுஷ்டயமாவதென்ன.

விடை. நிச்சயம், சமாதிசம், சாட்சாத்காரமென ஞானம்நான் குவிதமாயிருக்கும்.

வினு. இவற்றுள்-நிச்சயமாவதென்ன.

விடை. குருமுகமாய் விபரீதம்போக வேதாகமங்களைத் தெளி யக்கேட்டல் சிரவணம், அங்ஙனங் கேட்ட பொருளை விட்சேபம் போகநன்றாய்ப் பரிசீலனம்பண்ணி மனத்திற் றரிக்கப்பட்டு வாக்கி னுற் பிரசங்கித்தல் மனனம், அங்ஙனந்தரித்ததை அசம்பாவனைபோ

கச்சேடித்துநின்றபொருள் நாமேயென்னும் நிச்சயம்பிறத்தல் நிதி த்தியாசனம், இம்மூன்றிற்கும் மூன்றுவிரோதமுண்டு.

வினா. அவை யெவை.

விடை. சிரவணத்திற்குச் சிரத்தையின்மையும், மனனத்திற்குவி சாரமின்மையும், நிதித்தியா சனத்திற்கு நிச்சய மின்மையும் விரோ தமாம்.

வினா. இம்மூன்றிற்கும் நிவிர்த்தியெப்படி.

விடை. சிரத்தையின்மை ஆசிரியராலும், விசாரமின்மை தேவ தாவுபாசனையினாலும், நிச்சயமின்மை சத்துக்களாலுந் தீரவேண்டும். நிதித்தியாசனமாகிய நிச்சயம்பிறந்ததே நிச்சயஞானமென்றும், அ ஃதுள்ளவனேபரோட்சமான நிச்சயஞானியென்றுமறிக.

வினா. சமாதி ஞானமாவதென்ன.

விடை. தொம், தது, அசி, அதி, நிசம், என்று, ஐந்துபதம், அ வற்றுள் ஒவ்வொருபதத்திற்குக் கேவலசகல சுத்தமெனவவத்தை மூ ன்று, அதில் ஒவ்வொன்றிற்கு மூன்றாகவவத்தை ஒன்பதுஆக அவத் தைகள் பன்னிரண்டாய் ஐந்துபதத்திற்கும் அவத்தைகள்அறுபதாம்.

வினா. அவையெப்படி.

விடை. தொம்பதத்தில் மனோநாசமான வந்தகாரமே கேவல ம், மனோசஞ்சலமேசகலம், அவ்விரண்டையு மறிந்த வறிவே சுத்த ம். ஆக (௩)

வினா. ஆனால் தொம்பதகேவலத்தில் மூன்றவத்தையெது.

விடை. அந்தகாரந்தானாயிருப்பதே கேவலசாக்கிரம், அந்தகா ரநீங்கி நின்றதே கேவல சொப்பனம், அந்தகார லயமே கேவல சுழு த்தி. ஆக (௩)

வினா. சகலத்தில் மூன்றவத்தை யெது.

விடை. சித்தசஞ்சலந் தானாயிருப்பதே சகலசாக்கிரம், சித்தச ஞ்சலநீங்கிநின்றதே சகலசொப்பனம், சித்தசஞ்சலலயமேசகலசுழு த்தி. ஆக (௩)

வினா. சுத்தத்தில் மூன்றவத்தை யெது.

விடை. சிவன்றானாயிருப்பதே சுத்தசாக்கிரம், சிவனை நீங்கிநின்ற தேசுத்தசொப்பனம், சிவத்துவலயமே சுத்தசுழுத்தி. ஆக (௩)

வினு. தற்பதத்தி லெப்படி.

விடை. மாயாந்தகாரமேகேவலம், சர்வஞ்ஞத்வசாமர்த்தியமே சகலம், பிரமசொரூபமேசுத்தம். ஆ (ரு)

வினு. தற்பதகேவலத்தில் மூன்றவத்தையெது.

விடை. மாயாந்தகாரந்தானனதே கேவலசாக்கிரம், மாயாந்தகாரநீங்கிநின்றதே கேவலசொப்பனம், மாயாந்தகாரலயமே கேவலசுழுத்தி. ஆ (ரு)

வினு. சகலத்தில் மூன்றவத்தை யெது.

விடை. சர்வஞ்ஞத்வசாமர்த்தியந்தானனதே சகலசாக்கிரம், சர்வஞ்ஞத்வசாமர்த்திய நீங்கிநின்றதே சகலசொப்பனம், சர்வஞ்ஞத்வலயமே சகலசுழுத்தி. ஆ (ரு)

வினு. சுத்தத்தில் மூன்றவத்தையெது.

விடை. ஈஸ்வரத்வந்தானனதே சுத்தசாக்கிரம், ஈஸ்வரத்வநீங்கிநின்றதே சுத்தசொப்பனம், ஈஸ்வரத்வலயமே சுத்தசுழுத்தி. ஆ (ரு)

வினு. அசிபதத்திலெப்படி.

விடை. ஆனந்தபரவசமேகேவலம், சித்ரூபவிலாசமேசகலம், சர்வசாட்சியே சுத்தம். ஆ (ரு)

வினு. அசிபதகேவலத்தில் மூன்றவத்தையெது.

விடை. ஆனந்தபரவசந் தானனதே கேவலசாக்கிரம், ஆனந்தபரவசநீங்கிநின்றதே கேவலசொப்பனம், ஆனந்தபரவசலயமே கேவலசுழுத்தி. ஆ (ரு)

வினு. சகலத்தில் மூன்றவத்தையெது.

விடை. சித்ரூபவிலாசந்தானனதே சகலசாக்கிரம், சித்ரூபவிலாசநீங்கிநின்றதே சகலசொப்பனம், சித்ரூப விலாசலயமே சகலசுழுத்தி. ஆ (ரு)

வினு. சுத்தத்தில் மூன்றவத்தையெது.

விடை. பரப்பிரமந்தானனதே சுத்தசாக்கிரம், பரப்பிரம நீங்கி நின்றதே சுத்த சொப்பனம், பரப்பிரம லயமே சுத்த சுழுத்தி. ஆ (ரு)

வினு. அதிபதத்திலெப்படி,

விடை. சுபாவமே கேவலம், சர்வசூன்ய நிராலம்பமேசகலம், அதீதசாட்சியே சுத்தம். ஆ (ரு)

வின. அதிபதகேவலத்தில் மூன்றவத்தையெது,

விடை. சுபாவந்தானனதே கேவலசாக்கிரம், சுபாவநீங்கிநின்றதே கேவலசொப்பனம், சுபாவலயமே கேவலசுழுத்தி. ஆ (௬)

வின. சகலத்தில் மூன்றவத்தையெது,

விடை. சர்வசூன்ய நிராலம்பந் தானயிருப்பதே சகல சாக்கிரம், சர்வசூன்ய நிராலம்ப நீங்கிநின்றதே சகல சொப்பனம், சர்வசூன்ய நிராலம்பலயமே சகல சுழுத்தி. ஆ (௬)

வின. சுத்தத்தில் மூன்றவத்தையெது,

விடை. ஒழிவுதானனதே சுத்தசாக்கிரம், ஒழிவு நீங்கி நின்றதே சுத்தசொப்பனம், ஒழிவுலயமே சுத்தசுழுத்தி. ஆ (௬)

வின. நிசபதத்திலெப்படி,

விடை. அறுதியே கேவலம், யதார்த்த வனுபவமே சகலம், மோனமே சுத்தம். ஆ (௬)

வின. நிசபத கேவலத்தில் மூன்றவத்தையெது,

விடை. அறுதி தானனதே கேவல சாக்கிரம், அறுதி நீங்கிநின்றதே கேவலசொப்பனம், அறுதிலயமே கேவலசுழுத்தி. ஆ (௬)

வின. சகலத்தில் மூன்றவத்தையெது,

விடை. யதார்த்தவனுபவந் தானனதே சகலசாக்கிரம், யதார்த்தவனுபவம் நீங்கிநின்றதே சகலசொப்பனம், யதார்த்தவனுபவ லயமே சகல சுழுத்தி. ஆ (௬)

வின. சுத்தத்தில் மூன்றவத்தையெது,

விடை. ஒடுக்கந் தானனதே சுத்தசாக்கிரம், ஒடுக்க நீங்கிநின்றதே சுத்தசொப்பனம், ஒடுக்கலயமே சுத்தசுழுத்தி. ஆ (௬)

ஆ பதம் ஐந்திற்கும் அவத்தை அறுபது.

திருஷ்டாந்தபஞ்சகம்.

வின. திருஷ்டாந்தபஞ்சகமாவதென்ன,

விடை. அஃதென்னவெனின் முதலாவது, தொம்பதவாச்சியமான தூலாதிசரீரத் திரயமுஞ் சீவனுந்தள்ளி இலட்சியமான சாட்சியே தானயிருப்பதற்குத் தசம திருஷ்டாந்தம்.

வினா. அதெப்படி,

விடை. பத்துப்பேர் ஆற்றிலிரங்கிக் கரையேறித் தன்னைத்தவிர ஒருவன் ஒன்பதுபேரை யெண்ணிப்பார்த்து பத்தாவானைக் காணோமென்றழ ஒருவன்வந்து ஒன்பதுபேரையு மெண்ணச்சொல்லி உன்னோடு பத்துப்பேரென்று சொல்ல அவன்கண்டு சந்தோஷித்தது போல தனது நிஜ சொரூபமான சாட்சியையறியாமற் கலங்கிக்குரு சந்நிதானத்தில் வந்தமையைக்கண்டு ஸ்ரீசற்குருவும் தத்துவங்களான சரீரத்திரயத்தையும் சீவனையும் ஒவ்வொன்றாய்த் தள்ளிச் சேஷித்தசாட்சியே நீயென்ன அது தானாயிருப்பது.

இரண்டாவது, தற்பத வாச்சியமான விராட்டு இரணிய கர்ப்ப மாயையாகிறசரீரத்திரயமு மீஸ்வரனுநீங்கி இலட்சியமானபிரமமே தானாயிருப்பதற்கு ரச்சுசர்ப்ப திருஷ்டாந்தம்.

வினா. அதெப்படி,

விடை. சந்தியாகாலத்திற் கிடந்த பழுதையை ஒருவன்கண்டு மயங்கிப் பாம்பென்று பயந்துப் பின்தெளிந்து பார்க்கு மிடத்திற் பாம்பென்பதுபோய்ப் பழுதையே யானதுபோல அவிவேகமாகிய அஞ்ஞானத்தில் நாமரூப வர்ணாசிரம வனாத்மகமாய்த் தோன்றின பிரபஞ்சம் விவேக ஞானத்திற் பொய்யாய் சச்சிதானந்தமே மெய்யானபிரமந் தானாயிருப்பது.

மூன்றாவது, அசிபத வாச்சியமான சச்சிதானந்த வுபாதித் திரயமும் பரப்பிரமமு நீங்கி இலட்சியமான சர்வசாட்சியே தானாயிருப்பதற்குச் சாதிவியாப்தி திருஷ்டாந்தம்.

வினா. அதெப்படி,

விடை. கோவின்சாதி யேகமாயிருக்கும் கொம்பு கால் முதலிய அவயவ வர்ணவியாப்தி நானாவாய் சாதியை விட்டிராதது போலச் சர்வசாட்சி யேகமாயிருக்கும் நானாவாகிய சச்சிதானந்த மகிமையை விட்டிராதென்று சச்சிதானந்தத்தை விடாமற் சர்வசாட்சியை யறிந்து அது தானாயிருப்பது.

நான்காவது, அதிபத வாச்சியமான சுத்தம் சூனியம் சூபாவத்திரயமும் ஒழிவு நீங்கி இலட்சியமான அதீத சாட்சியே தானாயிருப்பதற்கு நான நாம திருஷ்டாந்தம்.

வினு. அதெப்படி,

விடை. பிள்ளைக்குத் தகப்பன் பேரனுக்குப் பாட்டன் தகப்பனுக்கு மகனென்று ஒருவனுக்கு நாலு நாமம்வந்தாலும் அவையொருவனுக்கேயானதுபோல அதீதத்திற்குச் சத்ரூப நீங்கினபடியால் சுத்தமென்றுஞ் சித்ரூப நீங்கினபடியாற் சூன்யமென்றும் ஆனந்தரூப நீங்கினபடியா லொழிவென்றும் நாமம் வந்தமையால் நானுநாமமு மதீதத்திற்கே யென்றறிந்து அவ்வதீதந் தானுயிருப்பது.

ஐந்தாவது, நிசபத வாச்சியமான யதார்த்தம் இரகசியம் அறுதித் திரயமும் ஒடுக்கமு நீங்கி இலட்சியமான மோனமா யிருப்பதற்கு யதார்த்த திருஷ்டாந்தம்.

வினு. அதெப்படி,

விடை. சூரியனுக்கு உஷ்ணப் பிரபையும், சந்திரனுக்கமிர்த சீதளமு மியற்கையா யிருப்பதுபோல மோனத்திற்கு யதார்த்தமியற்கை யானமையால் யதார்த்தம் இரகசியம் அறுதி ஒடுக்கம் இந்நான்கும் மோனத்திற்கே யியற்கையென்றறிந்து மோனந் தானுயிருப்பது.

வினு. வஸ்து மோனுதீத மென்பதெப்படி,

விடை. சாமவேத மகாவாக்கியம் அதுநீயானுய் அதி நிசமென்றைந்துபதம் அவற்றுள் அது வென்றது தற்பதம் இது அவாந்தரவாக்கியம் உபாதி ஈஸ்வரன் விலட்சணம் பிரமம்.

நீயென்றது, தொம்பதம் இது மகாவாக்கியம் உபாதி சீவன் விலட்சணம் கூடஸ்தர்.

ஆனுயென்றது, அசிபதம், இது நிவிர்த்திவாக்கியம், உபாதி பரப்பிரமம் விலட்சணம் சர்வசாட்சி.

அதியென்றது, அதிபதம், இது சத்தியவாக்கியம், உபாதிஒழிவு விலட்சணம் அதீதசாட்சி.

நிசமென்றது, நிசபதம், இது யதார்த்தவாக்கியம், உபாதி, ஒடுக்கம், விலட்சணம், மோனம், இதுவென்றது வேதாகமங்களாற்சொல்லப்பட்ட பொருள் அது வென்றது வேதாகமங்களுக் கதீதமாகிய பொருள் இதுவே அவாந்தரவாக்கியம் இந்தப்பொருளையே நீயென்றது மகாவாக்கியமும் இதிற் சந்தேக மனனப் பிரவிர்த்தி வாராதவகைக்குச் சொன்னது நிவிர்த்தி வாக்கியமும் இதில் அசத்தியத்வம்பிறவாமலிலீதே சத்திய மென்னு மனுபவஞ் சித்திக்குபடி சொன்னதுசத்

தியவாக்கியமும் இந்தச் சத்தியவஸ்துவில் யதார்த்த சுவானுபவமுஞ் சித்திக்கும்படி சொன்னது யதார்த்த வாக்கியமுமென்றறிக இவ்வனுபவமே சமாதி ஞானமென்றும் அஃதுள்ளவனே அபரோக்ஷமான சமாதி ஞானியென்று மறிக.

வினா. சகசஞானமாவதெது,

விடை. ஒருவிடயத்தைப் பகிர்முகத்திலும் அந்தர் முகத்திலு மதிமோகமாய்ப் புசிக்கையிலும் மகாபயத்திலும் தனது சுவானுபூதி நீங்காமலிருப்பது சகசஞானம்.

வினா. அதெப்படி,

விடை. முற்கூறிய விருபத்தைந்துபடி யொழுங்குங்கலை நீங்கி நின்ற ஞானம் எஃதோ அஃதே அந்தர் முகமாய் விலட்சணமாயிருந்ததுவும் பகிர்முகமானவிடத்து இருபத்தைந்திலும் எப்போதும் விட்டு நீங்காமலிருந்ததுவு மென்றிருப்பது.

வினா. அதெப்படி,

விடை. அதீதமாகிய இஞ்ஞானமே பகிர் முகமாய் மோனத்தானாயிருந்தபோது மோனஞானம் ஒடுக்கத்துடன்கூடி லொடுக்கஞானம் அறுதியுடன்கூடி லறுதிஞானம் இரகசியத்துடன்கூடில் இரகசியஞானம் யதார்த்தத்துடன்கூடில் யதார்த்தஞானம் அதீதத்திற்சேரி லதீதஞானம் ஒழிவிற் பொருந்தி லொழிவுஞானம் சுபாவத்திற் பொருந்தில் சுபாவஞானம் சூன்யத்திற் பொருந்திற் சூன்யஞானம் சுத்தத்திற் பொருந்தில் சுத்தஞானம் சர்வசாட்சியோடுகூடில் சர்வசாட்சிஞானம் பரப்பிரமத்தோடுகூடில் பரப்பிரமஞானம் ஆனந்த ரூபத்தோடுகூடி லானந்தஞானம் சித்ரூபத்தோடுகூடில் சித்ரூபஞானம் சத்ரூபத்தோடுகூடிற் சத்ரூபஞானம் பிரமத்துடன்கூடில் பிரமஞானம் ஈஸ்வரனோடுகூடி லீஸ்வரஞானம் மாயாரூபத்துடன்கூடில் மாயாஞானம் இரணியகருப்பத்துடன்கூடி விரணியகர்ப்பஞானம் விராட்டுருவத்திற்சேரில் விராட்டுருவஞானம் சாட்சியோடுகூடில் சாட்சிஞானம் சிதாபாசனோடுகூடிற் சிதாபாசஞானம் அவித்தையோடுகூடிலவித்தைஞானம் பிராணனோடுகூடில்பிராணஞானம் குணங்களோடுகூடிற்குணஞானம் இந்திரியங்களோடுகூடிலிந்திரியஞானம் விடயங்களோடுகூடில்விடயஞானம் பகிர்முகமாகிற்பகிர்முகஞானம்அந்தர்முகமாகி லந்தர்முகஞானம், விடயமோகமாகில் மோகஞானம்,ம

காபயமாகில் பயஞானம், நினைவிலிருக்கில் நினைவுஞானம், மறதியாகில் மறதிஞானம், சாக்கிரமாகில் சாக்கிரஞானம், ஆகி இப்படியெப்போதும்விட்டு நீங்காதிருந்தபடியா விந்தஞானமேறிலையென்று ஸ்ரீதட்சணாமூர்த்தியுஞ் சனகாதிகளுக் குபதேசித்துச் சின்முத்திரையுங் காட்டியருளினர். ஆதலால் ஓய் நைமிசாரணிய வாசிகளே இந்தஞானோபதேசக் கிரமப்படியடைந்த சிஷினுக்கு ஞானியென்றபெயர். இஃதே சகசஞானமென்றும் இவ்வனுபவ முள்ளவனே சகசஞானியென்றும் சீவன்முத்தனென்று மறிவீர்களாக.

வினா. சாட்சாத்காரஞானமாவதெது.

விடை. சர்வோதயமாய் உதயாஸ்தமனரகிதமாய் நித்தியப்பிரகாசமாய் அசம்பாவனை விபரீதபாவனையின்றி நித்தியநிரதிசயசுகமாய்ப் பிரகாசிக்கும் இவற்றுள் நிச்சயஞானத்திற் சத்தாவரணமும், சமாதிஞானத்திற் சித்தாவரணமும், சகசஞானத்தி லானந்தா வரணமும்போம், இவ்வானந்தம் விடுதலும் பற்றுதலுமாயிருக்கும் சாட்சாத்காரதிசையில் விட்டுநீங்காமல் நித்தியானந்த கெம்பீரமாயிருக்கும்.

வினா. அதெப்படியிருக்கும்.

விடை. மகாதரித்திரனைச் சார்வபூமனை ராஜசிம்மாசனத்தில் வைத்தாலவனுக்குவருஞ் சந்தோஷிம்போலவும்--பிறவிக் குருடனுக்குக்கண்தெரிந்தா லவனுக்குவருஞ் சந்தோஷிம்போலவும் -- தீராவியாதியாளனுக்கு வியாதிதீர்ந்தா லவனுக்குவருஞ் சந்தோஷிப்போலவும்--நெடுநாள் சிறைபட்டவனுக்குச் சிறைநீங்கின லவனுக்குவருஞ் சந்தோஷிம்போலவும் சுழித்தலைப்பட்டுக் கவழுங்கப்பல் கரைசேர்ந்தவுடன் கப்பலாளிக்குவருஞ் சந்தோஷிம்போலவும்-- உபாசித்ததேவதைபிரசன்னமானு லுபாசகனுக்குவருஞ் சந்தோஷிம் போலவும்--அளவிறந்தகாலம் பிறவிச்சமுத்திரத்திலழுந்தித் தொலையாத துக்கத்திற் கிடக்கிறவனுக்குச் சிவகடாக்ஷத்தினுலுங் குருகிருபையினுலும் சுருதிவாக்கிய சுபானுபவ சம்மதமாக இந்தஞானஞ்செனித்து நிரதிசயானந்தசமுத்திரத்திலழுந்தியிருப்பதே சாட்சாத்காரஞானியென்றும் விதேகமுத்தனென்றுமறிக.

வினா. தொம்பதவாச்சியந்தள்ளி இலட்சியமானசாட்சி ஞானம் பிரகாசித்தாற்போதாதோ.

விடை. போதாது அகண்டஞானசித்தியின்மையினுலுந் திருக்கைத்திரிசியமாய்க் காணுகையினுலும் தற்பதமுமறியவேண்டும்.

வினா. தற்பதவாச்சியந்தள்ளி இலட்சயமானபிரமஞானம் பிரகாசித்தாற்போதாதோ.

விடை. போதாது, பிரமத்திற்குச்சச்சிதானந்த லட்சணமிருக்கையாலும், இலட்சணத்தைத்தள்ளி லட்சியவஸ்துவை யறியவேண்டுமாதலாலு மசிபதமுமறியவேண்டும்.

வினா. அசிபதவாச்சியந்தள்ளி இலட்சயமானசர்வசாட்சிஞானம்பிரகாசித்தாற் போதாதோ.

விடை. போதாது, சர்வமென்று சச்சிதானந்த பரிபூரணத்திற்குப்பேர், இதற்குச்சாட்சியாகையாலும் அறிகிறதுமறியப்படுகிறதுமாயிருக்கையினாலும் அதிபதத்தையு மறியவேண்டும்.

வினா. அதிபதவாச்சியந்தள்ளி இலட்சயமான அதீதசாட்சிப்பிரகாசித்தாற் போதாதோ.

விடை. போதாது, இந்தவஸ்து சூன்யமாகையாலும் இதுபுத்தமதமான சூன்யவாதமாகுதலாலும் நிசபதமுமறியவேண்டும்.

வினா. நிசபதவாச்சியந்தள்ளி இலட்சியமான மோனமாய்ப்பிரகாசித்தாற்போதாதோ.

விடை. போதாது, மோனம் மவுட்டியமாகையாலும் மௌட்டியத்தில் வஸ்துநிலைமையின்மையினாலும் மோனாதீதமே வஸ்துவென்று கல்யாணசம்பவ ரகசியபோதஞ் சொல்லுகையினாலும் மோனாதீதவஸ்துவையே அறியவேண்டும்.

வினா. அதெப்படி.

விடை. மோனத்தையுமறிந்து அதைநீங்கினவன் தானல்லவோ, தானான ஞானசொரூபம்-அதுசர்வத்துக்கும் விலட்சணமாயிருந்தாலுமிருக்கும், முற்சொல்லியவிருபத்தைந்துபடி யொழுங்கோடுகூடிச் சகலவியாபாரமுஞ் செய்தாலுஞ் செய்யும், எப்போதும் நினைத்தபோதும் இந்தவஸ்துவைத் தவிரமற்ற வஸ்துக்களெல்லாந்தோற்றாமல் எப்போதும் விட்டுநீங்காத வஸ்துவாதலா லிதுவேதசம்மதியும் விலட்சணமாதலால் ஆகம சம்மதியுமாம். ஆனபடியால் இந்த நிலைவேதாகம சம்மதியென்றறிக.

குருஸ்துதி விருத்தம்.

அறிதருமவத்தைமூன்றுயபிமானியானுய்போற்றி
செறிதருஞ்சடசித்தெங்குஞ்சிதாகாசமானுய்.போற்றி
குறியொன்றுமில்றில்றகுணப்பெருங்கடலேபோற்றி
அறிவருமறிவானந்தவருட்டிருப்பாதம்போற்றி.

ஒருமொழிப்பேதம்.

வினு. ஒருமொழிப் பேதமாவதென்ன.

விடை. வைதீகம், சைவம், சாத்தேயம், வைணவம், சாங்கியமென வைந்து பேதமாயிருக்கும் அவற்றுள் வைதிகத்துக்குத் தத்தொமசியென்னும்வாக்கியமும், சைவத்திற்குப்பிரகிருதி புருஷபரமாத்மாவென்னும் வாக்கியமும், சாத்தேயத்திற்கு அபின்னுபின்ன அவித்தையாத்திரயமென்னும் வாக்கியமும், வைணவத்திற்குச் சாதாரணசமானசமூகமென்னும் வாக்கியமும், சாங்கியத்திற்குப் பிரகிருதி புருஷவிவேகமென்னும் வாக்கியமுமாய் சமய மைந்திற்கும் ஐந்து வாக்கியமாம்.

வினு. வைதீகத்திற்குச்சொன்ன தத்தொமசி வாக்கியத்திற்குப் பொருளென்ன.

விடை. வேதாகமங்களுக் கதீதமாய்விளங்கும் அதுவென்னும் பிரமமே நீயானுயென்றது.

வினு. சைவத்திற்குச்சொன்ன பிரகிருதிபுருஷபர மாத்மாவென்னும் வாக்கியத்திற்குப் பொருளெது.

விடை. அதில் ஆணவம் மாயை கன்மமெனப் பிரகிருதி மூன்றுவிதமும், சகலர் பிரளயாகலர் விஞ்ஞான கலரெனப் புருஷனில் மூன்றுவிதமும், சகளம் நிஷ்களம் சகளநிஷ்களமெனப் பரமாத்மாவில் மூன்றுவிதமுமா யிருக்கும்.

வினு. பிரகிருதித்திரயமும் நஷ்டமாய்ப் புருஷத்திரயமும் நீங்கிப்பரமாத்மாமாத்திரஞ் சித்திக்கும்வகையெப்படி.

விடை. சகலனுகிறபுருஷன் சகளமான இருபத்தைந்துமூர்த்தியாகிய மகேஸ்வரனென்னும் பரமாத்மாவை யுபாசிக்க ஆத்துமதத்துவ மிருபத்துநான்கா யிருக்கிற கன்மமாகிய பிரகிருதி விடப்பட்டுப் புருஷனுக்குச் சகலனென்பதுபோய்ப் பிரளயாகல னென்னும்

பெயர்வரும்--பிரளயாகலனுகிற புருஷின் சகளநிஷ்களமான பஞ்ச சாதாக்கியமாகிய சதாசிவமென்னும் பரமாத்மாவை யுபாசிக்க வித்தியாதத்துவ மேஷாயிருக்கிற மாயையாகிய பிரகிருதி விடப்பட்டுப் புருஷினுக்குப் பிரளயாகலனென்பதுபோய் விஞ்ஞானகல னென்னும் பெயர்வரும்--விஞ்ஞானகல னுகிறபுருஷின் நிஷ்களமான அகண்ட பரிபூரணமாகிய சச்சிதானந்தசிவமென்னும் பரமாத்மாவை யுபாசிக்கச் சிவதத்துவமைந்தாயிருக்கிற ஆணவமலமாகிய பிரகிருதி விடப்பட்டுப் புருஷினுக்கு விஞ்ஞான கலனென்பதும்போய்ப் பரமாத்மாவாவன், அப்போது பிரகிருதியாகின்ற மும்மலமும் விடுபட்டுப் புருஷனென்கிற நாமத்திரயமும் போய்ப் பரமாத்மாவே தானென்பது சித்திக்கும்.

வினு. சாத்தேயத்திற்குச்சொன்ன அபின்னுபின்ன அவித்தையாத் திரிவிதமென்னும்வாக்கியத்திற்குப்பொருளேது.

விடை. இதில், சத்து சித்து ஆனந்தமென அபின்ன சத்தியில் மூன்றுசத்தியும், விராட்டு இரணியகருப்பம் விட்சேபமெனப் பின்னுசத்தியில் மூன்றுசத்தியும், தமம் விகிர்தம் ஆவரணமென அவித்தையாசத்தியில் மூன்றுசத்தியுமாம்.

வினு. இதுகளுக்கு லயமெப்படி.

விடை. விராட்டுதானுனல் தமோசத்தியும், இரணியகர்ப்பந்தானுனல் விகிர்தசத்தியும், விட்சேபந்தானுன லாவரண சத்தியும், காரணமான பின்னுசத்தியாகிய மாயைதானுனுற் காரணவவித்தையா சத்தியும், சத்தேதானுனல் விராட்டும், சித்தேதானு னிரணியகர்ப்பமும், ஆனந்தமேதானுனல் விட்சேபமும், அபின்னுசத்தியேதானுனுற் பின்னுசத்தியுமில்லை.

வினு. இப்போதுசொன்ன நான்குசத்தியும் அவாந்தரவாக்கிய சத்திகளாம். இனி மகாவாக்கிய சத்திகளாகிய நான்கு சத்திகளுக்கும் லயமெப்படி.

விடை. சித்தேதானுனுற் சத்ரூபசத்தியும் ஆனந்தந்தானுனுற் சித்ரூபசத்தியும் அபின்னுசத்தியே தானுனலானந்தரூபசத்தியும் சுபாவமேதானுனல்பின்னுசத்தியு மில்லையென்றறிக.

வினா. வைணவத்திற்குச்சொன்ன சாதாரணசமானசமுகமென்னும்வாக்கியத்திற்குப்பொருளெல்ன.

விடை. மூர்த்தம்,மூர்த்தா மூர்த்தம்,அமூர்த்தமெனச் சாதாரணத்தில் மூன்றுவிதமும் மூர்த்தி மூர்த்தாமூர்த்தி அமூர்த்தியெனச் சமானத்தில்மூன்றுவிதமுஞ்சமானம் தாதாமியம் அயிக்கியமெனச் சமுகத்தில் மூன்று விதமுமாம்.

வினா. மூர்த்திசாதாரணத்தில் மூர்த்திசமானமாயயிக்கியசமுகமாகாதோ.

விடை. ஒருவியாபகத்திலொருவியாபகங்கூடாதபடியினாலும் அதிவின்பமில்லாதபடியினாலும்செய்தநன்றிமறக்கையாலும் காட்சியற்றபடியினாலும் பிரத்தியட்சமாகாதபடியினாலுங்கூடாது.

வினா. மூர்த்தா மூர்த்திசாதாரணத்தில் மூர்த்தா மூர்த்தசமானமாய்த்தாதாத்மியசமுகமாகாதோ.

விடை. உருவாருவங் கூடாதபடியினாலும் ஏகலட்சணமானசமானமாகையினாலும் அனிர்வசன்னிய மானபடியினாலும்ஏகலட்சணானந்தமின்மையினாலும் சமானலட்சண தாதாத்மியங் கூடாமையினாலுங்கூடாது.

வினா. அமூர்த்திசாதாரணத்தில்அமூர்த்தியசமானமாய் சமானசமுகங்கூடுவதெப்படி.

விடை. குளவி புழுவைதன்னிறமாக்குவதுபோல் உருவம்ஏகலட்சணமாகையினாலும் கருவிகரணங்களாற்கண்டமகிழ்ச்சியானந்தமுண்டாகையினாலும் பெத்தத்திற்கண்ட மூர்த்தியேமூர்த்தியில்மாறுபடாதபடியினாலும்நிசபத்திகைவல்யமாகையினாலும்ஆனந்தகல்யாணகுணவிளையாட்டினாலும் சமானத்வமுத்தியேநிச்சயமென்றறிக.

வினா. சாங்கியத்திற்குச்சொன்ன பிரகிருதிபுருஷ விவேகமேன்னும்வாக்கியத்திற்குப்பொருளென்ன

விடை. பிரகிருதித்துவம் பூதம் (ரு) ஞானேந்திரியம்(ரு)கன்மேந்திரியம் (ரு) பிராணாதிவாய்வு (ரு) காரணம் (௪)என இருபத்துநான்காம் இவற்றில் தானாயபிமான தாதாத்மியமானவன்புருஷன்.

வினா. தாதாத்மியமாவதெப்படி

விடை. நான் தனவான் பூமான் புத்திரகளத்திரவான் நான்பருத்தேன் இளைத்தேன் கண்டேன் கேட்டேன் புசித்தேன் கொடுத்தேன்

போனேன் எனக்குப்பசிக்கின்றது தாகிக்கின்றது நான் சங்கற்பித்தேன் நிச்சயித்தேன் அகங்கரித்தேனென்பதேதாதாத்மியம்.

வினா. விவேகமாவதேது

விடை. என்தனம் என்பூமி என்புத்திரகளத்திரம் என்சரீரம்என்கண் என்காது என்கால் என்கை என்பிராணன் என்மனம் என்புத்தியென்னும் விவேகத்தாற் பிரகிருதியும் புருஷனும் வேறென்றறிந்து புருஷனுன சைதன்யந் தானுனதே விவேகஞானமென்றறிக இவ்வைந்தனுள் வைதிகமே சுபாவநிலை அஃதேமோட்சம்.

வினா. சைவத்தை இங்ஙனஞ்சொல்லுவானேன்,

விடை. இந்நிலை வரும்பொருட் டுபாசிக்குந் தேவதையைச் சொன்னது.

வினா. சாத்தேயத்தைச் சொல்லுவானேன்,

விடை. ஒருவுபாதியுமற்ற தனக்குபாதி வரலானுரைத்தது.

வினா. வைணவத்தைச் சொல்லுவானேன்.

விடை. முடிந்தநிலையன்றிக் கீழ்ச்சொன்ன வுபாதிபேததேவதையை யுபாசித்தால் தானுமந்த மயமாவனென்று சொன்னது.

வினா. சாங்கியத்தைச் சொல்லுவானேன்,

விடை. உபாதிதத்துவத்திற் கட்டுப்பட்டு ஆகாமியமேறிச் ஜென்மம் வராமல் நீங்கி நிற்றலென்றறிக.

குருஸ்துதி.

விமலனேயென்னுள் வேறற்றகாட்சியே
நிமலனே நித்தியானந்தரூபனே
கமலநேயக் கதிரவன்போலுளத்
தமலனேயறிவானந்தரூபனே.

சர்வாகருஷண வாக்கியசம்பிரதாயம்.

ஓய் ரிஷிகளே விவேகம் சாங்கியம் யோகமென மூவகை இம்மூவகைக்கும் பக்குவ அதிகாரிகள் மூவருண்டு.

வினா. அவர்களார்,

விடை. சமரசன் சாங்குசித்தன் சர்வத்தியாகி எனமூவராம்.

வினா. இம்மூவருக்கும் பூர்வகன்மபலமேது.

விடை. ஈஸ்வரனை நெடுநாளுபாசித்து அவர் கிருபைபெற்றப ரிபக்குவனுக்குச் சமரசனென்றும், வஸ்துவைபதார்த்தமாயறிந்த மகத்துக்களை யுபாசித்து அவர்கிருபைபெற்ற பரிபக்குவனுக்குச் சாங்குசித்தனென்றும், ஞானசொரூபமாய் விளங்குகிற சற்குருவுக்குச் சிசுருஷைசெய்து அவர்கிருபைபெற்ற பரிபக்குவனுக்குச் சர்வத்தியாகியென்றும்பெயர்.

வினா. இப் மூவருக்கு மிலட்சணமேது.

விடை. சமரசன், தேகாதிப்பிரபஞ்சத்தி லாசையற்று ஈஸ்வரபத்தியாய் சற்கிருத்தியஞ்செய்துக்கொண்டிருப்பான். சாங்குசித்தன், தேசாதிப்பிரபஞ்சத்திலாசையற்றுச் சற்கிருத்தியமும்விட்டுமோட்சதாகியாயிருப்பன். சர்வத்தியாகி, தேகாதிப்பிரபஞ்சத்தி லாசையற்றுபசாந்தனாகி யிருவகைக்கிருத்தியத்திலு முபாரதிபடைந்து நித்தியாமயக்கமுடையவன்போ லிருப்பன்.

வினா. ஆனாலிம்மூன்றுபக்குவர்களுக்கு மேதையுபதேசிப்பது.

விடை. சமரசனுக்கு, நீயதுவென்றவாக்கியத்தை யுபதேசித்து சமரசஞான நூலையுங்கொடுத்து அவனை அதன்வழியே நிறுத்தவேண்டும். மேலும் தனது சரீரத்திரயம் சீவன்சீவசாட்சியாகிய இவற்றை ஈஸ்வரசரீரத்திரயம் ஈஸ்வரன் ஈஸ்வரசாட்சியாக்கி அவனைப்போலவருக்குச் சமமானபடியா லவனுக்குச்சமரச னென்னும்பெயர்.

சாங்குசித்தனுக்கு, நானீ அதுவென்றவாக்கியத்தை யுபதேசித்துச் சாங்கியநூலையுங்கொடுத்து அவனை அதன்வழியேநிறுத்தவேண்டும். மேலும் சாங்கியத்திற்சித்திக்கப்பட்டசித்து தானாகையாலவனுக்குச்சாங்குசித்தனென்றுபெயர்.

சர்வத்தியாகிக்கு அது நீயானுமென்ற வாக்கியத்தை யுபதேசித்து யோக நூலைக்கொடுத்து அவனை அந்தவழியே நிறுத்தவேண்டும் மேலும் தேகமுதற் சுபாவவரையில்பதினாறுந்தியாகம்பண்ணிஅவைக் கதீதமான பொருளாதலா லவனுக்குச் சர்வத்தியாகியென்றுபெயர்.

வினா. ஆனாலிந்த நாமங்கள் சாத்தியத்திலல்லவோ வரவேண்டும் சாதனத்தில் வருவானேன்,

விடை. காரியசித்தியில் வருகிற நாமங் காரணத்திலும் வரும்.

வினா. அஃதெங்ஙனம்.

விடை. சர்வத்தையுந் தகித்தும் பிற்பாடு சுகத்தை யடையப்

போகிற சுகருக்குச் செனித்தபோதே சுகரென்றும் யாகத்தி லக்கினி காரியமான கன்னைக்கு அவ்வியாகத்திற்கு முன்பே அக்கினியென்றும் சிட்டாசாரமான சற்கருமம் பிறகு செய்யப்போகிறவசிட்டருக்கு உற்பத்தியில்தானே வசிட்டரென்றும் பேர்வந்ததுபோல வரும்.

வினு. அந்தந்தப் பக்குவர்களுக் கேற்ற வுபதேசமுஞ் சாத்திரமுமல்லாமல் மாறுபாடான வுபதேசம்பெற்றுச் சாஸ்திரமும் பார்க்கி லனுபவசித்தி யாகாதோ,

விடை. சித்திக்காது ஆயின் விபரீதபாவனை போமன்றி அசம்பாவனை போகாது விபரீதபாவனை குருசாஸ்திரங்களால் தீரும், அசம்பாவனைவரில் குருசாஸ்திரங்களினலுந்தீராது விபரீதபாவனையுடையவனை அனுத்மத் துரோகியென்றும், அனுபவத்திற் சந்தேகம்பிறந்து நிற்குநிலைகொள்ளாமல் தவறுகையினல் ஆத்மத் துரோகியென்றும், பிரமத்துரோகியென்றும், இந்தத்துரோக நீங்குதற் கிதற்குமேலனுபவமுஞ் சாஸ்திரமு மின்மையா லொன்றினலும் போகாதென்றும் நான்குப நிடதங்களிற் சொல்லுகின்றது.

வினு. அஃதெப்படி,

விடை. சத்தியஞ் சத்யம் புனர்சத்யம் சம்சயானுபவங்கதீ நாஸ்தி என்றும், அதோ அதோ சம்சயேகதி தேவநித் துருநாஸ்தி என்றும், சம்சயோகதி ரௌரவோகும்பி ரௌரவோகும்பி என்றும், இகபரம் நாஸ்தி பரம் நாஸ்தி நாஸ்தி பலோற்பம் வாக்கியோ சம்சயம் நவித்யதே என்றுஞ் சொல்லப்பட் டிருக்கின்றன ஆதலாலிதர சாஸ்திரங்கள் பார்க்கலாகாது பார்க்கவேண்டு மாயின் தனது சுவானுபவநிலை விடாமற் சாவதானமாய்ப் பூர்வபட்சமாகப் பார்த்துத் தள்ளவேண்டும்.

வினு. ஞானம்பெற்ற இம்மூவருக்குங் கிருத்திய மெப்படி,

விடை. சமரசன் சற்கிருத்தியம் வழுவாமற் செய்யவேண்டும் சாங்குசித்தன் சர்வவிடய சகிதனுயிருக்கினுந் தாழ்வில்லை சர்வத்தியாகி இவ்விருவகைக் கிருத்தியமும் விட்டுச் சுழுத்தியவ்போலிருப்பன் ஆயினும் இப் மூவருக்கும் முத்தி சரியென்றறிக.

பிரமானுபவம்.

வினா. யாஞ்ஞவர்க்கர் மயித்திரிக் கனுக்கிரகஞ்செய்த பிரமானுபவமெப்படி,

விடை. பிரமம் சீவன் அவித்தை அந்தக்கரணம் இந்திரியம் விஷயம் ஆகூ ௬ - இவைக்கனுபவ மேதென்றால் ஒருபாதியுமின்றித்தானே தானுய்ப் பிரகாசிப்பது பிரமம் அந்தப்பிரமம் அவித்தையிற் பிரதிபலித்தபோது சீவனும் அந்தச்சீவன் அவித்தையிற் கூடிற் சுழுத்தியும், அந்தக்கரணத்திற் கூடிற் சொப்பனமும், இந்திரியத்திற்கூடிற்றேகமாத்திர ஞானமும் விஷயத்திற்கூடிற் சாக்கிராவத்தையுமாம்.

வினா. இச்சாக்கிராவத்தையில் விவகரிக்கும்போது அவ்வாறு தத்துவத்திற்கும் வகையெப்படி,

விடை. பார்க்கப்பட்டது விஷயம் பார்த்தது இந்திரியம்.

வினா. இந்திரியம் பார்க்குமோ,

விடை. பார்க்கமாட்டாது.

வினா. பார்த்ததெது,

விடை. அந்தக்கரணம், அவித்தை, சீவன்.

வினா. அதெப்படி,

விடை. இந்திரியத் துவாரத்தா லந்தக்கரண விருத்தி பிரவர்த்தித்து விஷயாஞ் ஞானத்தைப்போக்கி விஷயாகாரமாய் அவ்விஷயத்தைத் தோற்றுவித்தது அவ்விருத்தியைப் பாவித்தது அவித்தைவிஷயத்தைப் பகுத்தறிந்தது சீவன் இவையெல்லாம் விளக்கமாயறிந்தது பிரமம் அந்தப்பிரமம் ஒன்றிற்கும் விஷயமல்லவென்றறிக.

வினா. பிரமம் ஒன்றினாலு மறியப்படாதென்றால் முயற்கொம்பும் அறியப்பட்ட தென்றாற் கடபடாதிகளைப் போற் சடத்துவமுமாமே,

விடை. விஷயம் பிரபஞ்ச விஷயமென்றும் பிரம விஷயமென்று மிரண்டுவகையாயிருக்கும் அவற்றுள்பிரபஞ்சவிஷயத்தைபார்க்கும்போது இந்திரியமும் அந்தக்கரணமும் சீவனும்வேண்டும்.

வினா. அதுகளெப்படிபார்க்கும்,

விடை. விஷயத்தை இந்திரியம் பார்க்கும் அந்தக்கரணந் தோற்றுவிக்கும் சீவனறியும் இம்மூன்று லட்சணமும் பிரமத்தி லிருக்கையா லிதுகளைக்கொண்டு பிரமத்தை யறியப்படாது.

வி௵. அதெப்படி,

விடை. சர்வசாட்சியா யெல்லாவற்றையுந்தான்பார்க்கிறபடியி ஞல் அதையறிய இந்திரியமும் சுயம்பிரகாசமா யெல்லாவற்றையுந் தோற்றுவிக்கிற படியினு லந்தக்கரணமும் அறிவே வடிவா யெல்லா வற்றையுந் தானறிகிற படியிஞற் சீவனும் வேண்டுவதில்லை ஆகையா ல் சர்வமுமறிகிறது சர்வசாட்சி அதை ஒன்றினு மறியப்படாது.

வி௵. அந்தச்சாட்சியை யறியும் விதமெப்படி,

விடை. சாட்சிஞானங் கொண்டே சாட்சியையறியவேண்டும்.

வி௵. விஷயேந்திரிய கரண வஸ்த்தைகளைச் சீவனே யறியுமெ ன்று சாஸ்திரத்திலு மனுபவத்திலு மிருக்க நீர் பிரம மறியுமென்பது ம் இச்சீவனையே பிரமமென்பதுங் கூடாது ஒருடலிலிரண்டுசித்திருந் து அறியும்வகை யெங்களுக்குச் சொல்லவேண்டும்.

விடை. ஒருடலி லிரண்டு சித்திருப்பதற்குச்சுருதி யுத்தி யனுப வம் இரண்டிரண்டாகும்.

வி௵. சுருதி யிரண்டாவதெப்படி,

விடை. ஒருவிருட்சத்தி லிரண்டு பட்சிகளுண்டு அதில் ஒருபட் சி ஒருகிளையிலிருந்து அசையாமற் பார்த்திருக்கும் ஒருபட்சி கிளைக டோறுந் தத்தித்திரிந்து பழங்களைப்புசிக்கும் அதுபோலச் சாட்சிசை தன்யம் சரீரத்தில் நிர்விகாரமாயிருக்கும் சீவசைதன்யம் விகாரியாய் விஷயத்தைப் புசிக்குமென்றெரு சுருதியிலும் நாடகசாலை தீபம் பி ரபு கூத்தாடிச்சி தாளமத்தளக்காரர் சுற்றிலும் பார்க்கிற பரிவாரங்க ளைப் பிரகாசிப்பிக்கு மதுபோல் பிரகாசசாட்சி சீவன் அந்தக்கரண ம் ஞானேந்திரியம் கன்மேந்திரியம் விஷயம் ஆகிய இதுகளைப்பிரகா சிப்பிக்கும் ஆதலால் சாட்சி சீவன் உண்டென் றெரு சுருதியிலுஞ் சொல்லப்படுகின்றது.

வி௵. யுத்தியிரண்டாவதெப்படி,

விடை. ஒருகனியைக் கண்ணனது இச்சையற்றறியும் நாவான து அறிந்து இச்சிக்கும் அதுபோல ஒருவிடயத்தைச் சாட்சியானது இச்சையற்றறியும் சீவன் அறிந்து இச்சிக்குமென்பது ஒருவிதயுத்தியு ம் கண்ணனது நீலோற்பல ரூபத்தையறியும் ஆக்கிராணமானது, அ ரூபமான மணத்தையறியும் அதுபோலப் பிரபஞ்ச ரூபத்தைச் சீ

வனறியும் அரூபமான அஸ்திபாதி பிரியத்தைச் சாட்சியறியு மென்பது ஒருவிதயுத்தியுமாம்.

வினு. இருவகை யனுபவமெப்படி.

விடை. என்சரீரம் என்கால் என்கை என்கண் என்மனம் என்அஞ்ஞானம் என்றவன் சீவன்--என்சீவன் போயிற்று என்சீவன் வந்ததென்றது சாட்சியென்பது ஒருவிதவனுபவமும், ஆரங்கேயென்றால்நான்தானென்பதனுல் நான்என்றது சீவனும் தான்என்றது சாட்சியுமென்பது ஒருவிதவனுபவமுமாம்.

வினு. நான்தானென்றது சீவனன்றிச் சாட்சியென்று சொல்லக்கூடாதே.

விடை. நானொரு குற்றஞ்செய்தால் தானே பொறுக்க வேண்டாவோ, நானுந்தானுமிருக்கிற வொருமைக்கிப்படி வரலாமோ, என்பதனுல் நானென்றது தன்னையும், தானென்றது தனக்கன்னிய மானபுருஷின்போலும் நானென்றது, சீவனுந் தானென்றது தனக்கன்னியமான சாட்சியுமென்றறிக.

வினு. ஆரங்கே யென்னுமிடத்து, நானென்று விவகரிக்கிறவன் நானென்று சொல்லவேண்டுமென்றித் தனக்கன்னியசாட்சியுங் கூட்டிக்கொண்டு நான்தானென்று விவகரிக்கக்காரியமேது.

விடை. வீட்டுக்கன்னியமாய் நிற்றபுருடனை வீட்டிலாரொன்று ஒருவன்கேட்கத் தூங்குகிறவனையுங்கூட்டி விழித்திருப்பவன் நாங்கள் தானென்று சொல்வதுபோல, விவகாரசீவனுஞ் சாட்சியைக் கூட்டியொன்ருய்ச் சொல்லுவதென்றறிக.

வினு. சாட்சியுஞ்சீவனு மிரண்டானுல் உமது அத்வைத சித்தாந்தங் கூடாதே.

விடை. ஆதித்தப்பிரகாசத்தில் தீபப்பிரகாசமடங்கினதுபோல கண்டசுயம் பிரகாசத்திற் சீவப்பிரகாச மடங்கி அகண்டந் தானுயிருக்கும்.

வினு. அகண்டபரிபூரணமே தானுனுற் கயிலாயம் வைகுந்தத்திலகண்டவழிவெப்படி யிருக்கும்.

விடை. கயிலாயவைகுந்தங்களில் விருத்தியுஞ்சீவனுமின்மையாலழியேனென்ருய் இவ்விடத்தில் விருத்தியுஞ்சீவனுமுண்மையா லழி

ந்தேனென்றாய், அறிந்தேன் அறியேனென்றவன்சீவன், அவ்விரண்டி ற்குஞ் சாட்சியாயிருந்ததேபிரமம்.

வினா. ஆனால், அநிர்த சடதுக்கமான பிரபஞ்சமும் சச்சிதான ந்தமான பிரமமுமுண்டென்றால் பிரமமொன்றேயென்ற வேதத்தி ற்கு விருத்தமாமே.

விடை. சத்தென்றால் அநிர்தமும் சித்தென்றால் சடமும் ஆனந் தமென்றால் துக்கமுமில்லை.

வினா. சகலமுஞ் சச்சிதானந்த பிரமமாய்க் கண்ட பேருக்கும் மற்றவேளையில் பிரபஞ்சந் தோற்றுகையால் இப்போது தோற்றின பிரபஞ்ச சத்தையே பிரமமென்றீரோ.

விடை. நான் நித்திரைசெய்யுமுன்பு விருத்திமாத்திரமா யிருந் தும் விருத்தியிற்கண்ட சொப்பனமெல்லாம் விருத்தியைவிட வேறி ல்லாததுபோற் சமாதியிலறிவுமாத்திரமாயிருந்தும் அவ்வறிவிற்தோ ன்றின தேகாதிப்பிரபஞ்சமுமறிவைத் தவிரவேயில்லை.

வினா. தாதாத்மியலட்சண அஞ்ஞானவவித்தையில் விவகாரங்கூ டும், தாதாத்மிய ரகிதஞானத்திற் சரீரத்திரயமும் ஆபாசனும்லயமா ய் ஒருசெயலுமற்றுத் தானேதானாய்ப் பிரகாசிக்கின்ற ஞானிக்கு வி வகார மெப்படிகூடும்.

விடை. குலாலன் அசைவற்றிருந்துந் திரிகைவிசையுள்ள வளவு மாடியோய்கிறதுபோல் தானே அசங்கனானாலும் பிராரத்தசரீரமுள்ள வளவும்பொசித்துத் தொலைத்துத்தன்னிலேநிற்கும்.

வினா. பிராரத்தம் பொசிக்கையில் ஆகாமியமேறி யிருவினையுங் கட்டுப்பட்டு ஜென்மம்வருமே.

விடை. பிரமசொரூபமே தானாயிருந்து பொசிக்கையினாலாகா மியமேறாது, முன்னர்தான் சொரூபமென்று சிந்தித்தபோதே சஞ் சிதநீங்கும், இப்போதிச்சிக்கின்ற சுகதுக்கமெல்லாம் பிரமத்திற் கா கையாற் பிராரத்தமுமில்லை. ஆதலாலிம்மூன்றுமில்லாத பிரமசொரூ பமே தானாயிருப்பது தீர்ந்ததிலையென்றறிக.

தத்துவநிராகரணம்.

வினு. தத்துவநிராகரண மாவதெது.

விடை. தீபத்திற் சூடிருப்பதுபோற் சர்வசாட்சி யிடத்திற் சிற்சத்தி யிருக்கும். தீபத்திலும் கிரகத்திலும் பிரகாசித் திருக்கிற பிரகாசஞ் சகலருக்கும் சுகத்தின் பொருட்டும், தீபத்திலும் சலத்திலும் பிரவேசித்திருக்கின்ற சூடு சகலருக்குந் துக்கத்தின்பொருட்டுமா யிருக்கும்அதுபோலச் சர்வசாட்சியான சுயஞ்சோதி தானுயிருக்கினும் சர்வவியாபகமா யிருக்கினு மனந்த சுகமாயும் சிற்சத்தி சாட்சியிடத் திருக்கினும் ஜீவேசுர சித்தாகாரமா யிருக்கினு மனந்ததுக்க ரூபமாயு மிருக்கும்.

வினு. சிற்சத்தி யனுபவமும் சகலமுந் தன்னிடத் துற்பத்தியும் அச்சிற் சத்தி ஞானத்தா லெந்தப் பொருளைத் தானுய்க் கண்டானே அந்தப்பொருளுக்கு மேலானபொருள் தோற்றுமற்கண்டபொருள் தானுயிருக்கிறது மெப்படி,

விடை. அகம் நான் எனதென்று வருகிற வனுபவமே சிற்சத்தி அதினுற்பத்தியும் அதிலபிமானித்த பொருளே தானுகிறது மெப்படியென்ருல் அகமற்றது சர்வசாட்சி சர்வசாட்சியோகமென்ருல் அது தானுய் விளங்குஞ் சர்வசாட்சியுஞ் சிற்சத்தியு முண்டாம். ஆ தத்துவம் (உ) பரப்பிரமோகமென்ருல் சர்வசாட்சி தோன்றுமற் பரப்பிரமந் தானுயிருக்கும் அப்போது சர்வசாட்சி சிற்சத்தி பரப்பிரமம் ஆ தத்துவம் (ங) ஆனந்தோக மென்ருல் பிரமானந்த சொரூபந் தானுவன் அப்போது ஆனந்தம் அவத்தை அபிமானியுடன் ஆ தத்துவம் (சு) சின்மயாத் திரோகமென்ருல் சித்தேதானும் அப்போது முன்போல தத்துவம் (கூ) சன்மாத்திரோகமென்ருல் சத்தேதானும் அப்போது முன்போல தத்துவம் (யஉ) பிரமோகமென்ருல் பிரமமேதானும் அப்போது தத்துவம் (யங) சர்வேஸ்வ ரோகமென்ருல் நுஸ்வரனே தானுவன் அப்போது தத்துவம் (யச) சர்வஞ்ஞோக மென்ருல் அந்தரியாமிதானுவன் அப்போது முன்போலதத்துவம் (யஎ) சர்வவியாபி யோகமென்ருல் இரணியகர்ப்பந்தானுவன் அப்போது சமஷ்டி சூட்சுமபூதம் (ரு) உடன் முன்போல தத்துவம் (உச) விஸ்வோகமென்ருல் விராட்டே தானுவன் அப்போது வியஷ்டி சூட்சும பூதம் (ரு) உடன் முன்போல தத்துவம் (ஙக) சாட்சியோக மென்ரு

ல் சாட்சி தானவன் அப்போது தத்துவம் (௫௫) போதோகமென்றா ல் சீவன் தானவன் அப்போது தத்துவம் (௫௫) நாலஞ்ஞானியென் ருல் அஞ்ஞானம் அவத்தை அபிமானியுடன் அப்போது தத்துவம் (௫௫) என்மனே விருத்தியென்றால் சூட்சுமசரீரந்தானவன் அப்போ து முன்போல தத்துவம் (௫௮) என் சரீரமென்றால் தூலசரீரந்தான வன் அப்போது முன்போல தத்துவம் (௬௬) ஆ அறுபத்தாறு த த்துவமும் மேற்கூறிய பதினைந்து பொருளுந் தானவதினு லுற்பத் தியாமென்றறிக.

வின. இனி விவேகம் பிறந்து இவற்றை நீங்கி நிற்கும் முத்திக் கிரமமெப்படி,

விடை. இவ்வறுபத்தாறு தத்துவமான தூலதேகத்தையே தே கோகமென்று அது தானயிருந்தால் இகலோக முத்தனென்றும் அது நீங்கிச் சூட்சுமதேகந் தானய் என்மனே விருத்தியென்றால் ஐம்பத் தெட்டு தத்துவந் தானவன் அப்போது பரலோக முத்தனென்றும் அது நீங்கிக் காரணதேகந் தானய் நான் அஞ்ஞானியென்றால் முப்ப த்தாறு தத்துவந் தானய் யோகமுத்தனென்றும் போதோகமென்றா ல் அது நீங்கி முப்பத்தமூன்றுதத்துவமாகியசீவன் தத்துவந்தானய் முத்தனென்றும்சாட்சியோகமென்றால்அதுநீங்கிமுப்பத்திரண்டு தத் துவமான சாட்சி தானய் சீவன் முத்தனென்றும் விஸ்வோகமென் றால் அது நீங்கி முப்பத்தொரு தத்துவமான விராட்டு தானய் விஸ் வரூப முத்தனென்றும் சர்வவியாபியோகமென்றால் அது நீங்கிஇரு பத்துநான்கு தத்துவமான இரணியகர்ப்பந் தானய் வியாபக முத்த னென்றும் சர்வஞ்ஞோகமென்றால் அது நீங்கிப் பதினேழு தத்து வமான அந்தரியாமி தானய் சர்வஞ்ஞ முத்தனென்றும் சர்வேஸ்வ ரோகமென்றால் அது நீங்கிப் பதினன்கு தத்துவமான ஈஸ்வரனே தா னய் கர்த்திருத்வ முத்தனென்றும் பிரமோகமென்றால் அது நீங்கிப் பதின்மூன்று தத்துவமான பிரமமே தானய் பிரம முத்தனென்றும் சன்மாத்திரோகமென்றால் அது நீங்கிப் பன்னிரண்டு தத்துவமான சத்தே தானய் பாவ முத்தனென்றும் சின்மாத்திரோகமென்றால் அ து நீங்கி ஒன்பது தத்துவமான சித்தே தானய் ஞானமுத்தனென்று ம் ஆனந்தோகமென்றால் அது நீங்கி ஆறு தத்துவமான பிரமானந் தந் தானய் பரமானந்த முத்தனென்றும் பரப்பிரமோகமென்றால்

அது நீங்கி மூன்று தத்துவமான பரப்பிரமந் தானுய் பரமுத்தனென் றும் சர்வசாட்சி யோகமென்றால் அதுநீங்கி இரண்டு தத்துவமான சர்வசாட்சி தானுய் விவேக முத்தனென்றும் பெயர். சர்வசாட்சி ஞான நீங்கினல் சிற்சத்திபுநீங்கும் அஃது நீங்கவே ஏகத்வமானமோ ஞதீத சொரூபந் தானுய் அபாவ முத்தனென்று சொல்லப்படும்.

ஞானத்திரயத்திரிபுடி.

வினு மேற்கூறிய ஞானத்திரயங்களில் பகிர்முகமான திரிபுடி விளங்குவதெப்படி.

விடை. சீவசாட்சிஞானம் பகிர்முகமானபோது விடயம் விருத்தி சீவன் (௩) அந்தர்முகமானபோது நிராகாரம் நிர்விடயம் நிர்மலம் (௩) ஈஸ்வர சாட்சிஞானம் பகிர்முகமானபோது இச்சை ஞானம் கிரியை (௩) அந்தர்முகமானபோது சத்து சித்து ஆனந்தம் (௩) சர்வசாட்சிஞானம் பகிர்முகமானபோது சுத்தம் சூன்யம் சுபாவம் (௩) இம்மூன்று லட்சணமுநீங்கிச் சர்வசாட்சிஞான மடங்கின நிலையில் யதார்த்தசொரூபமாகிய தானேதானுன மோனுதீதமாய்ப் பிரகாசிக்கும் இதுவேமுடிந்தநிலை.

வாக்கியசிந்தனை தத்துவதரிசனம்.

வினு. வாக்கியசிந்தனையை யனுக்கிரகிக்குமுறைமை யெப்படி.

விடை. வாக்கியப்படி யொழுங்கிருபத்தைந்துந் தரிசிக்கிறதற்குச் சமயவாதிகளும் சாஸ்திரவாதிகளு மோவ்வொன்றை யனந்தபேதமாகச் சொல்லுவார்கள் அது இன்னவகையினு லின்னது கூடாது இன்னது கூடுமென் றறியவேண்டும்.

வினு. தூலசரீர தரிசனமென்பது அவயவத்தையோ, உடற்கூற்றையோ, பூதகாரியத்தையோ, விடயத்தையோ, தேகத்தையோ,

விடை. தன்னவயவம், தனக்குப்பிரத்தியட்ச மாகாமையினுலும் உடற்கூறு, பஞ்சபூதவடிவாகையாலும் பூதகாரியமெல்லாம், தூலசரீரமாகாதாகையினுலும் விடயம், பஞ்சபூதகுண மாகையாலுங்கூடாது. தேகோகம், பிரயோகத்திருக்கையாற்கூடும்,

வினு. சூட்சும சரீர தரிசனமென்பது விடயரூப விருத்தியோ தமோகுணமோ விருத்திஞானமோ நாற்கரணத்தையுந்தரிசிப்பதோ சஞ்சலவிருத்தியோ.

விடை. விடயரூபவிருத்தி, போக்கமாகையினுலும் தமோகுணம், அந்தகாரமவுட்டிய மாகையினுலும் விருத்திஞானம், விருத்தியிற் சம்பந்தித்தசாட்சி ஞானமாகையினுலும் நாற்கரணத்தையுந்தரிசித்தல், மனேவாங்காரமொன்ருய் அஞ்ஞானமூல மாகையாலும் மனத்தையே தரிசிக்கையாலுங்கூடாது சஞ்சலவிருத்தி, விஷயபகிர்முகமற்று அந்தர்முகசித்தசஞ்சல மாகையாற்கூடும்.

வினு. காரணசரீர தரிசனமென்பது தமாந்தகாரமோ பூதாந்தகாரமோ மவுட்டியாந்தகாரமோ மோகாந்தகாரமோ விஷயலயாந்தகாரமோ சுழுத்தியானந்தகாரமோ அவித்தையாந்தகாரமோ.

விடை. தமாந்தகாரம், மக்கினதமசாகையினுலும், பூதாந்தகாரம், பூதமறைப்பாகையாலும் மவுட்டியாந்தகாரம், மவுட்டியமாகையாலும் மோகாந்தகாரம், மயக்க மாகையாலும் விஷயலயாந்தகாரம், விஷயலயவாசனை யிருக்கையாலும் சுழுத்தியாந்தகாரம், அந்தகாரவனுபவ மில்லாதாகையினுலுங்கூடாது, அவித்தையாந்தகாரம். தந்சொரூபமும் விஷயமுந்தோற்ரும லந்தகாரமேதானுனவனுபவமிருக்கையாற்கூடும்.

வினு. சீவதரிசனமென்பது போதமோ அறிவோ பிராணனே ஞானமோ.

விடை. போதம், விஷயவுன்முக மாகையாலும் அறிவு விஷயவேதுவாய் ஜெனிக்கையாலும் பிராணன், சீவனுக்காதார மூலமாகையாலுங்கூடாது. ஞானம், அந்தர்முகஜீவசொருபமாகையாற்கூடும்.

வினு. சாட்சிதரிசனமென்பது பகிர்முகத்திரிபுடி ஞானமோ அந்தர்முகத்திரிபுடிஞானமோ சத்ரூபமோ ஆனந்தரூபமோ பரிபூரணமோ சுத்தஞானசொரூபமோ.

விடை. பகிர்முகத்திரிபுடிஞானம், சமாதியில்விஷயமின்ருகையாலும் அந்தர்முகத்திரிபுடிஞானம், தனக்குள்ள லட்சணமறிகையாலும் சத்ரூபம், உண்டென்னுமிலக்கண மாதலாலும் சித்ரூபம், பிரகாசவிலக்கணமாதலாலும், ஆனந்தரூபம், சுகசொரூபவிலக்கணமா

தலாலும் பரிபூரணம், பிரமவிலக்கணமாதலாலுங்கூடாது, சுத்தஞா னசொரூபம், சாட்சிநிஜசொரூப மாதலாற்கூடும்.

வின. விராட்டு தரிசனமென்பது தத்துவ சமஷ்டியோ பஞ்ச பூத வடுக்கோ நாமரூபாத்மகமோ பஞ்ச சாதாக்கியமோ அஷ்டமூர்த்தி சொரூபமோ விசுவரூபந் தானயிருப்பதோ,

விடை. தத்துவ சமஷ்டி தூல சரீரங் கூடுகையாலும் பஞ்ச பூதவடுக்கு பின்ன பின்னமா யிருக்கையாலும் நாமரூபாத்மகம் பூதகாரிய மாகையாலும் பஞ்ச சாதாக்கியம் தத்துவமூர்த்தி வடிவமாகையினலும் அஷ்டமூர்த்தி சொரூபம் ஈஸ்வர சகளமூர்த்தி சொரூப மாதலாலுங் கூடாது விஸ்வரூபத் தானயிருத்தல் விஸ்வமேவிராட்டு ரூபமாகையாற் கூடும்.

வின. இரணியகர்ப்ப தரிசனமென்பது விஸ்வவியாபக விருத்தியோ அகண்டாகார விருத்தியோ விஸ்வரூபமய விருத்தியோ,

விடை. விஸ்வ வியாபக விருத்தி விஸ்வமாத்திரம் வியாபிக்கையாலும் அகண்டாகார விருத்தி விஸ்வத்தைவிட விருத்தி வியாபிக்கையாலும் கூடாது விஸ்வரூப மயவிருத்தி விஸ்வரூப மாகையினலும் கூடும்.

வின. மாயாதரிசன மென்பது மாயாகாரியமோ மித்தையாகாரமோ அசத்தாகாரமோ மாயாகாரணமோ,

விடை. மாயாகாரியம் விஸ்வரூப மாகையாலும் மித்தையாகாரம் ஏதுமில்லாத தோற்ற வாகையாலும் அசத்தாகாரம் சுத்த அபாவமாகையாலுங் கூடாது மாயாகாரணம் தன்மயமாதலாற் கூடும்.

வின. ஈஸ்வர தரிசனமென்பது இச்சாவடிவோசர்வஞ்ஞத்வமோ நிர்மலபோதமோ நிர்மலவறிவோ நிர்மலஞானமோ,

விடை. இச்சாவடிவு இச்சாசத்தி வடிவமாதலாலும் சர்வஞ்ஞத்வம் மாயாசத்தி கூடியிருக்கையாலும் நிர்மலபோதம்அகங்காரசொரூபமாதலாலும் நிர்மலவறிவு பகிர்முக மாகையாலுங் கூடாது நிர்மலஞானம் சிவஞானமாகையாற் கூடும்.

வின. பிரமதரிசன மென்பது அந்தர்முகத் திரிபுடி ஞானமோ பகிர்முகத் திரிபுடிஞானமோ அகண்ட சத்ரூபமோ நிரதி சயானந்தமோ அகண்ட வியாபகமோ நிர்மல பூரணமோ அகண்ட சித்ரூப ஞானமோ,

விடை. அந்தர்முகத் திரிபுடிஞானம் லட்சணதரிசனமாகையா லும்,பகிர்முகத் திரிபுடிஞானம் தொய்தந்தோற்றுகையாலும் அகண் டசத்ரூபம் ஞானவீன மாகையாலும் நிரதிசயானந்தம் ஆனந்த தரி சனமாகையாலும் அகண்டவியாபகம் பிரபஞ்ச மிருக்கையினுலும் நிர்மல பூரணம் மாயை யிருக்கையினுலும் கூடாது. அகண்ட சித்ரூ பஞானம் நிசமாகையாற் கூடும்.

வினு. சத்து தரிசனமென்பது-சத்தை சொரூபமோ குணிரூ பமோ ஏகதேச சத்தோ சத்தையா ஞானமோ பாவலட்சணமோ,

விடை. சத்தைசொரூபம், நாமரூபத்தை விட்டிரா தாகையா லும் குணிரூபம், குணத்தை விட்டிரா தாகையாலும் ஏகதேசமாகை யாலும் சத்தையாஞானம், சத்தையுடன் ஞானஞ் சம்பந்தித் திருக் கையாலுங் கூடாது. பாவலட்சணம் அசத்தாய்ப்போகாம லுண்டெ ன்று விளங்குகையாற் கூடும்.

வினு. சித்து தரிசனமென்பது-விஸ்வவியாபகசித்தோ ஏகதேச சித்தோ நிர்மல சித்தோ பிரகாச சித்தோ வியாபக சித்தோ,

விடை. விஸ்வ வியாபகசித்து விஸ்வ மிருக்கையாலும், ஏகதேச சித்து ஏகதேச மாகையாலும், நிர்மலசித்து மாயாலட்சண மாகை யாலும்,பிரகாசசித்து சிற்சத்தி லட்சண மாகையாலுங் கூடாது. வி யாபகசித்து பரிபூரணமாகையாற் கூடும்.

வினு. ஆனந்த தரிசன மென்பது-நிவிர்த்தியானந்தமோ வித்தி யானந்தமோ சுத்தானந்தமோ காருண்யானந்தமோ கீர்த்தியானந்த மோ லயானந்தமோ நிரதிசயானந்தமோ,

விடை. நிவிர்த்தியானந்தம், துக்க நிவிர்த்தி யாகையாலும்,வித் தியானந்தம், சர்வஞ்ஞத்வ மாகையாலும்,சுத்தானந்தம், மலநிவிர்த் தி சுகமாகையாலும்,கீர்த்தியானந்தம், நிலைமையானந்த மாகையாலு ம்,லயானந்தம், உபசங்கார மாகையாலுங் கூடாது. நிரதிசயானந்தம் ஒழிவற்ற வானந்தமாகையாற் கூடும்.

வினு. பரப்பிரம தரிசனமென்பது-லயபரவசமோ தமோபர வசமோ பரிபாக பரவசமோ தரிசனு பரவசமோ மேலீடு பரவச மோ ஆனந்த பரவசமோ,

விடை. லயபரவசம், நிவிர்த்தி பரவச மாதலாலும், தமோபர வசம், மக்கின மாதலாலும், பரிபாகபரவசம், சத்தி நிபாத மாதலா

னும், தரிசனுபரவசம், தியானபரவச மாதலாலும்,மேலிடு பரவசம், அதிதபரவச மாதலாலும் கூடாது.ஆனந்த பரவசம், அடுத்ததரிசன மாதலாற் கூடும்.

வினு. சர்வசாட்சி தரிசனமென்பது-சர்வவிடயசாட்சியோசர் வசைதன்யசாட்சியோ அந்தர்முகத்திரிபுடிசாட்சியோ பகிர்முகத்தி ரிபுடிசாட்சியோ சர்வவியாபகசாட்சியோ,

விடை. சர்வவிடயசாட்சி, விடயமில்லாதாகையாலும்,சர்வசை தன்யசாட்சி, நானுசைதன்யமில்லை யாகையாலும்,அந்தர்முகத் திரிபு டிசாட்சி, சுத்தமுதலானதில்லையாகையாலும், பகிர்முகத் திரிபுடிசா ட்சி, சச்சிதானந்தமில்லை யாகையாலுங்கூடாது.சர்வவியாபக சாட்சி பூரணஞான மாகையாற்கூடும்.

வினு. சுத்ததரிசனமென்பது-சத்ரூபமற்றசுத்தமோ அபாவஅ சுத்தாபாவசுத்தமோ துக்காபாவசுத்தமோ ஆனந்தபாவசுத்தமோ ச ங்காரசுத்தமோ சர்வநேதிசுத்தமோ,

விடை. சத்ரூபமற்றசுத்தம், சத்ரூபலயத்திற் சித்ரூபப்பிரகா சமாகையாலும், அபாவ அசுத்தபாவசுத்தம், பிரபஞ்சவிடுதலைச் சத் தாகையினுலும்,துக்காபாவசுத்தம், துக்கநிவிர்த்தியிற் சுகஞ்ஜெனிக் கையாலும், ஆனந்தபாவசுத்தம்,ஆனந்தலயத்தில் துக்கஞ்செனிக்கை யாலும்,சங்காரசுத்தம்,பிராயச்சித்த மாகையாலுங்கூடாது. சர்வநே திசுத்தம், சமாதியிற் சுத்தத்திற்குக் கீழ்ப்பட்டதெல்லாந் தள்ளப்படு கையாற் கூடும்.

வினு. சூன்யதரிசனமென்பது-மகாசூன்யமோ சூன்யாசூன்ய மோ லயசூன்யமோ நிராலம்பசூல்யமோ மோகாந்தகார சூன்ய மோ சுத்தசூன்யமோ,

விடை. மகாசூன்யம், சூன்யமேலீடின்மையாலும், சூன்யாசூ ன்யம், சூன்யத்திற்குமேற் சூன்யமின்றுதலாலும், லயசூல்யம்,சூன் யலயமில்லா தாகையினுலும்,தமோசூன்யம், மக்கினமாகையாலும், நிராலம்பசூன்யம், நிர்மலவிருத்தி யிருக்கையாலும், மோகாந்தகார சூல்யம், மயக்கமிருக்கையாலுங்கூடாது. சுத்தசூல்யம், அடுத்தசுத் தலயத்திற் சூல்யமாகையாற்கூடும்.

வினு. சுபாவதரிசனமென்பது- நிர்ச்சுபாவமோ சத்தியசுபாவமோ சுத்தபாவமோ, தத்தர்மசுபாவமோ உபாதிசுபாவமோ சூன்யசுபாவமோ,

விடை. நிர்ச்சுபாவம், மந்தமாகையாலும், சத்திசுபாவம், அசத்தியலயத்திலுண்டாகையாலுஞ், சுத்தசுபாவம், அசுத்தபாவலயத்துண்டாகையாலும், தத்தர்மசுபாவம், தற்காரியமாகையாலும், உபாதிசுபாவம், அசுத்தசாத்திகமாகையாலுங்கூடாது. சூன்யசுபாவம், சமாதியிற் சுபாவத்திற் கடுத்ததாகையாற்கூடும்.

வினு. ஒழிவுதரிசனமென்பது- சூன்யவொழிவோ துக்காபாவவொழிவோ உபசாந்திவொழிவோ வியாபகலயவொழிவோ வாசனுவொழிவோ ஆரூடவொழிவோ சுத்த வொழிவோ அதீத வொழிவோ சர்வவொழிவோ,

விடை. சூன்யவொழிவு, சூன்யத்திற்குவேறு ஒழிவில்லையாகையாலும், துக்கபாவவொழிவு, துக்கநிவிர்த்தியிற் சுகோதயமாகையாலும், உபசாந்திவொழிவு, சாத்திகமாகையாலும், வியாபகலய வொழிவு, வியாபகலயத்தில் வியாப்பியவுதயம் பரிச்சின்ன மாதலாலும், வாசனுவொழிவு, விருத்திலயமாகையாலும், ஆரூடவொழிவு, ஒழிவுநீக்கமுண்டாகையாலும், சுத்தவொழிவு, அசுத்தலயவொழிவாகையாலும், அதீதவொழிவு, அதீதத்திற்கொழிவில்லை யாகையாலுங்கூடாது. சர்வவொழிவு, ஒழிவிலொன்றுமில்லை யாகையாற் கூடும்.

வினு. அதீததரிசன மென்பது- சர்வதாதீதமோ சர்வலயாதீதமோ லட்சணுதீதமோ சொரூபாதீதமோ சுத்தாதீதமோ சர்வதுக்காதீதமோ சுகாதீதமோ அந்தர்முகத் திரிபுடிஞானமோ பகிர்முகத்திரிபுடிஞானமோ சுவானுபவலயாதீதமோ,

விடை. சர்வாதீதம், ஒழிவிற்சர்வமுமில்லையென்றால் ஒழிவதீதத்திற் சர்வமும் வரக்கூடாதாகையாலும், சர்வலயாதீதம், மேற்பொருளிருக்கையாலும், லட்சணுதீதம், லட்சணதரிசனங் கீழ்ப்பட்டதாகையாலும், சொரூபாதீதம், சொரூபாதீதலட்சணக் கீழ்ப்பட்டதரிசனமாதலாலும், சுத்தாதீதம், யதார்த்தமாதலாலும், சர்வதுக்காதீதம், துக்காதீதத்திற் சுகாதீதமுதயமாகையாலும், சுகாதீதம் பரவசமாகையாலும் அந்தர்முகத்திரிபுடிஞானம், இந்தச்சமாதி யதீதலயமாகையாலும், பகிர்முகத்திரிபுடிஞானம், அதீததரிசனத்தில் சுத்த முதலிய

திரிபுடியின்மையினாலுங்கூடாது. சுவானுபவலயாதீதம், ஒழிவுக்கும்ப்பாற்பட்ட வதீதமாகையாற் கூடும்.

வினா. யதார்த்த தரிசனமென்பது- இதரயதார்த்தமோ சுத்தயதார்த்தமோ சமரசயதார்த்தமோ மக்கின யதார்த்தமோ அதீதலயயதார்த்தமோ,

விடை. இதர யதார்த்தம் விடயசம்பந்த மாகையினாலும் சுத்த யதார்த்தம், அரூடமா யிராமல் விடுதலும் பற்றுதலுமா யிருக்கையினாலும் சமரசயதார்த்தம், தள்ளப்படுகையினாலும், மக்கினயதார்த்தம்,தமசாகையினாலுங்கூடாது. அதீதலயயதார்த்தம்,அதீதலயமானவுடன்அடுத்தாற்போல் யதார்த்தம்வருகையாற் கூடும்.

வினா. இரகசியதரிசனமென்பது-பரமரகசியமோ அனுபவாதீதரகசியமோ அகோசரரகசியமோ குய்யாகுய்ய ரகசியமோ சர்வாபாவரகசியமோ அதிசயரகசியமோ,

விடை. பரமரகசியம்,பரமாம்சப்படி யொழுங்காகையாலும் அனுபவாதீதரகசியம், அதிசியானுபவ மிருக்கையாலும்அகோசரரகசியம்,அகோசரமற்றதாகையாலும் குய்யாகுய்யரகசியம், ரகசியத்திற்கும் ரகசியமில்லையாகையாலும் சர்வாபாவரகசியம்,மேற்பொருளிருக்கையினாலும் கூடாது. அதிசயரகசியம், இரகசியத்திலதிசயம்வருகையாற்கூடும்.

வினா. அறுதிதரிசனமென்பது, அமூர்த்தவறுதியோ உன்முகவறுதியோ வடிவறுதியோ வாசனவறுதியோ அனுபவ வறுதியோமக்கினவறுதியோ அதிசயவறுதியோ,

விடை. அமூர்த்தவறுதி, பதமூர்த்தியிருக்கையினாலும் உன்முகவறுதி உன்முகமில்லையாகையினாலும்வடிவறுதிமேற்படியொழுங்காகையாலும் வாசனவறுதி, வாசனையொழுவிற் போகையாலும் மக்கினவறுதி, அஞ்ஞானசமரசமாகையாலுங் கூடாது.அதிசயவறுதி, இதற்கடுத்ததில்லையாதலாற்கூடும்.

வினா. ஒடுக்கதரிசனமென்பது, சர்வலயவொடுக்கமோசொரூபவொடுக்கமோ உன்முகவொடுக்கமோ வாசனாதீத வொடுக்கமோ கவனவொடுக்கமோ சர்வவொழிவொடுக்கமோ,

விடை. சர்வலயவொடுக்கம், மேற்பொருளிருக்கையாலும்,சொரூபவொடுக்கம், சொரூபலட்சணாதீதங்கீழ்ப்பட்டதாகையாலும்,உன்

மூகவொடுக்கம், இதற்கு உன்முகாவுன்முகமில்லையாகையாலும், வாச னுதீதவொடுக்கம்,வாசனைபோனது கீழ்ப்பட்டதாகையாலும், கவன வொடுக்கம், காரணநாசங்கீழ்ப்பட்டதாகையாலுங்கூடாது. சர்வவொ வொடுக்கம், சர்வவொழிவுமொடுங்கினதாகையாற்கூடும்.

வினு. மோனதரிசனமென்பது- சொல்லிறந்தமோனமோவாச னுதீதமோனமோ மூகைமோனமோ அனுபவலயமோனமோ முத் திராமோனமோசர்வமுத்திலயமோனமோ தன்மயமோனமோ சர் வலயமோனமோ,

விடை. சொல்லிறந்தமோனம், ஒழிவுதரிசனத்தினீங்கலாலும், வாசனுதீதமோனம், இரகசியதரிசனத்தி னீங்கலாலும்,மூகைமோன ம்,மாயாலட்சணமாதலாலும்,அனுபவலயமோனம்,கீழ்ப்பட்டசமா தியாகையாலும்,முத்திராமோனம், கைகாட்டாகையாலும், சர்வமுத் திலயமோனம்,சாருவாகன்மதமாகையாலும்,தன்மயமோனம்,ஆத்ம தரிசனமாதலாலுங்கூடாது. சர்வலயமோனம், மோனத்திற்சர்வலய மாகையாற்கூடும்.

சம்பந்தம்.

வினு. இவ்விருபத்தைந்துபடியொழுங்கிற்குஞ் சம்பந்தமெப் படி,

விடை. தூலசரீரம் கிரியாசம்பந்தம், சூட்சுமசரீரம் விடயசம் பந்தம்,காரணசரீரம் அகங்காரசம்பந்தம்,சீவன்சித்தசம்பந்தம்,சாட் சிபுத்திசம்பந்தம்,விராட்டுபோகசம்பந்தம்,இரணியகர்ப்பம்விட்சே பசம்பந்தம்,மாயைமோகசம்பந்தம்,ஈஸ்வரன்இச்சாஞானக்கிரியாச ம்பந்தம், பிரமம்ஞானசம்பந்தம்,சத்துசத்தியசம்பந்தம்,சித்து வித் தியாசம்பந்தம்,ஆனந்தம் நிவிர்த்திசம்பந்தம்,பரப்பிரமம் ஆனந்தச ம்பந்தம்,சர்வசாட்சி சிற்சத்திசம்பந்தம்,சுத்தம்நேதிசம்பந்தம்,சூன் யம்லயசம்பந்தம்,சுபாவம் தன்மயசம்பந்தம்,ஒழிவு உபாதி சம்பந்த ம்,அதீதம் கேவலசம்பந்தம்,யதார்த்தம் வாசனுதியசம்பந்தம்,இரகசி யம்அதிசயசம்பந்தம்,அறுதி நிலையற்றசம்பந்தம்,ஒடுக்கம்ஒழிவுசம்ப ந்தம்,மோனம் சர்வாபாவசம்பந்தம்,மோனுதீதம் ஒருசம்பந்தமுமி ன்றித்தானேதானுயிருக்கும்.

பகிர்முகம் அந்தர்முகம்.

வினா. இவ்விருபத்தைந்துபடியொழுங்கிற்கும் பகிர்முகமந்தர்முகமெப்படி.

விடை. தூலசரீரத்திற்குப் பகிர்முகம் கிருத்தியம்,அந்தர்முகம் நிஷ்கிரியை சூட்சுமசரீரத்திற்குப்பகிர்முகம்பஞ்சவிடயம்,அந்தர்முகம் சித்தசஞ்சலம், காரணசரீரத்திற்குப்பகிர்முகம்தத்துவந்தெரியாதுமறைந்தது, அந்தர்முகம் அந்தகாரம், சீவனுக்குப்பகிர்முகம் கரணேந்திரிய சகாயமாய் விடயத்தைப்புசித்தல், அந்தர்முகம் அறிவுமாத்திரமாயிருத்தல், சாட்சிக்குப் பகிர்முகம் விடயம் விருத்திசீவன், அந்தர்முகம் நிராகாரம் நிர்விஷயம் நிர்மலம், விராட்டுக்குப் பகிர்முகம் வியட்டி, அந்தர்முகம் சமட்டி, இரணியகர்ப்பத்திற்குப் பகிர்முகம் தன்மாத்திரை, அந்தர்முகம் விட்சேபசத்தி, மாயைக்குப்பகிர்முகம் சர்வஞ்ஞத்வம், அந்தர்முகம் படிகவர்ணசொரூபம், ஈஸ்வரனுக்குப்பகிர்முகம் இச்சாஞானக் கிரியாசொரூபம், அந்தர் முகம் ஞானசொரூபம், பிரமத்திற்குப்பகிர்முகம் இச்சாஞானக்கிரியாதிரிபுடிசாட்சி, அந்தர்முகம் சச்சிதானந்தத் திரிபுடிசாட்சி, சத்துக்குப் பகிர்முகம் உண்டென்றுவிளங்குதல், அந்தர்முகம் சத்தை, சித்துக்குப்பகிர்முகம் அகண்டசித்து, அந்தர்முகம் சின்மயம், ஆனந்தத்திற்குப்பகிர்முகம் நிரதிசயானந்தம், அந்தர்முகம் திருப்தி, பரப்பிரமத்திற்குப் பகிர்முகம் ஆனந்தபரவசம், அந்தர்முகம்பரவச கேவலம், சர்வசாட்சிக்குப்பகிர்முகம் சச்சிதானந்தத் திரிபுடிசாட்சி, அந்தர்முகம்சுத்தசூன்ய சுபாவத்திரிபுடிசாட்சி, சுத்தத்திற்குப்பகிர்முகம் சுத்தபாவம், அந்தர்முகம் சத்திலயிக்கம், சூன்யத்திற்குப் பகிர்முகம் சித்துலயம், அந்தர்முகம் லயாதீதம், சுபாவத்திற்குப் பகிர்முகம் ஆனந்தாதீதம், அந்தர்முகம் ஆனந்தாயிக்யம், ஒழிவுக்குப்பகிர்முகம் ஆனந்தபரவசலயம், அந்தர்முகம் லயகேவலம், அதீதத்திற்குப்பகிர்முகம்சுத்தாதித்திரிபுடிசாட்சி, அந்தர்முகம் யதார்த்தாதித்திரிபுடிசாட்சி, யதார்த்தத்திற்குப்பகிர்முகம் தற்சுபாவம், அந்தர்முகம்சர்வலயசமம், இரகசயத்திற்குப் பகிர்முகம்அதிசயம், அந்தர்முகம் பரமரகசியாதீதம், அறுதிக்குப்பகிர்முகம் வாசனாலயம், அந்தர்முகம்வாசனாதீதம், ஒடுக்கத்திற்குப்பகிர்முகம் சர்வலயவுன்முகம், அந்தர்முகம் உன் முக

லயம், மோனத்திற்குப்பகிர்முகம் யதார்த்தாதித்திரிபுடிசாட்சி, அந்தர்முகம் நிஷ்டையில்மையாதித் திரிபுடிசாட்சியென்றறிக.

மௌனாதீதத்தன்மயத்திற்குப்
பகிர்முகம் அந்தர்முகம்.

வினா. மௌனாதீதத் தன்மயத்திற்குப் பகிர்முக மந்தர்முகமெப்படி,

விடை. ரச்சுவென்றுகண்ட வுடனதைத்தவிரச் சர்ப்பமில்லாது போலும், கிளிஞ்சிலென்று கண்டவுடன் வெள்ளியில்லாதுபோலும், கட்டையென்றுகண்டவுடன் கள்ளனில்லாதுபோலும், சலமென்றுகண்டவுடன் ஏரி குளம் மடு வில்லாது போலும், மரமென்று கண்டவுடன் ஆனைமுதலிய தில்லாதுபோலும், ஆகாசமென்று கண்டவுடன் நீலநிறம் ஆகாயபுஷ்பம் கடாகாசம் மடாகாசமுதலிய பலசித்திரங்களில்லாதுபோலும், மிருத்திகையென்று கண்டவுடன் கடகல சாதிகளும், பொன்னென்றுகண்டவுடன் ஆவரணவகைகளும், வந்தியென்று கண்டவுடன் நானாபுத்திரரும், சலமென்றுகண்டவுடன் நானாரச வன்னமும், சங்கென்றுகண்டவுடன் பொன் வன்னமும், படிகமென்றுகண்டவுடன் சிவப்பு கறுப்பு முதலிய பலநிறமும், அக்கினியென்று கண்டவுடன் பேதவக்கினிகளும், சந்திரனொன் றென்றறிந்தவுடன் இரண்டுசந்திரனும், தொனியொன் றென்றறிந்தவுடன் நானாவர்ண ராகவாக்கியங்களும், சுசாதியொன்றென்றறிந்தவுடன் நானாரூபவர்ணங்களும், சூரியன்பலபாண்டசலத்திற் பலவாகத்தோற்றினு மொவ்றென்றறிந்தவுடன் இரண்டுசூரியனும், லக்கம்பலவானாலும் பிந்தொன்றொழிய விரண்டில்லாதுபோலும், சமாதிகளும்நானாவாயிருபத்தைந்துபடி யொழுங்காய்த்தோற்றினாலும் அதுகள் தன்னைத்தவிர இல்லையென்றிருப்பதே பகிர்முகம், அன்றியும் எல்லாவற்றிற்கு மப்பாற்பட்ட விலட்சணமான தானேதானாயிருப்பதே அந்தர்முகமென்றறிக.

அயிக்யதாதாத்மியம்.

வினா. இவ்விருபத்தைந்துபடி யொழுங்கிற்கு மொன்றோடொன்றயிக்ய தாதாத்மியமெப்படி,

விடை. தூலசரீரமுஞ் சூட்சுமசரீரமும் உடனுருயிரும்போலும், சூட்சுமசரீரமுங்காரணசரீரமும் மோகமு மோகியும் போலும்,

காரணசரீரமுஞ் சீவனுஞ்சலமும் பிரதிபிம்பமும் போலும், சீவனு ஞ்சாட்சியும் சலப்பிரதிபிம்பமும் சூரியனும் போலும், சாட்சியும் விராட்டும் தீபப்பிரவைபயும் கடபடாதிகளும்போலும், விராட்டும்இ ரணியகர்ப்பமும் கதலித்தண்டும் மட்டையும்போலும், இரணியகர் ப்பமும் மாயையும் வாய்வு மாகாசமும் போலும், மாயையு மீசுர னுங்கண்ணாடியும் சூரியப்பிரதிபிம்பமும்போலும் ஈசுரனும்பிரமமு ம் பிரதிபிம்பமும் சூரியனும்போலும்,பிரமமுஞ்சத்தும்கோவுமில ட்சணமும்போலும்,சத்துஞ்சித்தும் பிரபஞ்சமுஞ் சூரியப்பிரபை யும்போலும்,சித்தும் ஆனந்தமும் சுகியுஞ்சுகமும் போலும், ஆனந் தமும்பரப்பிரமமும் மூர்ச்சிதனும்மூர்ச்சையும்போலும், பரப்பிரம முஞ்சர்வசாட்சியும்பரவசனும்அவனையறிவானும் போலும்,சர்வசா ட்சியும் சுத்தமும்பிராயச்சித்தவானும்பிராயச்சித்தமும்போலும்,சுத் தமுஞ்சூன்யமுமுயலுங்கொம்பும்போலும், சூன்யமுஞ்சுபாவமும் பொய்யும்பொய்யென்றதசத்தியமெனுஞ்சொல்லும்போலும்,சுபா வமுமொழிவும்நாதமும்நாதவொடுக்கமும்போலும், ஒழிவுமதீதமும் நாதமும்நாதலயமும்போலும்,அதீதமும்யதார்த்தமுங்கன்மமுடிவு மதின்பலமும்போலும்,யதார்த்தமும்ரகசியமும்வசிஷ்டருமருந்ததி யும்போலும்,ரகசியமுமறுதியும்அருந்ததியுங்கற்பும்போலும், அறுதி யுமொடுக்கமும் செல்வமும் காஞ்சனமும்போலும்,ஒடுக்கமும்மோ னமும்வேதமும்பொருளும்போலும், மோனமும் மோனாதீதமும் ஊமனும்ஊமன்கனவும்போலுமென்றறிக.

முத்தி பேதம்.

வினா. ஐந்துபதத்திலும் வாச்சியமைந்து லட்சியமைந்துஆகப் பத்திற்கு முத்திபேதமெப்படி,

விடை. தொம்பதவாச்சியநீங்கித்தாதாத்மியம்போனதினுல்தா தாத்மியமுத்தனென்றும், தொம்பதலட்சியமான சாட்சிதானுய்சீவித் திருக்கையில் முத்தனானபடியினால் சீவன்முத்தனென்றும், தற்பதவா ச்சிய நீங்கித்தத்துவ நீங்கினபடியால்தத்துவமுத்தனென்றும்,தற்பத லட்சியமானபிரமந்தானுய்தேகாதிப்பிரபஞ்சமில்லாதபடியினால் வி தேகமுத்தனென்றும்,அசிபதவாச்சியநீங்கிலட்சணம் போனபடியா ல் லட்சணமுத்தனென்றும், அசிபதலட்சியமானசர்வசாட்சிதானுய்

ஒரு லட்சணமு மில்லாத படியினல் லட்சண சூனிய கைவல்ய முத்தனென்றும், அதிபத வாச்சிய நீங்கி லட்சியம் போனதினல் லட்சிய முத்தனென்றும், அதிபத லட்சியமான அதீத சாட்சிதானுய் லட்சியாதீத மாகையினல் அதீதமுத்த னென்றும், நிசபாத வாச்சிய நீங்கிவாசனை நீங்கினபடியால்வாசனுமுத்தனென்றும்,நிசபதலட்சிய மானமோனந்தானுய் வாசனுதீதமானபடியினல்மோன முத்தனென்றும்,மோனுதீந்தனுய்மோன நீங்கினபடியினல்சர்வலயோன்னதமுத்தனென்றுமறிக,

வினு. நீர்சகலசமயசாஸ்திரகர்த்தாக்களுமங்கீகரித்தசைதன்யநிலைகளைப்பொருளல்லவென்றுதள்ளுவதென்னை.

விடை. மோனுதீதவஸ்துவுக்கு மற்றதெல்லாம்முப்பத்திரண்டு லட்சணங்களால் அதுகள்பொருளல்ல வென்றுதள்ளப் பட்டனவென்றறிக.

முப்பத்திரண்டு லட்சணம்.

வினு: முப்பத்திரண்டுலட்சணமாவதெப்படி,

விடை. அசத்தியம், சடம், துக்கம், பரிச்சின்னம், அனித்தியம், மோகம், நிவிர்த்தியாநந்தம், பாவனைதாதாத்மியம், சொரூபப்பிரபஞ்சலட்சணம், அசகசம், பிரதக்கு,சித்தி,சேஷம், மலம், மாயை, கன்மம், தூலம், சூட்சுமம், காரணம். உற்பத்திலயம், மித்தை, பிரத்தியட்சம், அனுமானம், உவமானம்,சத்தம், அருத்தாபத்தி, அபாவம், ஐதிகம், சம்பவம், எனமுப்பத்திரண்டுலட்சணங்களாம்.

வினு. இந்தமுப்பத்திரண்டுலட்சணமும் இதற்குவிலட்சணமானமோனுதீதவஸ்து லட்சணமும் புலப்படச்சொல்லவேண்டும்.

விடை. ஆசிரியர் ஒருமொழிவாக்கியமுபதேசிக்கும்போதுசிஷன் எதைத்தானென்றவஸ்துவாய்க்கொள்ளுவதென்றுகேட்க. ஆசிரியர் முப்பத்திரண்டுலட்சணமுமுள்ளதுஇது, இந்தலட்சணங்களுக்கு வி

லட்சணமானவஸ்து அது;அதுவேதானாயிருக்குமௌனாதீதநிலை யென்று அனுக்கிரகஞ்செய்தருளினார் ஆதலால்மேற்சொல்லியபடியொழுங்குஇருபத்தைந்தும் ஒன்றுகண்டாலொன்றுகாணாதபடியினால்அசத்து,அதுசத்து, இவ்விருபத்தைந்தும் ஞானங்கூடினாற்றோற்றித்தொழிற்படும் ஞானங்கூடாதபோது தோற்றரவுந்தொழிலுமில்லையாகையால் சடம், அதுசித்து, இவ்விருபத்தைந்தும் அநாதிபழக்கமான பிரபஞ்சவாசனையைவிட்டுவருத்தமாய்ச்சமாதிசாதிக்கையினால்துக்கம், அது சுகசொரூபம்; இவ்விருபத்தைந்தும்ஒன்றுபோலிராமற்பேதாபேதமாயிருப்பதாற் பரிச்சின்னம் அது, பரிபூரணம், இவ்விருபத்தைந்தும் சமாதியில் விளங்கிமற்ற வேளையிலில்லாதாகையால் அநித்தியம், அது நித்தியம், இவ்விருபத்தைந்தும் தானாயிருந்துந்தானாகாமல் ஆனவனுக்குமன்னிய மாகையால் அன்னியம், அது அனன்னியம், இவ்விருபத்தைந்து மறிவதற்கு மோகத்தைக் கொடுக்கையால் மோகம், அது மோகம், பிரபஞ்சத் துக்கமென் றறிந்து அதை நிவிர்த்திக்கும்பொருட்டு இவ்விருபத்தைந்து சமாதியிலும்பழகிச் சுகமடைகையால்நிவிர்த்தியானந்தம், அது ஆனந்தாதீதம், இவ்விருபத்தைந்துங் குருமுகமாய்க்கேட்டுப் புத்திவிருத்தியிற் றோற்றுகையால் பாவனை, அதுபாவனாதீதம், இவ்விருபத்தைந்தும் தானான தாதாத்மியமாதலால் தாதாத்மியம், அது தாதாத்மிய நிவிர்த்தி, இவ்விருபத்தைந்தும் நாமரூபத்துடன் சொரூபப்பிரபஞ்ச மாகையால் சொரூபப்பிரபஞ்சம், அது சொரூபப்பிரபஞ்சாதீதம், இவ்விருபத்தைந்தும் லட்சணத்துடன் கூடியிருக்கையால் லட்சணம், அது லட்சியம், இவ்விருபத்தைந்தும் சமாதியில்லாதபோது விளங்காதாகையால் அசகசம் அது. சகசம், இவ்விருபத்தைந்தும் ஒன்றோடொன்று கூடாதாகையால் பிரதக்கு, அது அப்பிரதக்கு, இவ்விருபத்தைந்தும் சமாதிசாதனோபாதியிற் சித்திக்கையால் சித்தி, அதுசித்திவிலட்சணம், இவ்விருபத்தைந்தும் நேதி நேதி யென்று தள்ளப்படுகையால் சேஷம், அது அசேஷம், இவ்விருபத்தைந்தும் ஞானாயாவத்தி

ல்மறைப்பாகையால் மலம், அது அமலம், இவ்விருபத்தைந்தும்பதா
ர்த்தவஸ்துவைவிட்டு மயக்கத்தினாலிதுகளே பொருளாய்த் தோற்று
கையினால் மாயை, அது, மாயாரகிதம், இவ்விருபத் தைந்தும் ஒன்
றை நீக்கிக்கொண்டொன்றிற்பற்றுகையால்கன்மம், அது அகன்மம், இ
வ்விருபத் தைந்தும்மேற் பொருளுக்குத்தனுவாகையால்தூலசரீர
ம், அது தூலவிலட்சணம், இவ்விருபத்தைந்தும் மேற்பட்டபொரு
ளுக்கடுத்துமேற்பட்டுள்ளதாகையால்சூட்சுமசரீரம், அதுசூட்சுமாசூ
ட்சுமவிலட்சணம், இவ்விருபத்தைந்துமொன்றுக்கொன்றுகாரணமா
கையால் காரணம், அதுகாரணாகாரணவிலட்சணம், இவ்விருபத்தைந்
தும்தரிசனவேளையிலுற்பத்தியும் மற்றவேளையில்லயமு மாகையால்
உற்பத்திலயம், அதுஉற்பத்திலயவிலட்சணம், இவ்விருபத்தைந்தும்
மேற்பொருளிற்கானற்சலம் போற்றோற்றுகையால்மித்தை, அதுமித்
தையாவிலட்சணம், இவ்விருபத்தைந்தும் சமாதியில் ஞானப்பிரத்தி
யட்சமாகையால் பிரத்தியட்சம், அது பிரத்தியட்சாதீதம், இவ்விரு
பத்தைந்தும் மறைப்புநீக்கத்திற்பதார்த்தந்தோற்றுகிறதுபோலஞ்
ஞான நீக்கத்திற்றோற்றுமென்றறிகையால் அனுமானம், அதுஅனு
மானவிலட்சணம், இவ்விருபத்தைந்தும் குருவாக்கிய வுவமானப்ப
டிபாவிக்கச் சித்திக்கையால்உவமானம், அதுஉவமானரகிதம், இவ்விரு
பத்தைந்தும் வேதாகமவசனப்படி விளங்குகையால்சத்தம், அதுவே
தாகமாதீதம், இவ்விருபத்தைந்தும் இன்னலட்சண மிதற்கிருக்குமெ
னக்கேட்டு அன்னலட்சண மதற்கிருக்கக்கண்டறிகையால் அருத்தாப
த்தி, அது அருத்தாபத்தி விலட்சணம், இவ்விருபத்தைந்தும் புத்திக
ற்பிதத்தாற்றோற்றுவதன்றிக் காலத்திரயத்திலுமில்லையாகையால் அ
பாவம், அதுபாவாபாவ விலட்சணம், இவ்விருபத்தைந்தும்பரம்ப
ரையாய்க்கேட்டறிகையால்ஐதிகம், அதுஐதிகவிலட்சணம். இவ்விருப
த்தைந்தும் ஐந்துபதத்துள்நான்குபதமும்நான்கினுள்மூன்றுபதமு
ம்மூன்றினுள்இரண்டுபதமும் இரண்டினுள் ஒருபதமுமிருக்கையால்
சம்பவம், அது சம்பவாதீதமென்றறிக. ஆதலால்இதுவென்றது, வாச்

சியவாக்கியம். அதுவென்றது, அவாந்தரவாக்கியம். நீயென்றது, மகாவாக்கியம். இவற்றுள் அசம்பாவனைவிபரீதபாவனை நீங்கும்படி ஸ்ரீசற்குருவுக்குச் சிசுருஷைசெய்து அவரதுபரிபூரணகிருபாகடாட்சவீட்சண்யத்தினற்றெளிந்து சாட்சாத்காரமானது நிவிர்த்திவாக்கியமென்றறிகவென்று ஸ்ரீகயிலாசபதியாகிய ஸ்ரீதட்சிணாமூர்த்தி சுவாமிகள் சனகாதிகள் நால்வருக்குந்திருவுளம்பற்றியருளினர், கேட்டீர்களோ நைமிசாரண்யவாசிகளாகிய முனிவர்களேயென் றூருதமகாமுனிவர்திருவாய்மலர்ந்தருளினர்.

குருஸ்துதி.

கட்டளைக்கலித்துறை.

ஐவகைத்தூலமுஞ்சூட்சுமகாரணமாமறிவு.... ....*
மெய்வகைச்சாட்சியோனாந்துமறிவித்துமேன்மையதா ....*
வுய்வகையாயதுநீயென்றோர்வார்த்தையொருமொழியைக்.........*
கைவசமாகவருள்சவுபாக்கியகாரணனே ....*

வெண்பா.

அதுவதுவாய்நின்றவனுபவங்களையந்......... *
ததுவதுவாய்நின்றறிவித்தன்றி - யதுவதுவுந் ... *
தானல்லால்வேறில்லையென்றூல்றனிநின்ற........ *
தானறிவானந்தனெங்கோன்றான்.................. *

பஞ்சபதமகாவாக்கியம்

முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

பஞ்சபதமகாவாக்கியவ

வாக்கியம்.

பஞ்சபதமகாவாக்கியவகராதி
முற்றுப்பெற்றது.